Registered as a News paper

# சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை:7 வள்ளுவர் ஆண்டு2028 மார்கழி 12 சனிக்கிழமை (27-12-1997) SANJEAVY-Regenerative Tamil Weekly சிகரம்:30

# வேட்பாளருக்கு பாதுகாப்பு வழங்குவது பற்றி ஆராய்வு

## பொலீஸ், முப்படைத் தளபதிகளுடன் தேர்தல் ஆணையர் திங்கள் பேச்சு

கொழும்பு, டிசம்பர் 27

யாழ். குடாநாட்டில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு பாதுகாப்பு வழங்குவது குறித்து தேர்தல் ஆணையாளர் நாளை மறுதினம் பொலீஸ் மா அதிபருடனும் முப்படைத் தளபதிகளுடனும் விரிவாகப் பேச்சு நடத்தவிருக்கிறார்.

கொழும்பு சென்றிருக்கும் ஈ.பி.ஆர் எல்.எவ். செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று அங்கு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவைச் சந்தித்து யாழ். தேர்தல் நிலைமை குறித்து விரிவாகப் பேச்சு நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அப்போது வேட்பாளர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து ஈ.பி.ஆர். எல்.எவ். செயலாளர் நாயகம் வற்புறுத்தியதாகக் கூறப்பட்டது.

திங்களன்று முப்படைத் தளபதிகளையும் பொலீஸ் மா அதிபரையும் சந்தித்து பேசும் போது இதுகுறித்து ஆராய்ந்து முடிவு தெரிவிப்பதாகத் தேர்தல் ஆணையாளர் உறுதியளித்தார்.

குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் சகல கட்சிகளினதும் தலைவர்களை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கொழும்பில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அதிரடிக்கு 5 துணைப் படையினர் பலி!

### மட்டக்களப்பில் நேற்று சம்பவம்

மட்டக்களப்பு, டிச. 27

மட்டக்களப்பு மாவட்டம் தளவாய் என்னுமிடத்தில் நேற்று முற்பகல் 10.45 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஐந்து துணைப்படை உறுப்பினர்கள் உயிரிழந்தனர். இச் சம்பவத்தில் சிக்கிப் பொதுமகன் ஒருவர் உயிரிழந்தார்.

இப் பகுதியில் விடுதலைப் புலிகளைத் தேடிச் சென்ற துணைப்படை அணி ஒன்றை புலிகள் சுற்றிவளைத்துத் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழர்களைக் கொண்ட இந்தத் துணைப்படை கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் படையினருடன் இணைந்து செயற்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

## கிறிஸ்மஸ் தாத்தாக்களும் படையினரின் சோதனையில்!

கொழும்பில் கிறிஸ்மஸ் தாத்தாக்களும் படையினரின் பலத்த சோதனைக்குட்படுத்தப்படுவதாகக் கூறப்படுகின்றது.

கிறிஸ்மஸ் தாத்தா வேடத்தில் புலிகள் நகரில் ஊடுருவலாம் எனச் சந்தேகிக்கப்படுவதால் வீதியில் கரோல் சேவையில் ஈடுபடும் கிறிஸ்மஸ் தாத்தாக்கள் கடும் சோதனை செய்யப்படுகின்றனர்.

அவர்கள் எடுத்துச் செல்லும் பரிசுப்பொருள்களும் துருவித்துருவி ஆராயப்படுகின்றன. (உ-164-3)

### உணவு, மருந்து வசதியின்றி

## கிளிநொச்சி கிராமம் ஒன்றில் 13 பேர் 23 நாள்களில் பலி!

கிளிநொச்சியில் ஜெயபுரம் கிராமத்தில் உள்ள இரு குடியிருப்புக்களில் கடந்த 23 நாள்களில் போதிய உணவு, மருந்து வசதிகள் இன்றி 13 பேர் உயிரிழந்துள்ளதாக வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

கோபி குடியிருப்பில் கடந்த 23 நாள்களில் 7 பேரும் —

விநாயகர் குடியிருப்பில் 6 பேரும் — உயிரிழந்துள்ளனர்.

சிறுவர் முதல் வயதுவந்தோர் வரை இறந்தவர்களில் அடக்குவர்.

உணவு பற்றாக்குறை, மருத்துவ வசதி கிடைக்காமை, போசாக்கின்மை, வறுமை போன்ற காரணங்களினாலேயே இந்த மரணங்கள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அரசாங்கத்தால் இவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படாததால் ஒருநேரச் சாப்பாட்டுடன் இவர்கள் வாழ்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

போக்குவரத்து வசதியில்லாத காரணத்தால் வன்னியின் ஏனைய பகுதிகளுடன் தொடர்புகள் இழந்த நிலையில் இவர்கள் வாழ்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-164)

## முதலாம் திகதி முதல் பாண் விலை 9 ரூபா!

யாழ்ப்பாணம், டிச. 27

பாணின் விலையை எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து 9 ரூபாவாக விலை உயர்த்துவதென யாழ். செயலகத்தில் நேற்று நடந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் நடந்த இந்தக்கூட்டத்தில் கலந்து கொண்ட பேக்கரி உரிமையாளர் சங்கப்பிரதிநிதிகள், ப. நோ. கூ. சங்கப் பிரதிநிதிகள், நுகர்வோர்பாதுகாப்பு சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் பாணின்விலையை உயர்த்துவது தொடர்பாக விரிவாக ஆராய்ந்தனர்.

பாண் தயாரிப்பதில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் 350 கிராம்பாணை 9 ரூபாவாக உயர்த்துவதென முடிவு செய்யப்பட்டது.

தற்சமயம் குடாநாட்டில் பாணின் விலை 8 ரூபா 50 சதமாகும். (உ-3)

## வேட்புமனு நிராகரிப்பை எதிர்த்து ஈ.பி.ஆர்.எல்.எவ். நீதிமன்றுக்கு!

### திங்கள் அல்லது செவ்வாய் வழக்குத் தாக்கல்

கொழும்பு, டிச. 27

குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிடுவதற்காக நாலு பிரதேச சபைகளில் தாக்கல் செய்த தமது வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து ஈ.பி.ஆர். எல். எவ். அமைப்பு திங்கள் அல்லது செவ்வாயன்று கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில்வழக்கு தாக்கல் செய்யும்.

அக்கட்சியின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் இத்தகவலை வெளியிட்டார்.

ஈ.பி.ஆர். எல். எவ் சார்பில் ஊர்காவற்றுறை, வடமராட்சி தென் மேற்கு, சாவகச்சேரி, வலி-வடக்கு, பருத்தித்துறை பிரதேச சபைகளுக்கும் தாக்கல் செய்த வேட்புமனுக்களை தேர்தல் அத்தாட்சி அலுவலர் நிராகரித்திருந்தார்.

கட்சிச் செயலாளர் நாயகத்தின் கையொப்பம் சமாதான நீதிவானால் உறுதிப்படுத்தப்படவில்லை என்று தெரிவித்து ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டது. ஏனைய நான்கு மனுக்களும் போட்டியிடும் வேட்பாவரின் வயதுத்தகுதியீனம் காட்டி நிராகரிக்கப்பட்டன.

இந்த 4 மனுக்களும் நிராகரிக்கப்பட்டதை ஆட்சேபித்தே ஈ.பி.ஆர்.எல்.எவ். வழக்கு தாக்கல் செய்யவிருக்கிறது.

தேர்தலுக்கு முன்னர் இத்தகைய வழக்கு விசாரித்து முடிக்க வேண்டும்என்பதால்-

தற்போது நீதிமன்ற விடுமுறையாக இருந்த போதும் இத்தகைய வழக்கு தாக்கல்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் படையினர் இருவர் பலி!

வாவுனியா, டிச. 27

வவுனியா குவாறிப் பகுதியில் ரோந்து சென்ற படையினர் மீது நேற்றுக்காலைமேற்கொண்ட தாக்குதலில் 2 படையினர் உயிரிழந்தனர் என்று "புலிகளின் குரல்" தெரிவித்தது. (உ-3)

## பேத்தாளையில் தாக்குதல்

வவுனியா, டிச. 27

வாழைச்சேனை பேத்தாளை இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை 6.30 மணியளவில் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

சேத விபரம் தெரியவரவில்லை.

படையினர் பதில் தாக்குதல் நடத்தி இத்தாக்குதலை முறியடித்ததாக படை வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-3-9)

## மாணவிமீது சிப்பாய் பாலியல் வல்லுறவு

### வவுனியாவில் சம்பவம்

வவுனியா, டிச. 27

வவுனியாவில் பாடசாலை மாணவி ஒருத்தி இராணுவ நாசகார ஒழிப்புப் பிரிவைச் சேர்ந்த சிப்பாய் ஒருவரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

வவுனியா நகரப் பகுதியில் பாடசாலை மாணவி ஒருவர் குடும்பப் பெண் ஒருவருடன் சென்றுகொண்டிருந்த சமயம் அவர்களை வழிமறித்துச் சோதனையிட்ட சம்பந்தப்பட்ட சிப்பாய் தங்குமிடப் பாஸ் வைத்திருக்கவில்லை என்று கூறித் தர்மலிங்கம் வீதியில் உள்ள விடுதி ஒன்றுக்கு இருவரையும் அழைத்துச் சென்றதாகவும்—

அந்தச் சிப்பாயின் நோக்கத்தைப் புரிந்துகொண்ட அந்தக் குடும்பப் பெண் ஒருவாறு அவரது பிடியில் இருந்து தப்பினார் எனவும்—

மற்றையவரான கந்தையா

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மந்துவிலில் மோதல்

சாவகச்சேரி, டிச. 27


தென்மராட்சி மந்துவிலில் செம்பாடு என்னும் இடத்தில் நேற்றுக் காலை 7.00 மணியளவில் இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

புதுமையும் எழிலும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## செல்லப்பா குலசேகரம்
(மயிலிட்டி)
(குமார்) (குலப்)

(ரெட்ணா பேக்கரி உரிமையாளரும், தென்மராட்சிக் கிளை உப தலைவரும், புதிய உயர் கல்லூரி மாணவன், பேராதனைப் பல்கலைக்கழக இறுதி ஆண்டு (B. A Final) வெளிவாரி மாணவன்)

ஆண்டவன் படைப்பு: **17 – 08 – 1970**

பொறாமையின் அழிப்பு: **13 – 11 – 1997**

எங்கள் குலம் காக்க வந்த குலக்கொழுந்தே குலம்
நண்பர்கள் அன்புடன் அழைக்கும் குலம நீயல்லவோ?
நீ பூத்துக் குலுங்கவில்லை உன் புதுவாழ்வு நாம்
பார்க்கவில்லை
வாழ்வரிசி நாம் போடவில்லை வாய்க்கரிசி
போட்டுவிட்டோம்

ஆலமரமாய் நீயிருந்தாயன்று - அங்கு
அநேகம் பறவைகள் (உறவுகள்) வந்து போயினவே
விழுதுகள் விட்டு நீயும் வளருமுன்னே
விஷமிகள் உன்னை வீதியிலே வீழ்த்திவிட்டார்
கதி கலங்கி கதறினோமே நாங்கள்
நிலை குலைந்து அலறியதே உந்தன் கூட்டம்
பல் கலைக் கழகந்தன்னில் பருத்து நீ வரும் தருணம்
பசளையாக்கிய அந்தப்பாவி மகன் பழாகிப் போக
பரந்தாமன் அருள்வானடா!
உன்னுடைய பதவியும், படிப்பும் ஊர்திகளும்
உடையழகு ஆபரணம் அந்த உலுத்தன் கண்ணிற்
பட்டதடா

உன்நிழலுக்காய் காத்திருக்கும் இரு சகோதரிகள்
ஊனமுற்ற உன்னண்ணன் உனையீன்ற அன்னை
தந்தை

உன் பண்பு அவன் கண்ணிற் படவில்லையடா
உன் சோறு உண்டவன் உனைக் கூட்டிச் சென்று
கொலைக்களத்தில் விட்டானடா
உற்றகதை எள்ளளவும் எடுத்துரைக்க
மறுத்துவிட்டான்

குற்றமதைச் சொல்லென்று கேட்டாயாமடா
சொன்னானா? அந்த கொலைக்காரன் இல்லையே?
ஊர்தியுடன் உன் அடையாள அட்டை நாளேடு
அவனெடுத்துச் சென்றுவிட்டான்
உனக்கு நடந்த கதை என்னவென்று - நீயாகிலும்
நாமறியச் சொல்லனடா
ஒருவரின் நிம்மதியைக் குலைத்து - இன்னொருவன்
வாழ்ந்த கதை இப்புவியில் இல்லையடா
கடவுள் மேல் பாரம் போட்டு கதிகலங்கி
நிற்கின்றோம்

இறைவனுடன் நீயிருந்து எமை வழி நடத்த
வேணுமடா

இருள் போக்க ஏற்றும் எம் இல்ல விளக்கின்
ஒளியாக நீ வருவாயடா

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

27-12-1997 (சனிக்கிழமை) இன்று எமது இல்லத்தில் நடைபெறும் குலத்தின் அந்தியேட்டிக் கிரியைக்கு ஆசிரியர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அவர் பிரிவால் துயருறும்:

**பெற்றோர், சகோதர சகோதரிகள்.**

நுணாவில் மேற்கு. (52077)

## ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு, டிச. 27

கரவெட்டிப் பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் 8 கிளைமோர் கண்ணி வெடிகள், 11 கைக் குண்டுகள், 5 நிலக்கண்ணி வெடிகள் மற்றும் பெருமளவு ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. (உ-9)

## ஆசிரியர் பயிற்சி: நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், டிச. 27

ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுக்கு அனுமதிக்கு விண்ணப்பித்து, கொழும்புக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள், கொழும்பு செல்ல தமக்கு வசதியில்லாவிடின் யாழ்ப்பாணத்தில் அந்த நேர்முகப்பரீட்சைக்குத் தோற்ற முடியும். அதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 29,30,31 ஆம் திகதிகளில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு இவர்கள் உரிய ஆவணங்களுடன் தோற்றலாம் என்று கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் காரை. சுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார். (உ-3)

## ஊனமுற்றோர் தின நிகழ்வு

வடமராட்சி, டிச. 27

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவின் சர்வதேச ஊனமுற்றோர் தின நிகழ்ச்சி இன்று சனிக்கிழமை வடமராட்சி இந்துமகளிர் கல்லூரியில் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி தலைமையில் நடைபெறவுள்ளது. மந்திகை அரசினர் வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி. கதிரவேற்பிள்ளை, முன்னாள் பிரதம கணக்காளர் வைன் கே. தணிகாசலம், யாழ். மாவட்ட போருட் திட்ட இணைப்பாளர் என். கோகுலதாசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

ஊனமுற்றோர் பங்குபற்றும் பல்வேறு போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் என்பன நடைபெறும். (ஐ-173)

## மிதிவெடியில் கால் இழப்பு

யாழ்ப்பாணம், டிச. 27

துணி காயவைப்பதற்காக வேலிக் கருகில் சென்ற சமயம் அங்கு புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடி வெடித்ததில் ஒருவர் ஒரு காலை இழந்தார்.

இச்சம்பவம் நேற்று மதியம் 1 மணிக்கு மல்லாகத்தில் இடம்பெற்றது. மல்லாகத்தைச் சேர்ந்த இ. செல்வராஜா (வயது 45) என்பவரே காலை இழந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ 9-ரி)

## லங்கா சிமெந்து ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம், டிச. 27

லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்களின் ஒக்ரோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களுக்குரிய சம்பளக் கொடுப்பனவு நாளை மறுதினம் திங்கட்கிழமையும் மறுநாள் செவ்வாய்க்கிழமையும் யாழ். வர்த்தக வங்கியில் காலை 9 மணி முதல் 12.30 மணி வரை வழங்கப்படவுள்ளது. (ஐ)


### லிபேட்டி சினிமா
அச்சுவேலி.
30 அடி அகலத் திரையில்
25-12-97 முதல்
ரஜனி, நக்மா நடித்த
பாட்ஷா
நேரம் 10-30, 2-30
(51893)


# மரண அறிவித்தல்கள்

## செல்லமுத்து குமாரகுலசிங்கம்

சுழிபுரத்தை பிறப்பிடமாகவும், வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லமுத்து குமாரகுலசிங்கம் 26-12-97 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரகுலசிங்கத்தின் அன்பு மனைவியும், திருமதி தங்கரட்டினம் கந்தசாமியின் அன்புத் தாயாரும், திருமதி திருக்குமாரி கணேசலிங்கம் (ஆசிரியை, உரும்பிராய் சைவத்தமிழ்வித்தியாலயம்), அருணகிரிநாதன் (Bahrain), திருமதி சந்திரகுமாரி பரமேஸ்வரன் (Canada), அருள்சோதிநாதன் (புகையிரத நிலையம், திருமலை), திருமதி ஆனந்தகுமாரி சிறிஸ்கந்தராஜா (Germany), திருமதி ஞானகுமாரி, புவனேந்திரன் (Canada) செல்வி விஜயகுமாரி கந்தசாமி (Germany), ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று 26-12-97 மாலை 4 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திரு திருமதி கந்தசாமி
15/2 சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (52136)

## இராயப்பு சிங்கராயர்

சாவகச்சேரி கோயில் குடியிருப்பைச் சேர்ந்த இராயப்பு சிங்கராயர் (பெயின்ரர், ராசு) 26-12-97 இல் காலமாகிவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27-12-97) மாலை (புதிய நேரம்) 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித லிகோரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
மனைவி, மக்கள்.
கோயில் குடியிருப்பு,
சாவகச்சேரி. (52137)

## நல்லசேகரம் நல்லபூரணம்

மட்டுவில் தெற்கு வாகையடி வீதியைச் சேர்ந்த நல்லசேகரம் நல்லபூரணம் 26 - 12 - 97 இல் காலமானார்.

அன்னார் நல்லசேகரத்தின் அன்பு மனைவியும், தம்பையா காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகமணி (சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை), பத்மாசனி (யாழ் போதனா வைத்தியசாலை), மணிவண்ணன், ரதிபா ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற இராசரத்தினத்தின் மாமியாரும், கீர்த்திகா, பிரகாஷ் பிரசாந் ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் குச்சப்பிட்டி மயானத்தில் இன்று (27 - 12 - 97) சனிக்கிழமை காலை 11 மணியளவில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி இ. கனகமணி
(மகள்)
வாகையடி றோட்,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி (52134)

## சிவஸ்ரீ கிருஷ்ணர் செல்லையா

பருத்தித்துறை தும்பளை பெருமாள் (சக்தி) அம்பாள் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ கிருஷ்ணர் செல்லையா நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு சுவாதி நட்சத்திரத்தில் சிவனடி எய்தினார்.

இறுதிப் பூசை இன்று (27-12-97) சனிக்கிழமை அநுச நட்சத்திரத்தில் நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று சமாதியில் வைக்கப்படும் என்பதை அம்பிகை அடியார்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

ஷை ஆலய தொண்டர்கள்
தும்பளை, பருத்தித்துறை. (52130)

## கணபதிப்பிள்ளை தருமலிங்கம்

கணபதிப்பிள்ளை தருமலிங்கம் 26-12-97 அன்று காலமாகிவிட்டார்.

இவர் திரு. திருமதி கணபதிப்பிள்ளை காளியம்மை அவர்களின் அன்பு மகனும், திருமதி தருமலிங்கம் மாசிலாவின் (பிரான்ஸ்) அன்புக் கணவரும், காலஞ்சென்ற திரு திருமதி அந்தோனிப்பிள்ளை திரேசம்மா அவர்களின் அன்பு மருமகனும், உதயச்சந்திரிகா (பவா, லண்டன்), பாஸ்கரன் (பிரான்ஸ்), சுமதி (பிரான்ஸ்), இந்திராணி (பிரான்ஸ்), உதயச்சந்திரன் (பிரான்ஸ்), வசந்தராஜ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மனோகர் (லண்டன்), கிறிஸ்ரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜேம்ஸ் (லண்டன்), கிறிஸ்ரீனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், றாகிலா, பலீல், றமீன், சுபைர், றகூப், பயிர், லைலா, றசீத்தா ஆகியோரின் அன்பு மைத்துனரும், டேவிற் அல்வின், கிறி, யோகேஸ்வரன், கமலா, குஞ்சு, ஆயிசா, ராதா ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27-12-97) காலை 10.00 மணியளவில் 28/2 A V Road, கொழும்புத்துறையில் உள்ள அவரது இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
M.M. றமீன்
28/2 A. V Road,
கொழும்புத்துறை. (52132)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல்கள் - 1998

## அன்பார்ந்த தமிழ் மக்களே!

★ மனித உரிமைகள் விவகாரத்தில் ஏற்பட்டுள்ள பாரதூரமான கண்டனங்களையும், போர்ப்பின்னடைவு
களையும், திசைதிருப்பி விட அரசு தேடிக் கொண்ட மாற்றுவழியே இன்றைய உள்ளூராட்சித் தேர்தல்.


★ குடாநாட்டை விட்டு வெளியேற்றப்பட்டு மீண்டும் வீடு வந்து சேர்ந்து ஆற அமர ஓய்வெடுத்து
சாதாரண வாழ்க்கை முறைக்கு வருமுன்பே மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள தேர்தலில் உங்களுக்கு
இருக்கும் வெறுப்பும் வேதனையும் நாம் அறியாததல்ல.


★ இத்தேர்தலை நிராகரிப்பதனால் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாகவோ, அன்றாட பிரச்சினை
கள் சம்பந்தமாகவோ காத்திரமான புதிய ஏற்பாடுகள் எதனையும் எமது மக்களின் உரிமைப் போராட்
டத்தில் உருவாக்கிவிட முடியாது. மாறாக எம்மக்களின் கோரிக்கைகள் தியாகங்கள் அனைத்தும்
தேசியக்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது அக்கட்சிகளின் ஆதரவுடன் அவர்களது
நலன்களை முதன்மைப்படுத்துகின்ற உள்ளூர்ப் பிரதிநிதிகளால் கொச்சைப்படுத்தப்பட்டிருக்கும்; சிறு
மைப்படுத்தப்பட்டிருக்கும். அத்துடன் நிரந்தரமான, கௌரவமான தமிழர் தாயகத்தைப் பாதுகாக்
கக்கூடிய அரசியல் தீர்வொன்றை உருவாக்கும் எமது முயற்சிகளுக்கு "மக்கள் பிரதிநிதிகள்" எனும்
பெயரில் ஆப்புகள் வைக்கப்பட்டிருக்கும்.

★ உள்ளூராட்சி சபைகள் இயங்குவதன் மூலம் இராணுவ நிர்வாகத்திடமிருந்தும், அதன் காரணமான
நெருக்கடிகளிலிருந்தும் எமது மக்களை விடுவிக்கும் ஒரு பாரிய நடவடிக்கைக்கான ஓர் ஆரம்பமாக
அல்லது உள்ளதும் பறிபோகாத நிலையை ஏற்படுத்த முடியுமென்பது தற்போது வடக்கு கிழக்கில்
இயங்கி வரும் ஏனைய உள்ளூராட்சி சபைகளில நாம் கண்ட மறுக்க முடியாத உண்மையாகும்.

★ அழிவுகள் மத்தியிலும், அரசியல் ரீதியாக தொடர்ச்சியாகப் பலவீனப்படுத்தப்பட்டு இருக்கும் எமது
மக்களுக்கு, ஆறுதல் தரும் அவசர நடவடிக்கைகள் சிலவற்றையேனும் மேற்கொள்ளக் கிடைக்கின்ற
அனைத்து வாய்ப்புக்களையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதிலும், அன்றாட நெருக்கடி
களில் தோளோடு தோள்நின்று துணைபுரியக் கூடிய உறுதியான நேர்மையான. அரசியல் தலைமை
ஒன்றினை அணிதிரட்டி உருவாக்கி உறுதியுடன் செயற்பட "புளொட்" இயக்கத்தின் அரசியற்
பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியை ஆதரிக்கும்படி உங்களை அன்புடன் கேட்
டுக் கொள்கின்றோம்.

## உங்கள் சின்னம் நங்கூரம்





## ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்)

(67053,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர தினப் பொன்விழாக் காலத்தில்

# அரசுக்கு பாதுகாப்புத் தலையிடி கூடுகிறது

இலங்கையின் சுதந்திரப் பொன் விழா தினம் எதிர் வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி வருகின்றது. சரியாக ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் பெப்ரவரி 4 ஆம் திகதி தான் இலங்கை சுதந்திரம் அடைந்தது.

அன்றுதான் தமிழர்களுக்கு நிரந்தரத் தளை போடப்பட்டது என தமிழ்க்கட்சிகளும், தமிழர்களும் கருதுகின்றார்கள். அன்று தொடங்கிய அவர்களின் அவல வாழ்வு இன்று இனப்போராக வெடித்து நாட்டை பேரழிவுக்குள் தள்ளியிருக்கின்றது.

எனவே ஸ்ரீலங்கா அரசுக்கு இந்த ஐம்பதாவது சுதந்திர தினம் எவ்வளவு அர்த்தம் நிறைந்ததோ தமிழர்களுக்கும் அவ்வளவு முக்கியத்துவம் நிறைந்தாக அது உள்ளது.

பொன் விழா சுதந்திர நாள் என்பது ஒரு நாட்டுக்கு மிக முக்கியமானது; மிக மகிழ்வோடு கொண்டாடப்பட வேண்டியது. ஆனால் ஸ்ரீலங்கா முன்னெப்போதும் இல்லாத நெருக்கடிகளுக்கு மத்தியில்— அவலத்துக்கு மத்தியில்— அதை எதிர்கொள்ள வேண்டியிருப்பதுதான் யதார்த்த நிலை.

வடக்கு—கிழக்கில் பரவி நிலைகொண்டிருக்கும் அரசுத் துருப்புகள் பொதுவாகப் புலிகளின் அதிரடித் தாக்குதலை எதிர்பார்த்து—காத்து. உச்ச உஷார் நிலையில் இருப்பது ஒரு புறமிருக்க—

இந்தப் பொன் விழா சுதந்திரதினக் காலத்தில் குறிப்பாக நான்கு முனைகளில் அதி உச்சப் பாதுகாப்பு விழிப்புடன் இருக்க வேண்டிய கட்டாயமும் பாதுகாப்புப்படைகளுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

முதலாவது— யாழ். குடாநாடு.

குடாநாட்டில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தலை நடத்தும் அரசின் உத்தேசத் திட்டம் உச்சக் கட்டத்தை அடையப் போவது பொன்விழா சுதந்திர தினக் காலத்தில்தான்.

சுதந்திரதினம் என்பது ஜனநாயக ஆட்சி முறைக்கு பெருமை கூறும் ஒருநாளாகும். இலங்கையில் ஈழத் தமிழர்களுக்கு அடிப்படை ஜனநாயக உரிமைகள் உள்ளவா என்ற சர்ச்சை ஒரு புறமிருக்க —

சுதந்திரப் பொன்விழா காலத்தில் சர்ச்சைக்குரிய யாழ். குடாநாட்டில் ஜனநாயகத் தேர்தல் முறைகள் கேலிக்கூத்தாகி விட்டால் அதைவிட அரசுக்கு வேறு அவமானம் தேவையில்லை என்பதுதான் இன்று முக்கியமானதாகும்.

எனவே இக்காலகட்டத்தில் சுதந்திர — ஜனநாயக— தேர்தலையே குடாநாட்டில் நடத்தினோம் என்று உலகுக்குக் காட்ட வேண்டிய அவசியம் அரசுக்கு உள்ளது.

அப்படிக் காட்டுவதாயின் தேர்தல் விதிகள் சரிவரக் கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டியிருக்கும்; ஆயுதங்களுடன் அலையும் தேர்தலில் — போட்டியிடும் குழுக்கள் — அத்து மீறாமல் பார்த்துக் கொள்ள வேண்டியிருக்கும்; தேர்தல் அலுவலகர்களுக்கு, வாக்களிப்பு நிலையங்களுக்கு, வேட்பாளர்களுக்கு, அனைத்துக்கும் மேலாக வாக்காளர்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்பட வேண்டியிருக்கும்; வாக்களிப்புக் காலத்திலோ முன்னரோ வன்செயல்கள் இடம் பெறாமலும், அச்சுறுத்தல் இடம்பெறாமலும் பார்த்துக் கொள்ள வேண்டியிருக்கும்.

இவற்றில் ஒன்றைத் தன்னும் அரசு கோட்டை விட்டால் சுதந்திரப் பொன் விழாக் காலத்தில் அரசுக்கு அவப் பெயரை வேண்டித் தரும் மற்றொரு நிகழ்வாக அது அமைந்து விடும்.

இந்த உள்ளூராட்சித் தேர்தல்களை புலிகள் அடியோடு விரும்பவில்லை. குடாநாட்டு மக்கள் மத்தியிலும் இத் தேர்தலுக்கு வரவேற்போ அதில் ஆர்வமோ இல்லை. போதாக்குறைக்கு, தேர்தலில் போட்டியிடும் முன்னாள் ஆயுதக் குழுக்களின் தீவிரம் வேறு அச்சத்தைத் தருகின்றது.

அத்தோடு அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருக்க — இரவு ஊரடங்கு தொடர—பாதுகாப்புக் கெடுபிடிகள் தீவிரமடைய —தேர்தல் திருவிழா நெருங்குகின்றது.

எனவே இந்தச் சிக்கல்கள் எல்லாவற்றுக்கும் முகம் கொடுத்து அசம்பாவிதம் ஏதுமில்லாமல் தேர்தலை நடத்தி முடிப்பது என்பது அரசுத்தரப்புக்கு ஒரு யுத்தமுனையை எதிர்கொள்வது போன்றே இருக்கும்.

இரண்டாவது — வன்னி

சுதந்திரப் பொன் விழா தினத்தில் வவுனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் பாதுகாப்பான தரை வழிப் பாதை திறக்கப்பட்டு விடும் என்று பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை அறிவித்திருப்பது வன்னியில் அடுத்து வரும் நாள்களில் அல்லது வாரங்களில் யுத்த மேகங்கள் கருமையாகக் கருக்கட்டி பேரழிவுச்சமர் வெடிக்கப் போகின்றது என்பதை ஓரளவு உறுதிப்படுத்தியிருக்கின்றது. (விவரத்துக்கு தனித்தலைப்பில் தகவல்கள் இத்துடன் வெளியாகியுள்ளன)

எனவே வன்னி யுத்தமுனையும் அரசுக்கு நெருக்கடி தருவதாக இருக்கும்.

மூன்றாவது — கொழும்பு

சுதந்திர பொன்விழாக்

## பாசுபதன்

காலத்தில் நாட்டு மக்களினதும் உலகினதும் கவனம் தலைநகர் கொழும்பின் பக்கம் திரும்பியிருக்கும்.

யாழ். குடாநாட்டை இழந்ததற்கும், வன்னிப் படை நடவடிக்கைகளுக்கும் பதிலடி கொடுப்பதற்காக தலைநகரில் பெரும் தாக்குதலுக்கு புலிகள் கண் வைக்கலாம் என பொதுவாக அஞ்சப்படுகின்றது.

இலங்கையின் சுதந்திர தினம் என்பது ஈழத் தமிழர்களுக்கு அடிமைத் தளை போடப்பட்ட தினம் என்று கருதும் புலிகள், அந்த சுதந்திர தினத்தின் பொன்விழாவின் போது— அந்த சுதந்திரத்தின் கீழ் பெரும்பான்மை இனத்துக்குக் கிடைத்த ஆட்சி அதிகாரம் நிலை கொண்டிருக்கும் மைய இடமான— கொழும்பு மீது இலக்கு வைக்கலாம் என்று கருதுவதற்கு பல காரணங்கள் உள்ளன.

சுதந்திரப் பொன்விழாவைக் குழப்பவும், ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தின் நியாயத்தை மீண்டும் ஒருதடவை உலகுக்கு நினைப்பூட்டவும், தங்களின் பலத்தை வெளிப்படுத்தவும் சுதந்திரப் பொன்விழா சமயத்தில் தலைநகரில் தமது வழமையான தாக்குதல் பாணியை புலிகள் பின்பற்றக் கூடும் என இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

சுதந்திர தினப் பொன் விழாவில் தலை நகர் களை கட்டி ஆடலும் பாடலும் கேளிக்கைகள்— கொண்டாட்டங்களும் உச்சக்கட்டத்தை அடையும் போது அதைப் பயன்படுத்தி புலிகள் ஊடுருவி தமது கைவரிசையைக் காட்டி விடக்கூடும் என்றும் அவர்கள் எச்சரிக்கின்றார்கள்.

ஆகவே கேளிக்கை— கொண்டாட்டங்களுக்கு மத்தியில் பாதுகாப்புக் கெடுபிடி தீவிரமாக இருக்க வேண்டும்; இருக்கும். — என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.




சுதந்திர தினப் பொன் விழா நிகழ்வுகளில் பங்குபற்ற பல்வேறு நாட்டுப் பிரமுகர்களும் இலங்கையில் கூடும் சமயம், தலைநகரில் ஒரு சிறு கிரனேட் வெடிப்பு மூலம் அந்த உச்சக் கொண்டாட்டத்தை குழப்பி விட முடியும் என்பதால் தலைநகரில் மிகக் கடுமையான பாதுகாப்பை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம், அரசுக்கு உள்ளது.

கொழும்பின் பாதுகாப்பு கேள்விக் குறியாகியிருப்பது பற்றிய யதார்த்த நிலையை உணர்ந்துள்ளதாலேயே தலைநகர்ப் பாதுகாப்புக்கு தனிப்படை அமைக்கும் முயற்சியிலும், தனது எம். பிக்கள் மூலம் அப்படைக்கு ஆள்களைத் திரட்டும் நடவடிக்கையிலும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தானே நேரில் ஈடுபட்டிருக்கின்றார்கள் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

நான்காவது — கண்டி

இங்குதான் சுதந்திர தினப் பொன்விழாவின் முக்கிய நிகழ்வுகள் இடம்பெறப் போகின்றன.

மலையகத்துக்குள் புலிகள் ஊடுருவியிருக்கலாம் என்ற சந்தேகமும் — பேச்சும் — அடிபடுகின்றன இக்காலகட்டத்தில்தான் கடந்தவாரம் மலையகத்தில் முக்கிய இரு சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

இலங்கை மின்சாரசபைக்குச் சொந்தமான இரு டிரான்ஸ்போமர்கள் பண்டாரவளையிலும், வெலிமடையிலும் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டிருக்கின்றன.

வெலிமடை — பண்டாரவளை வீதியில் டியபுபுல்ல பகுதியில் டிரான்ஸ்போமர் வெடித்த இடத்தில் பெருங்குழி ஏற்பட்டிருக்கின்றது.

இவ்விரு சம்பவங்களுக்கும் புலிகளே பின்னணி என்ற பலத்த சந்தேகம் படை உயர்தரப்பில் நிலவுகின்றது.

சுதந்திர தினப் பொன் விழா நிகழ்ச்சிகளை கண்டியில் நடத்துவதற்கு பூர்வாங்க ஆயத்தங்கள் செய்யப்படுகின்றபோதே —

அங்கும் தமது பிரசன்னம் உள்ளது என்பதை வெளிப்படுத்த புலிகள் இந்தக்குண்டு வெடிப்புக்களை நடத்தினார்களோ என்று சந்தேகிக்கப்படுகின்றது.

சுதந்திரப் பொன்விழா நிகழ்ச்சிகளில் பங்குபற்ற தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா, பிரிட்டிஷ் அரசி ஆகியோர் உட்பட பல வெளிநாட்டுப் பிரமுகர்களுக்கு ஸ்ரீலங்கா அரசு அழைப்பு அனுப்பியிருக்கின்றது.

ஆனால் இனவிடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு இருபத்தியைந்து ஆண்டுகள் சிறைவைக்கப்பட்டு — இப்போது உலகின் பெரும் விடுதலை வீரராகப் போற்றப்படும் தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா, இனவிடுதலைப் போர் உச்சக்கட்டத்தில் இருக்கும் இலங்கைக்கு — சுதந்திரப் பொன்விழா காலத்தில் இனப்போர் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கும் ஒரு நாட்டுக்கு — விஜயம் செய்வாரா என இதே பத்தியில் சில காலத்துக்கு முன்னர் சந்தேகம் எழுப்பியிருந்தோம்.

அநேகமாக நெல்சன் மண்டேலாவும், பிரிட்டிஷ் அரசியும் இந்நிகழ்ச்சியில் பங்கு பற்ற வரமாட்டார்கள் என்றே சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கூறுகின்றன. பிரிட்டிஷ் அரசிக்குப் பதிலாக அவர் மகன் இளவரசர் சார்ள்ஸ் வருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சுதந்திரதினப் பொன்விழாவில் கலந்து கொள்வதை பல நாடுகளின் சிரேஷ்ட தலைவர்கள் தவிர்த்துக் கொண்டாலும் அடுத்த கட்டத்தில் உள்ள அவர்களின் பிரதிநிதிகளை அந்நிகழ்ச்சிக்கு அவர்கள் நிச்சயம் அனுப்பிவைப்பர்.

எனவே சுதந்திர தினப் பொன் விழாவின் முக்கிய பிரதான நிகழ்வுகளில் பங்கு பற்றுவதற்காக பல்வேறு நாட்டுப் பிரமுகர்களும் கண்டியில் கூடும் போது— தலைநகர் கொழும்பைப் போன்று மலையகத் தலை நகரிலும்— விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டிய கட்டாயம் அரசுத் தரப்புக்கு ஏற்பட்டுள்ளது.

எனவே சுதந்திரப் பொன் விழா காலத்தில் நான்கு முனைகளில் — யாழ்ப்பாணம், வன்னி, கொழும்பு, கண்டி—என்ற நான்கு பரந்த பிரதேசங்களில் ஒரே சமயத்தில் 'கண்' வைக்க வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டிருக்கின்றது. அரசுக்கு விழி பிதுங்குமா என்ற கேள்விக்கு சுதந்திரதினப் பொன் விழா வந்து போகும் போது விடை கிடைத்துவிடும்.

★ ★ ★

## ராணுவ மாற்றம்: ஜானகபெரேரா மட்டக்களப்புக்கு

வன்னியில் மேற்கொள்ளப்படும்.

'வெற்றி உறுதி' படை நடவடிக்கைக்கு ஏற்றவாறு இராணுவ உயர்மட்டங்களில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்படவிருப்பது குறித்து கடந்த வாரம் இப்பத்தியில் பிரஸ்தாபித்திருந்தோம். கடந்த திங்கட்கிழமை முதல் அந்த மாற்றங்கள் நடைமுறைக்கு வந்திருக்கின்றன.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி நிலைமை

பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னர் வடக்கிற்கான தரைப்பாதையைத் திறந்து விடுவோம் என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை வெளிநாட்டு செய்தியாளர்கள் மத்தியில் அண்மையில் அறிவித்தது இராணுவ வட்டாரங்களில் பரபரப்பையும் பல்வேறு கேள்விகளையும் எழுப்பியிருக்கின்றது.

புலிகளை அழிக்கவும் பயங்கரவாதத்தை ஒழிக்கவும் இது போன்று பல காலக்கெடுக்களை கூறியவர்தான் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை. அந்தக் காலக்கெடுக்கள் எல்லாம் அவ்வப்போது காலாவதியாகி விட்டன.

அத்தகைய காலாவதி காலக்கெடுக்களில் இதுவும் ஒன்றா என்பது இன்னும் ஐந்து வாரங்களுக்குள் தெரிந்து விடும்.

''என்ன செலவானாலும் நாங்கள் பாதையைத்திறந்து நாட்டை மீண்டும் ஐக்கியப் படுத்துவோம். எங்கள் திட்டங்களை நையாண்டி செய்பவர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்குவதாக அது இருக்கும்.'' — இவ்வாறு அமைச்சர் ரத்வத்தை அப்போது கூறியிருந்தார்.

ஏதோ ஒரு திடமான நம்பிக்கையில்தான் அவர் அப்படிக் கூறியிருப்பதாக இராணுவ ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

தாம் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அரசுத்துருப்புக்களை பாதையைக் கைப்பற்ற வைத்தால் அது அமைச்சர் ரத்வத்தையை சிங்கள மக்கள் மத்தியில் தன்னிகரில்லாத் தலைவராக உயர்த்தி விடும். அதேசமயம் தாம் தெரிவித்த காலக்கெடுவுக்குள் அதனை அவரால் நிறைவேற்ற முடியாமல் போனால் அது அவர் தனக்குத் தானே முகத்தில் கரி பூசிக்கொண்ட செயலாகவும் மாறிவிடும்.

என்றாலும் தற்போதைய காலநிலை, களநிலைமை போன்றவை அமைச்சர் அனுருத்தவின் காலக்கெடுவை காலாவதியாக்கும் போலவே தோன்றுவதாக இராணுவ ஆய்வாளர் ஒருவர் குறிப்பிடுகின்றார்.

வன்னிக் களத்தில் உள்ள துருப்புக்களின் மனோநிலையை அங்கு பெய்யும் கடும் மழையும் வெள்ளமும் குழப்பி வருவதாகத் தெரிகின்றது.

வெள்ளத்தினால் துருப்புக்களின் தங்குமிடங்கள், முன்னணிக் காவலரண்கள் எல்லாம் பாதிக்கப்பட்டுக் கிடக்கின்றன. நுளம்புத்தொல்லை, சுகாதார சீர்கேடு. ஏற்கனவே ஈரல் அழற்சி நோயால் பாதிக்கப்பட்ட எழுநூறு துருப்புக்கள் சிகிச்சைக்காகக் களத்திலிருந்து அகற்றப்பட்டிருக்கின்றார்கள். ஏனையோருக்கு தடுப்புமருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வெள்ளத்திலும் சேறு சகதியிலும் இராணுவ வாகனங்கள் ஆங்காங்கே புதைவதால் துருப்புகளுக்கு உணவு விநி

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்னி..

(நான்காம் பக்கத் தொடர்)
யோகம் சீராக — நேரத்துக்கு — கிடைப்பதில்லை. கிடைத்தாலும் மழையில நனைந்து ஆறிப்போன பழைய உணவே கிட்டுகின்றது. இதனால் துருப்புகள் பெரும்பாலும் — பக்கெட்டில் அடைக்கப்பட்ட — உப்புச்சப்பில்லாத — உணவிலேயே தினசரி தங்கியிருக்க வேண்டியுள்ளது.

சுடு ஆறி வந்த உணவை ஆங்காங்கே சுட வைத்து உண்ணலாம் என்றாலும் காய்ந்த விறகுக்குத் தட்டுப்பாடு வேறு.

கடந்த வாரம் கனகராயன் குளம் பிரதேசத்தில் வெள்ளப் பகுதியில் குளிக்கச் சென்ற சிப்பாய் ஒருவர் காணாமற் போனார். அவர் வெள்ளத்தில் மூழ்கி இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

வன்னியில் இத்தகைய சீர் கெட்ட நிலைமை இன்னும் பல வாரங்களுக்கு நீடிக்கும் என்று தெரிகின்றது.

தற்போது வன்னியில் பொழிந்து கொண்டிருக்கும் வடகிழக்கு பருவமழை பெப்ரவரி கடைசிவரை தொடரும் என்கின்றார் வானிலை ஆய்வுத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் பி. எம். ஜெயதிலக.

இந்தத் தடைகளை எல்லாம் கடந்து பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னர் தரைப் பாதையை அரசுத்துருப்புகள் கைப்பற்றி அதனை போக்குவரத்துக்குத் திறந்துவிட்டால் —

சுதந்திர தினப் பொன்விழாவின் போது ஸ்ரீலங்கா அரசுக்கும் சிங்கள மக்களுக்கும் கிடைத்த — நீண்டகால எதிர்பார்ப்பை பூர்த்தி செய்கின்ற — இராணுவ வெற்றியாக, பரிசாக அது அமையும்.

அது எவ்வாறு முடியும் என்று நிர்ணயிப்பதற்கான ஏதுக்கள் எதுவுமில்லை.


அருள் மிகு
**கொக்குவில் மேற்கு மணியர்பதி**
**ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமிதேவஸ்தான**
**பரிபாலனசபை**

14 - 12 - 97 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மகா சபைக் கூட்டத்தில் பின்வரும் பரிபாலனசபை ஏக மனதாகத் தெரிவு செய்யப்பட்டது.

போசகர்கள்:- த. ரட்ணேஸ்வரன் (கிராம சேவை அலுவலர்)
ந. துவனேசன் (கிராம சேவை அலுவலர்)
தலைவர்:- பொ. முத்துக்குமாரு
உபதலைவர்:- தி. நடேசன்
செயலாளர்:- இ. சிறீகாந்தா
உப செயலாளர்:- வி. ஞானேந்திரன்
பொருளாளர்:- சி. அன்னலிங்கம்
உப பொருளாளர்:- ம. க. குகதாசன்
கணக்காய்வாளர்:- இ. செல்வநாதன்

பரிபாலனசபை உறுப்பினர்கள்:-

1. செல்வன் தே. ஜெயகுமார்
2. பொ. சிவரத்தினம்
3. கி. சிவசுப்பிரமணியம்
4. சி. கு. சிவசுப்பிரமணியம்
5. ந. சுந்தரலிங்கம்
6. சி. சிறீகாந்தன்
7. செல்வன் கு. தெட்சணாமூர்த்தி
8. செல்வன் ந. சுதேன்குமார்
9. செல்வன் நா. பத்மராஜ்

(49887)



கடமை - கண்ணியம் கட்டுப்பாடு
ஜனாதிபதி விருதுபெற்ற சாரணர் தலைவர்
**செல்வன் பரமானந்தம் அஜித்குமார்**
அவர்களை
**பண்ணாகம் அண்ணா கலை மன்றத்தினர்**
**பாராட்டி வாழ்த்துகின்றனர்**



எமது மன்ற விளையாட்டுத்துறை இயக்குநர் செல்வன் பரமானந்தம் அஜித்குமார் அவர்கள் காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச்சங்க சாரணர் தலைவராக இருந்து சிறந்த சமூக சேவையாற்றி ஜனாதிபதி விருது பெற்றமையை முன்னிட்டு அவரது சேவை மேன்மேலும் சிறப்புற அமைய அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நிர்வாகிகள்
பண்ணாகம் அண்ணா கலை மன்றம்

(52073)


## சுதந்திர ...

(நான்காம் பக்கத் தொடர்)
இந்திய தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் ஒரு வருட பயிற்சியை முடித்துக் கொண்டு திரும்பியுள்ள மேஜர் ஜெனரல் நீல் டயஸ் வன்னி இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள 53 ஆவது படையணிக்கு சிரேஷ்ட கட்டளையிடும் அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

வன்னியில் 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் மீது இதுவரை ஆறு தடவைகள் புலிகள் நடத்திய 'செய் அல்லது செத்துமடி' தாக்குதல்களில் அதிகம் பாதிப்புற்று சீரழிந்து போன படையணி 53 ஆவது டிவிஷன்தான். அதற்கு புதிய கட்டளைத் தளபதியாகப் பொறுப்பேற்றிருக்கும் மேஜர் ஜெனரல் டயஸ் அதனை மீளமைத்து சரிப்படுத்துவதில் அதிக அக்கறை காட்டுவார் என உயர் பாதுகாப்பு வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

இதுவரை காலமும் 53 ஆவது படையணியின் சிரேஷ்ட கட்டளைத் தளபதியாக இருந்த பிரிகேடியர் வசந்த பெரேரா இராணுவத் தலைமையகத்துக்கு மாற்றம் பெற்றுள்ளார்.

வன்னியில் செயற்படும் 55 ஆவது படையணியின் சிரேஷ்ட கட்டளைத் தளபதியான பிரிகேடியர் அன்ரன் விஜேந்திரா புதிதாக பட்டலந்தையில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகள் கல்லூரிக்கு தளபதியாகச் செல்லுகின்றார்.

அவரது இடத்துக்கே — 55 ஆவது படையணியின் கட்டளைத் தளபதியாக — பிரிகேடியர் சரத் பொன்சேகா பதவியேற்கின்றார்.

பிரிகேடியர் சரத் பொன்சேகா இதுவரை ஆனையிறவுப் பகுதியில் உள்ள 54 ஆவது படையணியின் சிரேஷ்ட கட்டளைத்தளபதியாகப் பணிபுரிந்தார்.

பிரிகேடியர் பொன்சேகா வன்னிக்குச் செல்வதை அடுத்து 54 ஆவது படையணியின் பொறுப்பை பிரிகேடியர் லோஹான் குணவர்த்தனா ஏற்கின்றார். அவர் புதுடில்லியில் உள்ள இந்திய தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் ஒரு வருடப் பயிற்சியை முடித்துக் கொண்டு அண்மையில்தான் நாடு திரும்பியவர்.

அண்மையில் லண்டனில் இங்கிலாந்து தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் ஒரு வருடப் பயிற்சியை முடித்துக் கொண்டு திரும்பியிருந்த மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா தற்போது விடுமுறையில் நிற்கின்றார்.

மட்டக்களப்பைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் 8 ஆவது படையணியின் சிரேஷ்ட கட்டளைத் தளபதி பொறுப்பை அவர் ஏற்கவிருப்பதாகத் தெரிகின்றது.

தற்போது இப்படையணியின் சிரேஷ்ட கட்டளைத் தளபதியாக இருக்கும் பிரிகேடியர் நிஹால் மாரம்பே கொழும்புக்கு இடமாற்றம் பெறுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. தலைநகர் கொழும்பின் பாதுகாப்புப் பொறுப்பு மேஜர் ஜெனரல் ஜானிய நமுனியிடம் வழங்கப் பட்டிருப்பது தெரிந்ததே. அவருக்கு உதவியாக பிரிகேடியர் நிஹால் மாரம்பே அநேகமாக நியமிக்கப்படு

(7 ஆம் பக்கம் பார்க்க)

## திரை அரங்கு

அரசாங்கத்தின் பிந்திய புள்ளி விவரங்களின் படி யாழ். குடாநாட்டில் தற்போது 1 லட்சத்து 40 ஆயிரத்து 222 குடும்பங்களைச் சேர்ந்த 4 லட்சத்து 70 ஆயிரத்து 166 பேர் வசிக்கின்றார்கள்.

பொதுவாக மொத்த மக்கள் தொகையில் ஐம்பது முதல் அறுபது சதவீதமானோரே 18 வயதுக்கு மேல் — வாக்களிக்கத் தக்க வயதை எட்டியவர்களாக — இருப்பர். இதன்படி பார்த்தால் இங்குள்ள 4 லட்சத்து 70 ஆயிரத்து 166 பேரில் ஆகக் கூடியது இரண்டு லட்சத்து 82 ஆயிரம் பேரே வாக்களிக்கத் தகுதியுடையவர்களாக இருப்பர்.

ஆனால் அரசு தற்போது குடாநாட்டில் நடத்தப் போகின்ற உள்ளூராட்சித் தேர்தல்கள், பல வருடங்களுக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. அதன்படி குடாநாட்டில் 5 லட்சத்து 71 ஆயிரத்து 484 வாக்காளர்கள் இருக்கின்றார்கள்.

அதாவது சரியாக அரைவாசி வாக்காளர்கள் இல்லாத நிலையில் — அரைகுறைப் பட்டியலை வைத்துக் கொண்டு — அரசு தேர்தலை நடத்தப் போகின்றது.

குடாநாட்டில் தற்போது வசிப்பவர்களிலும் அண்மைய வருடங்களில் 18 வயதை எட்டி, வாக்களிக்கத் தகுதி பெற்ற பலரின் பெயர்கள் இந்த வாக்காளர் பட்டியலில் இல்லை.

அதாவது வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளவர்களில் பெரும்பான்மையானோர் யாழ்ப்பாணத்தில் இல்லை. மறுபுறத்தில் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் — வாக்களிக்கத் தகுதி பெற்ற — பலரின் பெயர்கள் வாக்காளர் பட்டியல்களில் இல்லை.

ஆகவே வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளவர்களில் சுமார் மூன்று லட்சம் பேர் தற்போது யாழ்ப்பாணத்தில் இல்லை; அல்லது உயிருடன் இல்லை.

இதனை நன்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள சில அமைப்புகள் ஆயத்தமாவதாக ஒரு செய்தி.

அதற்கு முதற்படியாக, குடாநாட்டிலிருந்து இடம் பெயர்ந்து வடக்கு-கிழக்கின் ஏனைய பகுதிகளில் குடியேறியிருக்கும் மக்களின் பெயர், விவரம், அவர்களின் யாழ்ப்பாண முகவரி ஆகியவற்றைத் திரட்டும் பணியில் ஓர் அமைப்பு மும்முரமாக இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இத்தேர்தலில் வாக்காளரைவிட, கள்ளவாக்குகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம்!

★ ★ ★ ★

**யாழ்.** வீதிகளின் நிலைமை குறித்து முந்திய வாரம் இதே பத்தியில் பொதுவாகக் குறிப்பிட்டிருந்தோம். அதில் யாழ். கஸ்தூரியார் வீதியில் அரை கிலோ மீற்றர் தொலைவுக்கு இடையில் வீதிக்குக் குறுக்காக மூன்று பெரும் பள்ளங்கள் இருப்பது குறித்தும் அதனால் ஏற்படும் அவலம் குறித்தும் விசேடமாகக் குறிப்பிட்டோம்.

இந்தப் பத்தியில் வெளியான தகவல்கள் காரணமாகவோ அல்லது வழமையான வேலை ஒழுங்கு முன்னுரிமையின் அடிப்படையிலோ அவ்வீதியால் செல்வோருக்கு உடனடியாக இடைக்கால நிவாரணம் வழங்கப்பட்டிருக்கின்றது. பெரிய பள்ளத்துக்கு கற்கள், தார்களைப் போட்டு உடனடியாக வீதியை முற்றாகச் செப்பனிட முடியா விட்டாலும் கூட தற்காலிகமாக கற்களைப் போட்டு பள்ளத்தை நிரவி போக்குவரத்துக்கு வசதி செய்து கொடுத்த அதிகாரிகளுக்கு பாராட்டுக்கள். காலகதியில் அப்பள்ளங்களை நிரந்தரமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுப்பார்கள் என எதிர்பார்க்கலாம்.

★ ★ ★ ★

**யாழ்.** பிரதம தபாலகத்தில் வெளியூர் தொலைபேசிச் சேவை கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகியிருப்பதாகப் பாவனையாளர்கள் முறைப்பாடு செய்கின்றார்கள்.

இப்போது நாணயக்குற்றி போட்டு தொலைபேசி அழைப்பு எடுக்கும் கருவி ஒன்று அங்கு பொருத்தப்பட்டுள்ளது. அதையடுத்து பதிவு செய்து தொலைபேசி அழைப்பை வழங்கும் முறையை அப்படியே தொப்பென்று போட்டு விட்டார்கள். ஏதோ சாட்டுக்கு ஒரு சிலருக்கு பதிவு செய்து அழைப்புக் கொடுப்பதாகக் கூறப்படுகின்றது.

போதிய ஆள்பலம் இல்லாததால் இந்த நிலைமை என்று மற்றொரு தகவல்.

நாணயக்குற்றி மூலம் தொலைபேசி அழைப்பு எடுக்கும் கருவி சிலமணி நேரத்துக்குச் செயல் இழந்தாலோ அல்லது கூடுதலாக மக்கள் தொலைபேசிக்காக வரிசையில் நின்றாலோ நீண்ட நேரம் மக்கள் காத்து — தவம் — கிடக்க வேண்டிய நிலை.

அதேசமயம் இந்தக் கருவியிலும் இடையில் சுமார் ஒரு மணி நேரத்தை மக்கள் பாவனைக்குக் 'கட்' செய்து அலுவலகப் பாவனைக்கு என்று கொடுத்து விடுகின்றார்களாம்.

பதிவு செய்து அழைப்பு எடுத்துக் கொடுக்கும் வசதியைத் தொடர்ந்து வழங்கினால் மக்கள் கஷ்டம் கொஞ்சம் தீருமே? செய்வார்களா?

**- மின்னல் -**


அரைகுறையான தீர்வுகளுக்கு துணைபோகின்ற,
எதிர்த்துக் குரல் கொடுக்காத சக்திகளைத் தோற்கடிப்பதற்காக
ஈ.பி.டி.பியின் கரங்களைப் பலப்படுத்துவீர்!

**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)**

X

(ஏ-002)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனை

நல்லின பொமினேறியன் பிறவுண் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: 709, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [52097]

குளிப்பன் வட்டுக்கோட்டையில் வீட்டுடன் 6 பரப்பு காணியும் வழுக்கை ஆற்று வெளியில் 45 பரப்பு நெற் காணியும் சங்கரத்தை வீதியில் திருஞானசம்பந்தர் பள்ளிக் கூடத்திற்கு அருகில் 9 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி J. துரைராஜா குளிப்பன் வட்டு. கிழக்கு வட்டுக்கோட்டை. (52122)

### மகாதேவா ஜோதிடம்

''வியாழமாற்றம்'' புத்தகம் எங்கும் கிடைக்கும். சோதிடரைகடை—626, பருத்தித்துறை வீதி (நல்லூர் கந்தசாமி கோயில் முன்பாக) காலை 10 மணி தொடங்கி பிற்பகல் 2 மணிவரையும், ஏனைய நோங்களில்வீடு 140. செல்லர் வீதி-(கல்வியங்காடு) இடத்திலும் தினசரி சந்திக்கலாம். [சி/2428]

### தவறிவிட்டது

சந்திரமூர்த்தி புஷ்பராணி ஆகிய எனது விசேட அடையாள அட்டையும், தேசிய அடையாள அட்டையும் (537522933V) யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் காரைையடி தெற்கு, பண்டத்தரிப்பு. என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [52117]

நடராஜா பங்கயச்செல்வி ஆகிய எனது 708291986V இலக்க தேசிய அடையாள அட்டையுடன் விசேட, பல்கலைக்கழக அடையாள அட்டைகளும் யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து விநாயகர் ஸ்ரோர்ஸ். பிள்ளையார் கோயிலடி, மூளாய் எனும் முகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும் [52115]

### வகுப்பு

புல்லாங்குழல், ஓர்கன், கிற்றார் ஆகிய வகுப்புக்கள் மாலை 2.00 மணியிலிருந்து நடைபெறுகின்றன. தொடர்பு:- கரவீணா, இல: 23, குறேசர் வீதி, சுண்டுக்குளி (கல்வி வலயம் ஒன்றின் காரியாலயத்திற்கு அருகில்) [51770]

### மணப்பெண்கள்

பிரபலமான வியாபாரிகா (யாழ்ப்பாணம், கொழும்பு) ஐவருக்கும், கச்சேரி உத்தியோகத்தருக்கும் கல்வியும், அழகுமுள்ள தொழிலற்ற மணப்பெண்கள் தேவை புகைப்படத்துடன் தொடர்பு: (சீதனம் தடையல்ல) முத்துக்குமாரு செல்லப்பா, புன்னாலைக் கட்டுவன் (51683)

### மாம்

மலைவேம்பு, சர்க்கரை வம்பு, பலா, இலுப்பை, ரிசலாங்கண்ணி, மூலிகைள், வேப்பம் பிண்ணாக்கு திருக்குறள் வரதராசனார் உரையுடன், இயற்கை தரும் இன் மருந்துகள் விற்பனையாகின்றன. 'மில்க்வைற்'' [சி/2470]

### அகண்ட பஜனை

யாழ்ப்பாணம், டிச. 27 40 சாயி நிறுவனங்கள் இணைந்து நடத்தும் அகண்ட பஜனை நாளை ஞாயிறு காலை 7 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை சேர். பொன். இராமநாதன் வீதியில் உள்ள பகவான் ஸ்ரீசத்ய சாயிசேவா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 28 - 09 - 1926

மறைவு: 28 - 11 - 1997

### திருமதி அன்னம்மா சேதுபதி

28.11.97 அன்று கொழும்பில் சிவபதம் அடைந்த எமது அன்புத் தாயாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் 31 ஆம் நாளில் அவரை நினைவு கூர்ந்து அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரர்.

31, சிவன் பண்ணை வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம். (52105)

---

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
பாடசாலை

## அபிவிருத்திச் சங்கம்

28-12-97 நடக்கவிருந்த மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அங்கத்தவர்களுக்கு அறியத்தருகின்றேன்.

ச. சத்தியசீலன்
பொதுச் செயலாளர்
(சி/2479)

---

யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
பழைய மாணவர் சங்க ஆதரவில்
அமரத்துவமடைந்த அதிபர்கள்

## நினைவு தினம்

இடம்: கல்லூரி கலையரங்கம்
நேரம்: பி. ப 2.30 மணி (புதிய நேரம்)
நாள்: 27 - 12 - 1997, சனிக்கிழமை
தலைவர்: திரு. ந. சிவகடாட்சம் (அதிபர்)

பிரதம விருந்தினர்
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
[உபவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்]


சிறப்பு விருந்தினர்
திரு. க. இ. குமாரசாமி
[இளைப்பாறிய அதிபர்]

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
- செயலாளர்
(52121)

---

## SHOTOKAN KARATE DO ASSOCIATION
### NORTHERN PROVINCE

இலங்கையின் கராத்தே தந்தையென அழைக்கப்படும்
SHIHAN BONNIE ROBERT அவர்களிடம்
திரு. தோமஸ் பிரான்சிஸ் லூத்துராசா, திரு. சிங்கபாகு பரம்குமார் ஆகிய இருவரும் கறுப்புப்பட்டிக்கான டிப்ளோமா சான்றிதழைப் பெற்று திரும்பி உள்ளார்கள்.



சிங்கபாகு பரம்குமார்
தோமஸ் பிரான்சிஸ் லூத்துராசா

இவர்கள் SHIHAN BONNIE ROBERT அவரின் மாணவரும், 1982 ஆம் ஆண்டு கறுப்புப்பட்டி (Kumite) தேசிய சம்பியனாக தெரிவு செய்யப்பட்டவரும், கராத்தேயில் 22 வருட அனுபவமிக்கவரும், சிலம்பம், குத்துச்சண்டை, மல்யுத்தப், NINJA முறைகளிலும் திறமை மிக்க ஆசானாகவும் விளங்கும் CHIEF INSTRUCTOR AND EXAMINER SENSEI திரு. RAJA KANESAMOORTHY அவர்களின் மாணவர்கள் ஆவர்.



செல்வன்
இராசகணேசமூர்த்தி பிரசாத்

### 8-வது பிறந்தநாள் வாழ்த்து
(27 - 12 - 1997)

பல்லாண்டு காலம் வாழ்கவென
கராத்தே மாணவர்கள்
வாழ்த்துகிறார்கள்.

இவர்களிற்கான கௌரவிப்பும் கலந்துரையாடலும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதால் எமது பயிற்சி பழைய, புதிய மாணவர்கள் அனைவரையும் கலை ஆர்வம் உள்ளவர்களையும் 04 — 01 — 1998 ஞாயிறு பி. ப. 3.00 மணிக்கு பருத்தித்துறை கராத்தே பயிற்சி நிலையத்திற்கு அன்புடனும் மகிழ்ச்சியுடனும் அழைக்கின்றோம்.

SHOTOKAN KARATE DO ASSOCIATION
மாணவர்கள்.

[52100]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெடுந்தீவில் உதவிக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், டிச. 27

நெடுந்தீவு பிரதான தபாலகத்திலும் ஏனைய இரு உப தபாலகங்களிலும் நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கான பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவு எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வழங்கப்படும் என்று நெடுந்தீவு தபால் அதிபர் அறிவித்துள்ளார். (உ-3)

# சபாநாயகர் ரத்நாயக்காவுக்கு அடுத்து பிரதமர் பதவி கிட்டும்?

கொழும்பு, டிச. 27

பிரதமர் பதவிக்கான போட்டியில் நாடாளுமன்ற சபாநாயகர் கே. பி. ரத்நாயக்கா தற்போது முன்னணியில் இருப்பதாகத் தெரியவருகிறது.

அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பை வழங்கும் தமிழ்க் கட்சிகள் கே. பி. ரத்நாயக்காவை ஆதரிப்பதே இதற்கு முக்கிய காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த பிரதமர் யார் என்பது குறித்து நாடாளுமன்ற அரசாங்க கட்சி உறுப்பினர்களிடையே சூடான விவாதங்கள் இடம்பெற்று வருவதாகவும் —

பிரதமர் தெரிவில் இதுவரை கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்ற முடியாத நிலையில் ஜனாதிபதி உள்ளார் எனவும் — தெரிவிக்கப்படுகிறது.

ஐ. தே. கட்சியின் ஆட்சிக் காலத்தில் நாடாளுமன்றத்தில் அக்கட்சி தனித்து அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றிருந்தது அதனால் அக்கட்சியின் தலைவர் எடுத்த முடிவே உறுதியானதாக இருந்தது.

அரசியல் சாசனத்தின்படி அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களின் நம்பிக்கையைப் பெற்ற ஒருவரையே ஜனாதிபதி பிரதமராகத் தெரிவு செய்ய வேண்டும்.

நாடாளுமன்றத்தில் அதிக பெரும்பான்மை அரசுக்கு இல்லாத நிலையில் பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமற்ற ஒருவர் ஜனாதிபதியால் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டால் அது அரசமைப்புப் பிரச்சினையைத் தோற்றுவிக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் அவ்வாறான ஒரு நிலையில் ஐ. தே. கட்சியின் கெடுபிடிகளை தவிர்ப்பதற்கு ஐ. தே. கட்சியின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவரைப் பிரதமராகத் தேர்ந்தெடுக்க வேண்டியும் ஏற்படும்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் யார் அடுத்த பிரதமராகத் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் — நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு அமைய — தற்போது நாடாளுமன்றத்தில் அங்கம்வகிக்கும் தமிழ்கட்சிகளின் கைகளிலேயே உள்ளது.

அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த வேறு பல அமைச்சர்கள் அதிக செல்வாக்குடன் விளங்கிய போதிலும் தமிழ் கட்சிகளின் ஆதரவைப் பெற்ற சபாநாயகரான கே. பி. ரத்நாயகா பிரதமராகத் தெரிவு செய்யப்படுவதை அவர்களால் தடுக்க முடியாது என்பதே அரசியல் வாதிகளின் கருத்தாகும்.

— இவ்வாறு 'ராவய' பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. (உ-10)

## கண்காட்சி

வடமராட்சி, டிச. 27

பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களின் சித்திரக் கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமை தென்புலோலி சாரையடி தொம்சன் அக்கடமியில் நடைபெறவுள்ளது. (ஐ)

## புத்தாண்டு முற்பகுதியில் அமைச்சரவை மாற்றம்?

கொழும்பு, டிச. 27

அடுத்த ஆண்டின் முற்பகுதியில் அமைச்சரவையில் மாற்றங்கள் மேற்கொள்ள வாய்ப்புக்கள் உள்ளன எனத் தெரியவருகிறது.

அமைச்சரவை மாற்றத்தின்போது துறைமுகங்கள், கப்பல்துறை அமைச்சை ஜனாதிபதியே பொறுப்பேற்பார் எனவும்—

அமைச்சர் எஸ். பி. திசாநாயகாவிடமிருந்து விளையாட்டுத்துறை அமைச்சு மீளப்பெறப்பட்டு அது ஜீவன் குமாரதுங்கவிடம் கையளிக்கப்படும் எனவும் — தெரியவருகிறது.

அமைச்சர் அஷ்ரப்பிடமிருந்து துறைமுகங்கள் கப்பற்துறை அமைச்சு மீளப் பெறப்பட்டு அவருக்குக் கிழக்கு மாகாண அபிவிருத்திக்குப் பொறுப்பான அமைச்சு மாத்திரமே வழங்கப்படவுள்ளது எனவும் —

ஜனாதிபதியால் பொறுப்பேற்கப்படவுள்ள துறைமுகங்கள், கப்பற்துறை அமைச்சின் பிரதி அமைச்சராக ரவி கருணாநாயகா நியமிக்கப்படலாம் எனவும்— தெரியவருகிறது.

விளையாட்டுத் துறை அமைச்சு மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்படக்கூடும் என்ற கருத்தும் நிலவுகிறது. (உ-10)

## கலைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், டிச. 26

யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் கலைப் போட்டிகள் இன்றும் நாளையும் நடைபெறவிருக்கின்றன.

பேச்சுப் போட்டிகள் இன்று காலை 9 மணிமுதல் நாவலர் கலாசார மண்டபத்திலும் —

கட்டுரை, கவிதை, பொது அறிவுப் போட்டிகள் நாளை ,, ஒன்பது மணி முதல் வைத்தீஸ்வரக் கல்லூரியில் — நடைபெறும்.

இப்போட்டிகளில் வெற்றி பெறுவோர் மாவட்ட மட்டப் போட்டியில் பங்குபற்றுவர் என சமாஜத் தலைவர் க. நாகேந்திரம் தெரிவித்தார். (உ-3)

### இடம்பெயர்ந்த யாழ். மக்களை

# தேர்தலுக்கு முன் வடக்கே அனுப்புவதற்கு ஏற்பாடு

மட்டக்களப்பு, டிச. 27

குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன்னர் வவுனியாவிலும், திருமலையிலும் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களை யாழ்ப்பாணத்துக்குத் திருப்பி அனுப்பி வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் திரும்ப விரும்புவோரை அங்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகளை வடபகுதி புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபை ஆரம்பிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டில் இருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சி முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் இருந்து பின்னர் வவுனியாவுக்கும் அங்கிருந்து திருமலைக்குச்சென்ற பல குடும்பங்கள் யாழ். திரும்ப கப்பல் வசதி இல்லாததாலும், பாதுகாப்பு அனுமதி வழங்கப்படாததாலும் கடந்த பல மாதங்களாக முகாம்களில் தங்கியுள்ளன. (ஐ-21)

### காணாமற்போனோர் விடயம்:

# ஜனாதிபதியுடன் பேச 12 பேர் கொழும்புக்கு!

குடாநாட்டில் கைதாகி காணாமற்போனோரின் நிலை குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் எதிர்வரும் 29 ஆம் திகதி பேச்சு நடத்துவதற்காக காணாமற்போனோரின் பாதுகாவலர்கள் 12 பேரைக் கொண்ட பிரதிநிதிகள் குழு ஒன்று இன்று கொழும்பு புறப்படவிருக்கிறது.

ஈ. பி. டி. பி. அமைப்பின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்தச் சந்திப்பில் கைதாகி காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம், அன்னையர் முன்னணி ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொள்வர்.

இக்குழுவில் செல்லும் 12 பேரின் விவரம் வருமாறு:

- ★ பரமநாதர் செல்வராசா
- ★ ஐயம்பிள்ளை சிவராசா
- ★ தங்கவடிவேலு விஜயகுமார்
- ★ முத்துக்குமாரு கணேசக்குருக்கள்
- ★ பொன்னம்பலம் ஆறுமுகசாமி
- ★ வல்லிபுரம் செல்வநாயகம்
- ★ திருமதி மீரா அருள்நேசன்
- ★ திருமதி தமிழ்தேவி ஜெயேந்திரன்
- ★ திருமதி இன்பராணி செல்வராசா
- ★ திருமதி சிவாஜினி இராஜேந்திரன்
- ★ திருமதி ஜெயந்திமலர் புண்ணியமூர்த்தி
- ★ திருமதி சோதீஸ்வரி நடராசா

யாழ். நீதி, சமாதான ஆணைக்குழுவின் பிரதிநிதி வண. ஜோ. ஜெயக்குமார், மனித கௌரவத்திற்கான அமைப்பின் செயலாளர் செல்வி. மகேஸ்வரி வேலாயுதம் ஆகியோரும் இச்சந்திப்பில்பங்கு குபற்றுவர். (உ-3-7)

# செயலகத்தில் மீண்டும் பாதுகாப்பு கெடுபிடி!

யாழ்ப்பணம், டிச. 27

யாழ். செயலகப் பகுதியில் பாதுகாப்பு நேற்று முதல் பலப்படுத்தப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும் காலத்தில் அப்பகுதியில் ஏற்படுத்தப்பட்ட மேலதிக பாதுகாப்பு நடவடிக்கைகள் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டதும் தளர்த்தப்பட்டிருந்தது.

திடீரென மீண்டும் நேற்று முதல் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

செயலகத்துக்கு வேலைக்கு செல்லும் ஊழியர்கள் பலத்த சோதனையின் பின்பே செயலகத்துக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

செயலக ஊழியர்களின் வாகனங்கள் தவிர்ந்த ஏனையோரின் வாகனங்கள் செயலக வளவுக்குள் அனுமதிக்கப்படவில்லை. (உ-3-7-9)

# நிகழ்ச்சிகளைப் பதிவு செய்ய வடக்கில் கலைக்கூடம்

யாழ்ப்பாணம், டிச. 27

குடாநாட்டுக் கலைஞர்களின் நிகழ்ச்சிகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் இடம்பெறச் செய்ய வசதியாக அவர்களின் நிகழ்ச்சிகளை யாழ்ப்பாணத்திலேயே பதிவு செய்வதற்கு கலைக்கூடம் ஒன்று இங்கு அமைக்கப்படும்.

நேற்று யாழ்ப்பாணம் வந்த ரூபவாஹினிக் கூட்டுத்தாபன அதிகாரிகள் குழு இது தொடர்பாக யாழ். செயலகத்தில் யாழ். கலைஞர்களின் அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியது.

இலங்கை இசைவேளாளர் சங்கம், இளம்கலைஞர் மன்றம், திருமறைக் கலாமன்றம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் யாழ்ப்பாணத்தில் நிகழ்ச்சிகளைத் தயாரிப்பது தொடர்பாக ஆராயப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் கலைக்கூடம் ஒன்றை அமைத்து யாழ்ப்பாணக் கலைஞர்களின் நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்வது குறித்து மேலும் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக அடுத்த மாதம் 20 ஆம் திகதியும் ஒரு குழு யாழ்ப்பாணம் வரவிருக்கிறது.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்த வடமாகாண மீள்குடியமர்வு அதிகாரசபைத் தலைவர் சோமபாலகுணதீரவுடன் இலங்கை இசைவேளாளர் சங்கப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் நிகழ்ச்சிகளை பதிவு செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தனர்.

இது தொடர்பாக சோமபாலகுணதீர இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவருடன் பேச்சு நடத்தியதையடுத்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் இது தொடர்பாக அச்சங்கத்துக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். (உ-3)

## சுதந்திர...

(ஐந்தாம் பக்கத் தொடர்)

வார்.

இது தவிர புதிய வருடம் வருவதை ஒட்டி கடற்படையிலும் அதிகாரிகள் மட்டத்தில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

★

எமது நிறுவன 25 ஆவது வெள்ளிவிழா ஆண்டில்

ஜனவரி 2 முதல் A/L 2000

★ கலை ★ வர்த்தகப ★ கணித ★ உயிரியல் வகுப்புகள்

எமது வழமையான 'SUPER GRADE' ஆசிரிய குழுவினால் ஆரம்பமாகின்றன.

BITSMANINSTITUTES BMI MANIPAY

BITSMANS INSTITUTES MANIPAY

**கணித உயிரியல்**

பௌதிகவியல் — திரு. ஜெயசீலன
தூய பிரயோக கணிதம்: — திரு. ஐங்கரன்
இரசாயனம் — திரு. ஜெயரூபன், திரு. சிவத்திரன்
விலங்கியல் — திரு. ஞானேந்திரன்
தாவரவியல் — திரு. பாலா

**கலை**

தமிழ், இந்துநாகரிகம் — திரு. பாலா
நாடகமும் அரங்கியலும் — திரு. கந்தவேள்
இந்துசமயம் — திரு. சிவானந்தன்
கிறிஸ்தவம் — திரு. றெஜினோல்ட்
புவியியல் — திரு. [illegible]

**வர்த்தகம்**

பொருளியல் — திரு. சண்
வணிகக்கல்வி — பிரபல ஆசிரியர்
கணக்கீடு — திரு. ராஜன்
புள்ளி விவரவியல் — திரு. தவசேகர்
அளவையியல் — R. P. சர்மா

ஆரம்பம்: 02-01-1998 வெள்ளிக்கிழமை காலை [illegible] மணி (49889)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

எமது புதிய
வெளியீடு
விஜய், பேபிஷாலினி
நடித்த
காதலுக்கு
மரியாதை
வீடியோவிமல்
யாழ்ப்பாணம்.
(52138)

பத்திரிகை விநியோகத்துக்கு
ஆள் தேவை
தினசரி பத்திரிகை விநியோகத்துக்குச் சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் தேவை. உடன் கீழ்க்காணும் முகவரிக்கு 29-12-97 இற்கு முன் நேரில் வரவும்.
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# கிளிநொச்சியில் நேற்று படையினர் தேடுதல்!

வவுனியா, டிச. 27
கிளிநொச்சி மாவட்டத்தில் கிளைமோர் தாக்குதல்கள் தொடர்வதையடுத்து படையினர் தேடுதல் நடவடிக்கை ஒன்றை நேற்று மேற்கொண்டனர்.

இத்தேடுதல் நடவடிக்கையின்போது பெருமளவு குண்டுகள், வயர்கள், வெடிபொருள்கள் ஆகியவற்றைப் படையினர் கைப்பற்றியதாகவும்—

தேடுதலில் ஈடுபட்ட படையினரைக் கண்டு ஓட முயன்ற ஒருவரை படையினர் சுட்டுக் கொன்றதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (164-3)

# அமைச்சு செயலர் பதவிகள்; ஜனவரி முதல் மாற்றம்

கொழும்பு, டிச. 27
அடுத்த ஜனவரி முதல் பல அமைச்சுக்களின் செயலாளர் பதவிகளில் மாற்றங்களை மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

இருப்பினும் ஜனாதிபதியின் செயலர் பதவியில் மாற்றம் ஏதும் இருக்காது எனவும்—

அப்பதவியில் மாற்றம் நிகழவுள்ளது எனப் பரவிய வதந்திகளில் உண்மையில்லை எனவும் — தெரிவிக்கப்படுகிறது.

தற்போது கல்வி அமைச்சின் செயலாளராக பணியாற்றும் எம். டி. ஜி. பீரிஸ் ஜனவரி மாதத்தில் இருந்து ஓய்வு பெறவுள்ளதால் அவரது இடத்திற்கு அன்ட்று சில்வா நியமிக்கப்படவுள்ளார்.

தற்போது மின்சக்தி அமைச்சின் செயலாளராகப் பணியாற்றும் திலக் ரணவிராஜா மகாவலி அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக நியமிக்கப்படவுள்ளார்.

சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் கலாநிதி டட்லி சேனநாயகா ஓய்வு பெறவுள்ளதால் அவரது இடத்திற்கு பொது நிர்வாக அமைச்சில் பணியாற்றும் அமர ஹேவா மத்தும நியமிக்கப்படவுள்ளார். (உ-10)

## புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள்

கொழும்பு, டிச. 27
ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் அடுத்த பாடசாலைத் தவணை ஆரம்பிக்க முன்னதாக வெளியிடப்படவுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜீ. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளையும் அடுத்த மாதம் வெளியிட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (உ-9)

## பாம்பு கடித்த பெண் ஆஸ்பத்திரியில்

வயலில் பாம்பினால் கடியுண்ட பெண் ஒருவர் நேற்று முன்தினம் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

வரணி வடக்கைச் சேர்ந்த பரமு பொன்னம்மா (வயது 45) என்பவரையே பாம்பு தீண்டியது. (ஐ-109)

### மந்துவிலில்..

(முதலாம் பக்கத் தொடர்)
கும் இடையில் மோதல் ஒன்று இடம்பெற்றதாகத் தெரியவந்தது.

இந்த மோதலில் உயிரிழந்ததாகத் தெரிவித்து இளைஞர் ஒருவரின் சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. (உ-31-9)

### வேட்பாளரின்...

(முதலாம் பக்கத் தொடர்)
சந்தித்துப் பேசுவதற்கு தாம் அழைப்பு விடுத்துள்ளதாகவும் —

அந்தச் சந்திப்பின் போது வேட்பாளர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது பற்றிய தமது தீர்மானத்தைத் தெரிவிப்பதாகவும் — ஆணையாளர் கூறினார்.

தீவகப் பகுதிகளுக்கு தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் பிரசார வேலைக்குச் செல்வதற்கு பதுகாப்பற்ற தன்மை நிலவுவது குறித்தும் ஈ. பி. ஆர். எல். எவ் செயலாளர் நாயகம் தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்தார்.

தீவகத்தில் பிரசாரத்துக்கு உரிய பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். (உ-3)

### வேட்பு...

(முதலாம் பக்கத் தொடர்)
செய்யப்பட்டால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் விடுமுறைக்கால நீதிமன்றம் தேர்தல் நீதிமன்றமாக மாறி இத்தகைய வழக்குகளை விசாரித்து இரண்டொரு நாளில் தீர்ப்பு வழங்கும் என்று சட்டத்துறையுடன் தொடர்புள்ள வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

### மாணவி...

(முதலாம் பக்கத் தொடர்)
அமுதா (விடத்தற்பளை) என்ற மாணவியை அந்த விடுதியில் உள்ள அறை ஒன்றுக்குள் கொண்டு சென்ற சிப்பாய் அவர் மீது பலாத்காரம் புரிந்தார் என்றும்— தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட குடும்பப் பெண் உடனடியாக 'புளொட்' அமைப்பிடம் முறைப்பாடு செய்ததாகவும்-

புளொட் அமைப்பினர் அந்த விடுதிப் பகுதியைச் சுற்றிவளைத்ததாகவும் —

குறிப்பிட்ட அறையின் கதவை உடைத்து மாணவியை அவர்கள் காப்பாற்றியதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

பின்னர் அந்தச் சிப்பாய் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக வன்னி மாவட்ட புளொட் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சண்முகநாதன் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டுள்ளார் (உ-21-3)

எமது புதிய
வெளியீடுகள்!
விஜய், (பேபி) ஷாலினி
❖ காதலுக்கு
மரியாதை
(ORI)
சாய்குமாரின்
❖ சென்ரல்
ஜெயில்
வீடியோ CD வெளியீடு
✶ வாசுகி
★ எம். ஜி. ஆர்,
சிவாஜியின்
பழைய பாடல்கள்
சுப்பஸோ வீடியோ
யாழ்ப்பாணம்.
(சி/2484)

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
நியூ பிரியங்கா ஸ்தாபனத்தாரின்
புதுவருட நல்வாழ்த்துக்கள் அன்புடன் உரித்தாகுக!
NEW PIRIYANGA JEWELLERS
நியூ பிரியங்கா ஜுவல்லர்ஸ்
இல. 177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
முக்கிய குறிப்பு:
189, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த நியூ ராதிகா நகைமாடம் தற்போது 25 — 12 — 97 தொடக்கம் நியூ பிரியங்கா நகை மாளிகைக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.
முன்பு இயங்கிய தீபா நகையகம் தற்போது
நியூ பிரியங்கா நகை மாளிகை எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது.
(52119)

Institute of Informatics Studies
Jaffna, Sri Lanka.

COMPUTER COURSES
Next Sessions Starting on Saturday
3rd, January, 1998 at 10-00 a.m.
Diploma in Software Technology
(Special graduation course)
Entry Qualification: A/L - 3 Passes
Duration: Full Time : 12 Months
Part Time : 15 Months
Certificate in MS Office
(The best computer based office management software tool)
WINDOWS 95 MS WORD MS EXCEL MS ACCESS
Programming Languages
C/C++ PASCAL BASIC
Application Packages
dBASE III + LOTUS 123 SMART SUITE COREL DRAW
PAGEMAKER AUTO CAD
* Excellent teaching.
* Payments can be made in instalments.
* 5% Discount on full payment.
* Excellent collection of books.
* Practicals around the clock.
For further details contact:

Institute of Informatics Studies,
- 68, Clock Tower Road, Jaffna.
- Navalar Madam, Karaveddy.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27-12-97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி

# சஞ்சிகை

27 — 12 — 1997 சனிக்கிழமை

ராகம்ஸ்
பட்டுச்சோலை

திருமணம் மற்றும் எல்லா வைபவங்களுக்குமான
முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு
நாட வேண்டிய இடம்,
ராகம்ஸ் பட்டுச் சோலை
24, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.
(சி/2460)

## கருத்துக் கலசம்

மயூரா

### இரு முனைகளில்!

இன்னும் நான்கு நாளகளில் புத்தாண்டு—1998—மலர்கிறது. மேலும் இரண்டு வருடங்களில் இருபதாம் நூற்றாண்டு கழிந்து புதிய நூற்றாண்டு பிறந்துவிடும்.

உலகில் உள்ள நாடுகள் எல்லாம் புதிய நூற்றாண்டுக்குத் தம்மை தயார்ப்படுத்தி வருகின்றன. விஞ்ஞான, தொழில்நுட்பத் துறைகளின் அபரிமிதமான வளர்ச்சிக்கு ஈடு கொடுத்துத் தாமும் முன்னேற வேண்டும் என்ற நோக்கமும் போக்கும் எங்கும் காணப்படுகின்றன.

உலகத்தை ஒரே கிராமமாக்கும் இலக்குடன் தொலைத்தொடர்பு மற்றும் வர்த்தகத் துறைகள் நாளாந்தம் வளர்ந்து வருகின்றன. அத்தகைய ஒரு நிலை விரைவில் எட்டப்பட்டு விடுமோ என்று கருதுமளவுக்கு ''இன்ரர் நெற்''' கணனி யுகம் துரிதமாக வளர்கிறது.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற கோட்பாட்டை செயலளவில் நடைமுறைக்குக் கொண்டு வருபவர்கள் போல—

கணனித் துறையை அடித்தளமாக வைத்து, உலகப் பொது மொழி ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சிகளும் முனைப்புடன் நடந்து வருகின்றன.

உலகக் கிராமம், உலக மொழி என்ற புதிய கோட்பாடுகள் நோக்கி நடை பயிலும் இந்தப் போக்கினால், பூமிப் பந்தின் எட்டுத் திசைகளிலும் படர்ந்து செழித்து வளர்ந்துள்ள கலாசாரங்கள் தேய்ந்து அழிந்து புதிய கலாசாரம் தலையெடுக்கும் சாத்தியமும் உண்டு.

மறுமுனையில் —

மனிதன்விஞ்ஞானத்தின் பெறுபேறுகளை தன்வசம்ஆட்படுத்தியதால் பூமியின் இயக்கத்தில் உண்டாகி வரும் தாக்கங்கள், பாதிப்புகள் எங்கே போய் முடியுமோ என்ற ஏக்கமும் தோன்றியுள்ளது.

பூமியின் இயற்கையான இயக்கத்தைத் தடுக்கும் ஆபத்தான நிலை உருவாகி வருவது இப்போது உலகளாவிய ரீதியில் அக்கறையுடன் பேசப்படுகிறது. உலக வெப்பம் அதிகரித்து வருதல், ஓசோன் படலத்தில் ஓட்டை விழுதல், அவற்றின் விளைவாக கால நிலையில் தலைகிழான மாற்றம், பல ஜீவராசிகள் அழிந்துபோனமை, மனிதனைப் பாதிக்கும் புதிய புதிய கொடிய நோய்களின் அச்சுறுத்துதல் என்பன அவனின் உயிர்வாழ்தலை சந்தேகத்துக்கு இடமாக்கியுள்ளன.

இத்தகைய அச்சுறுத்தல்களால் மனிதன் மட்டுமல்ல உலகமே அழிந்து போகலாம் என்ற கருத்தும் பலமாக முன்வைக்கப்படுகிறது.

அதாவது சமயங்களில், புராணங்களில் பேசப்படும் பிரளயம் ஒன்று நெருங்கிக்கொண்டிருக்கிறது என்ற உணர்வு தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

உலகத்தைச் சுருக்கி ஒரே கிராமமாக்கும் முயற்சி ஒரு முனையாகவும்—

உலகத்தின் அழிவு நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பது இன்னொரு கூர்முனையாகவும்—நிற்கின்றன.

# செவ்வாயில் உயிரினங்கள் இருப்பதற்குச் சாத்தியக்கூறு

'செங்கோள்' என வர்ணிக்கப்படும் செவ்வாய் ஓர் அழகான கிரகம். அதன் சிவப்பு நிறத்தைக்கண்டு தான் எம்முடைய முன்னோர்கள் அதனைப் போர்க்கடவுள் எனப்போற்றி வழிபட்டுவந்தனர்.

சாஸ்திரத்தில் செவ்வாய்க் குற்றம் கிரகபாவம் கூடியதாகக் குறிப்பிடப்பட்டு அதற்கு முக்கிய இடமும் கொடுக்கப்படுகிறது. இந்துக்கள் திருமணப் பொருத்தங்களில் செவ்வாய்த் தோஷத்தை ஆராய்ந்தே முடிவுகளை எடுக்கின்றார்கள். இதில் சில உண்மைகள் இருப்பதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ஒரு மனிதன் புவியில் பிறக்கும் போது உள்ள கிரகங்களின் சஞ்சார ஈர்ப்பு விசை நிலைகள் மனித நரம்பியல், ஆளுமை செயற்பாடுகள் அனைத்திலும் செல்வாக்குச் செலுத்துவது நிரூபணமாகியுள்ளது.

புவியிலிருந்து சுமார் ஐந்தரைக்கோடி கிலோமீற்றர் தூரத்திலுள்ள செவ்வாய் சூரியனை ஒரு முறை சுற்ற ஒரு வருடம் 322 நாள்கள் எடுக்கின்றது. இரண்டு துணைக் கோள்களை (சந்திரன்களை)யுடைய இக்கோள் தன்னைத்தானே ஒருமுறை சுற்ற 24 மணி 37நிமிடங்கள் செல்கின்றன.

1877இல் செவ்வாயின் மேற்பரப்பை ஆராய்ந்த ஜோவான்னி ஸ்கியா என்ற இத்தாலிய அறிஞர் அங்கு நீண்ட நேர்கோடுகளைப் போன்ற எவையோ சிலவற்றைக் கண்டார்.

இதை இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அமெரிக்க விஞ்ஞானி பெர்ஸிவல் செவ்வாயிலுள்ள என்ஜினியர்கள் கட்டிய கால்வாய்களே அவை எனச் சொல்லிப் பரபரப்பை ஏற்படுத்தினார். அத்துடன் அங்குள்ள மக்கள் மிகவும் முன்னேற்றமான பண்பாடும் நாகரிகமும் கொண்டவர்கள்; தொலை நோக்கி மூலம் தெரியும் செந்நிறக் கோடுகள் பாலைவனப்பகுதியில் தண்ணீரைப் பாய்ச்சும் கால்வாய்களாகவும் இடையிடையே தோட்டங்களும் இருக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

இதைக் கேட்ட பலர் மகிழ்ச்சியடைந்தனர். ஆனாலும் விண்வெளி விஞ்ஞானிகள் அவரது கருத்துக்களை நிரூபிக்கப் போதிய ஆதாரங்கள் இல்லை என்றே கூறினர். 1956 ஆம் ஆண்டு கூய்ப்பர் என்ற வானியலறிஞர் செவ்வாயைப்பற்றி மிக விரிவாக ஆராய்ந்ததிலிருந்து அங்கு சிறியவகைத் தாவரங்ககளை விட வேறு உயிரிகள் வாழ வாய்ப்பேயில்லை என்பதை நிரூபித்தார்.


எனினும் இக்கோள் பற்றி 1990தசாப்தத்தில் அமெரிக்க ரஷ்ய, விஞ்ஞானிகள் தீவிரமான ஆய்வுகளை மேற்கொண்டனர். 1993 ஆம் ஆண்டு அமெரிக்கா 'வைகிங்–2' என்ற விண்கலத்தை செவ்வாய்க்கு அனுப்பியது. அக்கலம் இடைவழியில் திடீரென 'ராடார்' திரையிலிருந்து மறைந்ததுடன் தனது தொடர்புகளையும் துண்டித்துக் கொண்டது.

ரஷ்யர்கள் பல வெற்றிகரமான ஆய்வுத் தகவல்களைப் பெற்று 21ஆம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளுக்குள் செவ்வாயில் தனது விண்வெளி வீரர்களை இறக்கத் திட்டமிட்டுச் செயலாற்றி வருகின்றனர்.

இந்த நிலையிலேயே 1997 ஜனவரி மாதம் அமெரிக்க தேசிய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாஸா 'பாத்பைண்டர்' என்ற விண்கலத்தை செவ்வாய்க்கு அனுப்பியது.

இவ்விதமாக 'பாத்பைண்டர்' விண்கலமும் 7 மாதங்களாகப் பறந்து 1997ஜூலை மாதம் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு செவ்வாய்க் கிரகத்தின் தரையை அடைந்தது. வானவெளி ஆய்வில் இது ஒரு பெரு வெற்றியாகும்.

''சார்ல் சாகன் நினைவு வான வெளி நிலையம்'' என்ற பெயரோடு அந்தக் கலம் செவ்வாயின் தரையில் நிலை கொண்டது. அதனுள் இருந்த ''சோஜோனர்'' என்ற தானியங்கி ரோபோ வாகனம் செவ்வாய்த் தரையில் அங்குமிங்குமாக அலைந்து பல்வேறு தகவல்களைத் தனது நுண்ணிய கமராவில் சேகரித்துப் புவிக்கு பல வர்ணங்களில் படங்களாக அனுப்பியது. விஞ்ஞானிகளுக்கு எண்ணிலடங்காத தகவல்கள் கிடைத்தன. 'சோஜோனர்' ஆய்வு செய்த பகுதி மணற்றரையாக —சிறு சிறு பள்ளங்கள், வட்டவடிவமான பாறைகள், தூரத்தில் பெரிய குன்றுகள் உள்ளவையாக — இருந்தன. ஒரு பாலைவனம் போலவே அது தெரிந்தது.



செவ்வாயில் ஓடித்திரியும் சோஜோனர்

எல்லா விண்கலங்களும் றொக்கெட்டுக்கள் மூலமே விண்வெளிக்கு அனுப்பப்படுகின்றன. விமானம் பறப்பது போன்று றொக்கெட் சாதாரணமாகப் பறக்க முடியாது. புவி ஈர்ப்பிலிருந்து அது தப்ப மணிக்கு நாற்பதாயிரம் கிலோ மீற்றர் என்ற வேகத்திற்கு அதிகமான வேகத்தில் புறப்பட வேண்டும். இதை ''விடுதலை வேகம்'' என்பர். இது துப்பாக்கி குண்டின் வேகத்திலும் பத்து மடங்குஅதிகமானது.

பூமி சூரியனைச் சுற்றும் வேகம் மணிக்கு ஒரு லட்சத்து ஆறாயிரம் கிலோ மீற்றராகும்:

விடுதலை வேகத்தைவிடக் குறைவாக றொக்கெட் புறப்பட்டால் சில மைல்கள் அது சென்ற பின் புவியீர்ப்பினால் உறிஞ்சப்பட்டு திணறி இடைவிடாது பூமியைச் சுற்றிக் கொண்டே இருக்கும் நிலைக்கும் தள்ளப்படும். அப்படிச் சுற்றும் வேகத்தை ''வட்ட வேகம்'' என்பர்.

வழக்கமாக விண்கலங்கள் இவ்வட்ட வேகத்தை விலக்கி செங்குத்தாக முதல் புறப்பட்டு பின் சாய்வாகிக் காற்று மண்டலத்துக்கு வெளியே போய் திரும்பி, கிடையாகப் பிரயாணம் செய்யும். அப்போதுதான் குறித்த இலக்கை விண்கலம் அடையும்.

தூரத்தில் வானோடு ஒட்டிய பாரிய வெள்ளைப் பாறைகள், வர்ணப்பாறைகளின் படங்களும் மிகத் தெளிவாக இருந்தன. சோஜோனர், 'யோகி' என்ற பாறையில் ஆய்வை மேற்கொண்டு அதனுடன் மோதியதும் புவியின் கொம்பியூட்டர் திரை வெறுமையாகியது. விஞ்ஞானிகள் திகைத்தார்கள். புவியுடனான சகல தொடர்புகளும் அற்றுப் போயின. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே என விஞ்ஞானிகள் அங்கலாய்த்தனர். எனினும் சோஜோனர் தன்னைப் பாறையிலிருந்து விடுவித்து கணனித் திரையில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டது; எல்லோரும் மகிழ்ந்தனர். விஞ்ஞானிகள் பெருமைப்பட்டார்கள்.

இக்கலம் அனுப்பும் தகவல்களை சூடாக இன்ரர் நெற்றில் பார்க்க ஒரே நேரத்தில் பத்துக் கோடிப் பேர் கொம்பியூட்டர் பட்டன்களைத் தட்டினார்கள் என ஆய்வுகள் மதிப்பீடுகின்றன.

சோஜோனர் அனுப்பும் செய்திகளைத் தவிர பாத்பைண்டர் விண்கலத்தில் பொருத்தப்பட்டிருக்கும் கமெரா மூலமாகவும் செவ்வாயைக் கண் குளிரப் பார்த்து விஞ்ஞானிகள் ஆராய்ந்து கொண்டிருக்கின்றார்கள். அது சுழன்று சுழன்று காட்டும் காட்சிகள் எல்லாம் — பள்ளங்கள், மலைத் தொடர்கள், அழுக்குச் சாம்பல் நிறமான பாறைகள், அவ்வப்போது காற்று அடிப்பதைக் காட்டிக் கொடுக்கும் புழுதி மழை போன்றவை — மிகத் தெளிவாகத் தெரிகின்றன. அத்துடன் ஒரு பெரிய எரிமலையையும் அது படம் பிடித்து அனுப்பியுள்ளது.

டெனிஸ் பல்கலைக்கழகப் பேராசிரியரும் பாத் பைண்டர் தயாரிப்பில் ஈடுபட்டவருமான மெக்ஸலீன் புதிய ஆய்வுகள் பற்றிப் பின்வருமாறு கூறினார்:– செவ்வாயில் உள்ள பாறைகள் வட்ட வடிவமாக உள்ளமையினால் முன்பு உயிரினம் வாழ்ந்து அதன் பின் வெள்ளம் ஏற்பட்டிருக்க சாத்தியமுள்ளது. அது வற்றிய பின், ஆற்று வாயில் வட்ட வடிவ மண் படிவுகள் உருவாகுவதைப் போல''பெல்ட்ஸ்பாக்''என்ற உப்புத் தாதுப் பொருள்கள் செவ்வாய்ப் பாறைகளில் காணப்படுகின்றன.

பூமியில் ஹவாய்த் தீவுப் பகுதிகளில் இவ்வாறான நிலை உள்ளது.

எரிமலை வெடித்த பின் ஏற்படும் பூமி வெடிப்புக்கள் போன்ற சிதைவுகளும் செவ்வாயில் தென்படுகின்றன என்கிறார் இன்னொரு விஞ்ஞானி.

**-பா. தனபாலன்-**

''செவ்வாயில் ஆரம்ப மனிதன் தோன்றியிருக்கிறான். அதன் பின் தற்கால எமது உலகம் போல செவ்வாயில் சூழல் மாசடைதல், நச்சு வாயுக் கழிவுகள், அணுசக்தி வெடிப்பு, கதிர் வீசல்களினால் செவ்வாயில் வாழ முடியாமல் மனிதன் புவிக்கு இடம் பெயர்ந்திருக்கின்றான். இனி மீண்டும் அங்கே போகப் போகின்றான். தற்போது கூட சில வகையான உயிரினங்கள் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றன'' — என்று இன்னொரு விஞ்ஞானி கூறியுள்ளார்.

2007ஆம் ஆண்டு வரை மனிதர்களோடு 4 விண்கலங்களைச் செவ்வாய்க்கு அனுப்ப அமெரிக்கா தீர்மானித்துள்ளது. செவ்வாய் பற்றிய ஆய்வுகள் தொடரும். செவ்வாயில் சில வகை உயிரினங்கள் வாழக் கூடிய பல ஏதுக்கள் இருக்கின்றன என்பது விஞ்ஞானிகளின் ஏகோபித்த முடிவாகவுள்ளது.

(11 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலைப் பகிஷ்கரிக்கும் முயற்சியை

# ஈ. பி. டி. பி., புளொட் முறியடித்தன!

"'கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுந்தம் போனானாம்!''

யாழ் குடாநாட்டின் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் விடயத்தில் ஆறு தமிழ்க் கட்சிகளும் நடந்து கொள்ளும் விதத்தைப் பார்க்கும் போது இந்தப் பழமொழி தான் நினைவுக்கு வருகின்றது.

கடந்த மாதம் மூன்றாம் திகதி குடாநாட்டில் உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடத்தப்படுவது பற்றிய உத்தியோக பூர்வ அறிவிப்பு விடுக்கப்பட்டது. அடுத்த பன்னிரண்டு நாள்களுக்குள் நியமனப் பத்திரம் தாக்கல் செய்வது ஆரம்பமாகி விடும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பு வந்ததும் ஆறு தமிழ்க் கட்சிகளும் தேர்தலை ஒத்திவைக்குமாறு தனித்தனியாக அரசைக் கோரின.

அவற்றின் கோரிக்கைக்கு வெவ்வேறான பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் ஆறு கட்சிகளும் தேர்தலை ஒத்திவைக்கும்படி கோரின; அல்லது ஒத்திவைக்கக் கோருவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்த தக்கவாறு பாவனை செய்தன.

இக்கட்சிகள் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் இப்போது நடைபெறுவதை விரும்பினவோ இல்லையோ, குடாநாட்டு மக்கள் விரும்பவில்லை என்பதே தெளிவான நிலையாகும்.

இப்போது ஒரு தேர்தல் பலவந்தமாக மக்கள் மீது திணிக்கப்பட்டு, அதில் வாக்களிப்பதற்கு குடாநாட்டு மக்கள் உந்தப்பட்டு, அவர்கள் வாக்களித்தாலும் கூட, அது மக்களின் அடி மனதில் இருந்து வந்த — தமது விருப்பத்தை அவர்கள் வெளிப்படுத்துகின்ற — ஒரு நிகழ்வாக இருக்கப் போவதில்லை என்பதும் தெளிவு.

''குடாநாட்டு மக்கள் இப்போது — இந்தச் சூழ்நிலையில் —ஒரு தேர்தலை விரும்பவில்லை; நியாயமான — ஜனநாயக — தேர்தல் நடைபெறும் என அவர்கள் நம்பவில்லை; தமது உள்ளக்கிடக்கைதெளிவாகக்காட்டும் ஒரு தேர்தலுக்கு சந்தர்ப்பம் இதுவல்ல என்று அவர்கள் கருதுகின்றார்கள்'' — எனக் கூறப்படுவதை சகல தமிழ்க் கட்சிகளும் ஏற்றுக் கொள்கின்றன.

இத்தேர்தலை ஒத்திவைக்குமாறு தமிழ்க் கட்சிகள் கோரியதற்கு பல்வேறு பின்னணிகள் உள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, ஈ. பி. ஆர். எல். எவ். போன்ற கட்சிகள் இன்னும் மீண்டும் குடாநாட்டில் சரிவரக் கால் கூட ஊன்றவில்லை. இந்நிலையில் தேர்தல் களத்தில் குதிப்பது, கால்களைக் கட்டிக் கொண்டு ஓட்டப்பந்தயத்தில் குதிப்பது போன்றது என்பது அக்கட்சிகளுக்குத் தெரியும்.

ஈரோஸைப் பொறுத்தவரை தற்போது ஆளணி, அம்பு இல்லாத கட்சி அது. பல நூற்றுக்கணக்கில் வேட்பாளரை நிறுத்தும் ஒரு தேர்தலை — அதுவும் நீண்டகாலமாகத் தான் காலடி எடுத்து வைக்காத ஒரு பிரதேசத்தில் — எதிர் கொள்வது என்பது அக்கட்சிக்கு ''முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போன்ற'' கதை தான். ஆகவே தேர்தல் பற்றிய அறிவிப்பு வந்ததுமே புத்திசாலித் தனமாக ஒதுங்கிக் கொண்டது அக்கட்சி.

புளொட், ஈ. பி. டி. பி. கட்சிகளின் நிலையோ உள்ளூராட்சித் தேர்தல் விவகாரத்தில் இரட்டை வேடப் போக்காகவே இருந்தது தான்—இருப்பதுதான்— மன வேதனை.

இந்த இரு கட்சிகளும் இவ்வாண்டு முற்பகுதியிலேயே யாழ்ப்பாணத்தில் வந்து காலூன்றி விட்டன. எனவே ஏனைய கட்சிகள் யாழ்ப்பாணத்துக்கு வர முன்னர்—அதுவும் மக்கள் மத்தியில் கணிசமான ஆதரவையும், நல்ல அரசியல் அடித்தளத்தையும் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற கட்சிகள் யாழ்ப்பாணத்தில் மீண்டும் காலூன்ற முன்னர்—உள்ளூராட்சித் தேர்தலை நடத்தினால் பல உள்ளூராட்சி சபைகளைப் பிடித்துவிடலாம்; தங்களது கட்சிகளை நிலைநிறுத்திக் கொள்ளலாம் என்பது இந்த இரு கட்சிகளின் நிலைப்பாடாகும்.

இதனால்தான் தேர்தல் பற்றிய அறிவிப்பு வந்து இரண்டு மணித்தியாலத்துக்குள்ளேயே தமது முதன்மை வேட்பாளர் குறித்து அறிவிப்பு விடுத்தது அவற்றில் ஒரு கட்சி,

இந்த இரு கட்சிகளும் தேர்தல் உடனடியாக நடத்தப்படுவதை விரும்பினாலும் கூட—குடாநாட்டு மக்கள் இப்போது தேர்தலை விரும்பவில்லை என்பதால்—தமது விருப்பத்தை பகிரங்கமாக அறிவிக்கவில்லை; அறிவித்து மக்களின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்ளவும் விரும்பவில்லை.

எனவே ஒரு புறத்தில் தேர்தலை ஒத்திவைக்கக் கோருவது போல மக்களுக்கு 'பாவ்லா' காட்டிக்கொண்டு மறுபுறத்தில் தேர்தல் ஆயத்தங்களில் முழுமூச்சாக ஈடுபட்டன இக்கட்சிகள் இரண்டும்.

அதிலும் ஈ. பி. டி. பி. கட்சியின் நிலையோ மிகவும் தர்மசங்கடமானது. அக்கட்சியின் பிரதிநிதிகள் இந்த மாத முற்பகுதியில் தான் ஜனாதிபதியை நேரில் சந்தித்து வடக்குக் கிழக்கில் மாகாணசபைத் தேர்தலை அல்லது உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தும்படி கோரியிருந்தனர். அக்கோரிக்கையை தமக்கு நேரில் விடுக்கப்பட்டு அடுத்த நாளே குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்துவது பற்றிய அறிவிப்புக்கு ஏற்பாடு செய்துவிட்டார் ஜனாதிபதி சந்திரிகா.

எனவே நேரில் ஜனாதியிடம் தேர்தலை நடத்தும்படி கோரிவிட்டு—

குடாநாட்டு மக்களைச் சமாளிப்பதற்காக தேர்தலைத் தாங்கள் ஒத்திவைக்கக் கோருவதான அறிவிப்பை பகிரங்கமாக ஈ. பி. டி. பியால் விடுக்க முடியுமா?

''ஏனைய கட்சிகள் இங்கு காலூன்றவில்லை. இந்நேரத்தில் தேர்தல் நடந்தால் வெற்றி வாய்ப்பு எமக்குப் பிரகாசம். அதனால் தேர்தலை நடத்தும்படி ஜனாதிபதியைக் கேட்டோம். அவரும் அதனை ஏற்று அறிவித்துவிட்டார். ஆனால் தேர்தலை நாங்கள் விரும்பி, வலியுறுத்தி வரவைத்திருக்கின்றோம் என எமது மக்களுக்கு வெளிப்படுத்தினால், தேர்தல் குறித்து அதிருப்தியுற்றிருக்கும் மக்கள் எங்களுக்கு எதிராகத் திரும்பி விடுவார்கள். எனவே தேர்தல் இப்போதைக்கு வேண்டாம் என மற்றைய தமிழ்க் கட்சிகள் கோருவதுபோன்றே நாமும் கோருவதாகக் காட்டிக் கொள்ள வேண்டும். அதே சமயம் அதைப் பெரிதாகப் பகிரங்கப்படுத்தி, அது தான் எங்களது நிலைப்பாடு என ஜனாதிபதிக்கு எட்டும்படி வைத்தால் ஜனாதிபதியே சூடாகிவிடுவார். நீங்கள் கேட்டுத்தானே தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டது என்று பதிலளித்து குட்டைப் போட்டு உடைத்தாலும் உடைத்து விடுவார். எனவே பாம்புக்கு வாலும், மீனுக்கு தலையும் காட்டுவது போல கொழும்புக்குத் தேர்தல் கோஷமும், வடக்குக்கு ஒத்திவைப்புக் கோஷமும் கோருவோம்'' —என்று ஈ. பி. டி. பி. தீர்மானித்தது போல் தோற்றுகின்றது.

இதனால்தான் தேர்தலை ஒத்திவைக்கக்கோரும் கருத்தை பட்டும் படாமலும் இடையிடையே வலியுறுத்துவது போல காட்டிக் கொண்டு விலகி நின்றது ஈ. பி. டி. பி.

இவ்வாறு ஆறு தமிழ்க் கட்சிகளும் குடாநாட்டில் தேர்தல் போட்டி உடனே நடப்பதை தாங்கள் வரவேற்கவில்லை என்று வெளியே காட்டிக் கொள்ள அறிவிப்பு விடுத்ததைப் பார்த்து, ஆறு கட்சியும் சேர்ந்து இதுவிடயத்தில் ஒன்றாகச் செயற்பட்டால் என்ன என்ற யோசனையை கொழும்பில் வைத்தே முன் வைத்தனர் ஈரோஸ் பிரமுகர்கள்.

### உள்ளும் புறமும்
குறுமுனி

ஆனால் இது விடயத்தில் உள்ளொன்று வைத்து புறம் ஓர் அறிக்கை விடும் கட்சிகளால் வெகு 'சிம்பிளாக' அந்த முயற்சி முறியடிக்கப் பட்டது.

அந்த முறியடிப்புடன் கட்சிகள் தேர்தல் களத்தில் குதிப்பதற்காக யாழ்ப்பாணம் வந்திறங்கின.

அப்போதுதான் யாழ்ப்பாணத்திலிருந்து பத்திரிகையாளர்கள் மத்தியிலிருந்தும் படித்தவர்கள் மட்டத்திலிருந்தும், ஆறு கட்சிகளுக்கும் அழுத்தம் பிறந்தது.

''நீங்கள் ஆறு கட்சியினரும் தேர்தல் இப்போது நடத்தப்படுவதை விரும்பவில்லை. தள்ளிப்போடக் கேட்கின்றீர்கள். இங்குள்ள தமிழ் மக்களின் ஏகோபித்த கருத்தும் இதுதான். யுத்த நலிவில் இருக்கும் யாழ். மக்கள் தாங்கள் ஆறுதலாக சிந்தித்து ஜனநாயக வழியில் செயல்படுவதற்கு திட்டங்களை வகுக்க சிறிது கால அவகாசம் கொடுக்க வேண்டும் என்றே கோருகின்றார்கள். இத்தேர்தலை யாழ். தமிழ் மக்களும் விரும்பவில்லை; அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகத் தங்களைக் கூறிக்கொள்ளும் தமிழ்க் கட்சிகளும் விரும்பவில்லை. தமிழ் மக்களும், தமிழ்க் கட்சியும் விரும்பாத ஒன்றை தமிழ் மக்கள் மீது திணிக்க ஜனாதிபதி விரும்பினால் அதற்கு நாம் இடம் கொடுக்கலாமா? அதை ஒன்று சேர்ந்து எதிர்க்க வேண்டாமா? தனித்தனியாக எதிர்ப்பதாகக் கூறி ஒரே கருத்தில் நிற்கும் நீங்கள் ஆறு கட்சியினரும் ஒன்றாகச் சேர்ந்து எதிர்த்து ஜனாதிபதிக்கு தக்க அரசியல் பதிலடி தரக்கூடாதா? தமிழ் மக்களும், தமிழ்க் கட்சிகளும் விரும்பாத ஒன்றை அவர்கள் மீது பலவந்தமாகத் திணிக்க முடியாது என்ற பாடத்தை அரசுக்குப் படிக்க வைக்க கூடாதா? தமது உள்ளூர் நிர்வாகிகளை எப்போது தேர்ந்தெடுப்பது என்ற விவகாரத்தில் கூட தமிழ் மக்களும், தமிழ்க் கட்சிகளும் எடுக்கும் முடிவுக்கு மாறாக தனது தீர்மானத்தை அவர்கள் மீது அரசு திணிப்பதற்கு நீங்கள் இடம் கொடுத்தால், தமிழர் விரும்பாத — தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யாத ஒரு தீர்வுத் திட்டம் தமிழர் மீது திணிக்கப்படுவதை உங்களால் தடுத்து நிறுத்த முடியும் என்று நாங்கள் எப்படி நம்புவது?'' — இப்படி குடாநாட்டு மக்கள் மத்தியிலிருந்து அழுத்தம் பிறந்தது.

இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டதும் அது குறித்து திட்டம் ஒன்றை செயற்படுத்தும் முன் முயற்சிகளில் ஈ. பி. ஆர். எல். எவ். செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஈடுபட்டார்.

தேர்தலைத் திணிக்கும் அரசின் முடிவுக்கு எதிராக ஆறு கட்சிகளும் சேர்ந்து தேர்தலைப் பகிஷ்கரிக்கலாம்; அல்லது வேட்பாளர் நியமனத்துக்கு பொதுப்பட்டியல் ஒன்று போடுவதன் மூலம் தேர்தலைத் தவிர்க்கலாம் என்ற யோசனை முன்வைக்கப்பட்டது. கடந்த சனியும், ஞாயிறும் இது பற்றிய பேச்சுகள் மும்முரமாக நடந்தன.

பொதுப்பட்டியல் போடும் யோசனையை தேர்தலில் விருப்பம் காட்டிய கட்சிகள் ஆரம்பத்திலேயே நிராகரித்து விட்டன.

தமிழ்க் கட்சிகள் தமது எதிர்ப்பைக் காட்டுவதற்கு தேர்தலை ஒன்று சேர்ந்து பகிஷ்கரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஈ. பி. ஆர். எல்.எவ்., ரெலோ, ஈரோஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியன எந்தவித நிபந்தனையுமின்றி ஆதரிப்பதாகக் குறிப்பிட்டு தமது நிலைப்பாட்டைத் தெட்டத் தெளிவாக அறிவித்தன.

அந்த அறிவிப்பு தேர்தலை விரும்பிய ஈ. பி. டி. பி., புளொட் ஆகிய இருகட்சிகளுக்கும் எரிச்சலைத் தந்தது.

ஏனைய நான்கு கட்சிகளும் தேர்தலைப் பகிஷ்கரிக்கக் கோரும் போது தாங்கள் மட்டும் அரசு நடத்தும் தேர்தலுக்கு பின்னால் போவதாகக் காட்டிக் கொண்டால் தேர்தல் முடிவுகள் மூலம் குடாநாட்டு மக்கள் தங்கள் முகத்தில் கரி பூசிவிடுவார்கள் என்பதும் அக்கட்சிகளுக்கு நன்கு தெரியும்.

எனவே ''போட்டியிடவும் தயார்; பகிஷ்கரிக்கவும் தயார்'' என்ற பாணியிலும் ''பகிஷ்கரிப்புக் குறித்து ஏனைய கட்சிகளுடன் பேசத் தயார்'' என்ற பாணியிலும் பத்திரிகைகளுக்கு தகவல் கொடுத்து தாங்கள் இந்தத் தேர்தலை விரும்புவர்கள் அல்லர் என்று குடாநாட்டு மக்களுக்குக் காட்டிக் கொண்டன அக்கட்சிகள்.

என்றாலும் ஆறு கட்சிகளும் ஏகமனதாக முடிவு எடுத்தால்தான் பகிஷ்கரிப்பு நடவடிக்கை நடைமுறைக்கு வரும் என்பதும் —

தாங்கள் இணங்காவிட்டால் மற்றக் கட்சிகளும் வேறு வழியின்றி தேர்தல் களத்தில் குதித்து விடும் என்பதும் —

இவ்விரு கட்சிகளுக்கும் தெரியும்.

அந்த வழியைப் பின்பற்றி தேர்தலுக்கு வழி செய்து விட்டன ஈ. பி. டி. பி. யும் புளொட்டும்.

பகிஷ்கரிப்பு சம்பந்தமாக ஆராய்வதற்கு அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் (ஈரோஸ் தவிர்ந்த) யாழ். மத்திய கல்லூரியில் நடந்த கூட்டத்தில் பகிஷ்கரிப்புத் தொடர்பாக ஏகோபித்த முடிவு வராததற்கு இந்த இரு கட்சிகளுமே காரணம் என்று விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. தேர்தலைப் பகிஷ்கரிப்பதில்லை என்ற முடிவு எடுப்பதற்கு இக்கட்சிகள் கூறிய காரணங்கள் என்னவாக இருந்தாலும், அவை தமிழர் நலன் என்பதற்கு அப்பால் தமது கட்சி — அமைப்பு— நலன் சார்ந்ததே என்பது மட்டும் தெளிவு.

அரசு குடாநாட்டுத் தமிழர்கள் மீது அவர்கள் விருப்பத்துக்கு மாறாக உள்ளூராட்சித் தேர்தலைத் திணிக்கின்றது. அதனை ஒன்று சேர்ந்து முறியடிக்க முடியாத தமிழ்க் கட்சிகளா தமிழர்களின் அபிலாசைகளைத் தீர்க்காத தீர்வுத் திட்டம் தமிழர்கள் மீது அரசால் திணிக்கப்படும் போது அதனை எதிர்த்து சரியான தீர்வுத் திட்டத்தைப் பெற்றுத் தரப் போகின்றன?

இதைத்தான் ''கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுந்தம் போனானாம் என்ற கதை மாதிரி'' எனக் குறிப்பிட்டோம்.

கடைசியாக உள்ளூராட்சித் தேர்தல் குறித்து பல்வேறு காரணங்களைத் தெரிவித்து, இவ்வார தினமுரசில் 'இராஜதந்திரி' என்ற வாராந்தக் கட்டுரையாளர் குறிப்பிட்ட தீர்க்கமான முடிவைத் திரும்ப பிரசுரிக்க விரும்புகின்றோம்.

''இத்தேர்தலில் போட்டியிடும் சகல தமிழ்க் கட்சிகளுமே மாபெரும் வரலாற்றுத் துரோகத்தை இழைத்துள்ளன என்பதை மறுப்பதற்கில்லை'' — என்பதே அது. ✶

## செவ்வாயில்....

(1 ஆம் பக்கத் தொடர்)

பாத்பைண்டர் மூலம் அனுப்பப்பட்ட சோஜோனர் தன்னியக்க ஆய்வுக் கருவி தொடர்ந்து பத்து நாள்கள் இயங்கி பல செய்திப்படங்களையும், போட்டோக்களையும் வீடியோ கமெரா மூலம் அனுப்பியுள்ளது. தற்போது அது ஓய்வு எடுக்கின்றது. அது எப்போது மீளவும் ஆய்வை மேற்கொள்ளும் என்பதை இன்னும் விஞ்ஞானிகள் தெரியப்படுத்தவில்லை. கிடைத்த புகைப்படங்களையும், தகவல்களையும் கொண்டு விஞ்ஞானிகள் புதிய தீர்மானங்களுக்கு வந்துள்ளார்கள். பூமியில் பாலைவனம் இருப்பது போன்று செவ்வாயிலுள்ள பாலைவனப் பகுதியிலேயே சோஜோனர் ஆய்வுகளை நடத்தி இருக்கிறது. எனவே பாலைவனத்தை விட வேறு இயற்கைத் தாவரங்கள், மற்றும் சூழல் உயிரினங்கள் உள்ள பகுதிகளும் செவ்வாயில் இருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது. அது பற்றிய தகவல்களைப் பெற சோஜோனரைப் பயன்படுத்த விஞ்ஞானிகள் திட்டமிட்டு வருகின்றார்கள்.

செவ்வாயில் உயிரினங்கள் சில வாழ்வதுடன் மனிதனுக்குத் தேவையான உலோக சக்தி வளங்களும் கிடைக்கலாம். செவ்வாயில் விண்வெளி ஆய்வு மையமொன்றை அமைத்து அங்கிருந்து ஏனைய கோள்கள், நட்சத்திரங்கள் பற்றி ஆராய வாய்ப்புக்களும் எதிர்காலத்தில் கிடைக்கவுள்ளன. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிச்சயம்

வட்ட நிலா வானில் வந்தால்
வண்ண ஒளி நிச்சயம்.
திடமாகப் படித்திருந்தால்
தேர்வில் வெற்றி நிச்சயம்.

அழுக்கு இல்லா ஆடைதன்னில்
அழகு உண்டு நிச்சயம்.
இழுக்கு இல்லா வாழ்வு தன்னில்
ஏற்றம் உண்டு நிச்சயம்.

துன்பம் வந்து சூழ்ந்த போதும்
துணிவு வேண்டும் நிச்சயம்.
இன்ப வாழ்வு வாழ வேண்டின்
எழுச்சி வேண்டும் நிச்சயம்.

அன்பு நிறைந்த வாழ்வு தன்னில்
அறிவு வளரும் நிச்சயம்.
அன்பும் அறிவும் இணைந்த வாழ்வை
அகிலம் போற்றும் நிச்சயம்.

-கிருஷ்ணசாமி கஸ்தனி-
(ஆண்டு — 4,
மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை)



# புத்தகம்

நல்ல நல்ல புத்தகம் — இது
நன்மை தரும் புத்தகம்

கதை உள்ள புத்தகம் — இது
கருத்து நிறைந்த புத்தகம்

சிரிப்புக் காட்டும் புத்தகம் — இது
சிந்தனையூட்டும் புத்தகம்

கல்வி தரும் புத்தகம் — நல்ல
கருத்துக் குவியல் புத்தகம்

அழகு வண்ணப் புத்தகம் — இது
அருமையான புத்தகம்

கோயில் போலப் புத்தகம் — இது
கொள்ளை அழகுப் புத்தகம்.

-இ. பிரதீப்
(ஆண்டு — 4,
கைதடி குருசாமி வித்தியாலயம்)

# முக்கியமானவை மூன்று

★ மதிக்க வேண்டிய மூன்று:-
முதுமையானோர், மார்க்கம், சட்டம்.
★ நேசிக்க வேண்டிய மூன்று:-
நேர்மை, தூய்மை, கடின உழைப்பு.
★ போற்ற வேண்டிய மூன்று:-
அறிவு, அழகு, பண்பு.
★ பேணி வளர்க்க வேண்டிய மூன்று:-
திருப்தி, தைரியம், மனமகிழ்ச்சி.
★ தவிர்க்க வேண்டிய மூன்று:-
புகைத்தல், மதுவருந்துதல், சூதாடல்.
★ அடக்க வேண்டிய மூன்று:-
நா, சோதனை, கோபம்.
★ கட்டாயம் கவனிக்கவேண்டிய மூன்று:-
பேச்சு, நடைமுறை, செயல்கள்.
★ ஆதரிக்க வேண்டிய மூன்று:-
வாக்குறுதி, நட்பு, அன்பு.
★ ஒழிக்க வேண்டிய மூன்று:-
திருட்டு, சோம்பல் பொய்.
★ விரும்ப வேண்டிய மூன்று:-
கருணை, நற்குணம், மன அமைதி.
★ வெறுக்க வேண்டிய மூன்று:-
பெருமை, அநீதி, வாக்குமீறல்.
★ தப்பித்துக்கொள்ளவேண்டிய மூன்று:-
தீயஎண்ணம், பொறாமை, பிடிவாதம்.
★ அஞ்ச வேண்டிய மூன்று:-
களவு, கோள், பொய்.
★ எதிர் கொள்ள வேண்டிய மூன்று:-
கவலை, பயணம், மரணம்.
★ போரிட வேண்டிய மூன்று:-
தேசம், கண்ணியம், நட்பு.

கா. சங்கீதா.
(ஆண்டு 10, சாவகச்சேரி இந்து)
து. இந்திரவதனா.
(ஆண்டு 7, உடுப்பிட்டி மகளிர்.)

# மூளைக்கு வேலை

ஓர் ஆஸ்பத்திரியில் அடுத்தடுத்து ஐந்து நாள்களில் பிறந்த ஐந்து குழந்தைகள் குறித்து 15 குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றை வைத்துக் கொண்டு எந்தப் பெற்றோருக்கு, என்ன திகதியில், எந்தக் குழந்தை பிறந்தது என்பதை உங்களால் கண்டுபிடிக்க முடிகின்றதா பார்ப்போம்.

| | ஏப 29 | ஏப 30 | மே 1 | மே 2 | மே 3 |
|---|---|---|---|---|---|
| குழந்தை | | | | | |
| அம்மா | | | | | |
| அப்பா | | | | | |

1) பார்வதி—ரகுபதியின் மனைவி.
2) மாலதி பிறந்தது மே 2ஆம்திகதி.
3) காஞ்சனா ஏப்ரல் மாதம் பிறக்கவில்லை.
4) கோபு—அர்ச்சனாவின் கணவனல்லர்.
5) பாபுவின் தகப்பனார் சேகர்.
6) காஞ்சனாவின் அம்மா பார்வதி.
7) ராஜாவின் தகப்பனார் கணபதி.
8) மே மாதம் முதலாம் திகதி பிறந்தது பெண்குழந்தை.
9) கிட்டு பிறந்தது ஏப்ரல் 30இல்.
10) வைதேகி சேகரை மணந்து கொண்டவள்.
11) மீனாவின் குழந்தை பிறந்தது மே 2இல்.
12) மாலதியின் தகப்பனார் பாலு.
13) வசந்தாவிற்குப் பிறந்தது ஆண் குழந்தை.
14) மே 3ஆம் திகதி பிறந்தது ஆண் குழந்தை.
15) வைதேகியின் மகன் ஏப்ரல் 29இல் பிறந்தான்.




அந்த மூன்று இசைக்கலைஞர்களும், ஒரு முக்கிய இசை நிகழ்ச்சிக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். மாலையில் கச்சேரி. வழியில் ஒரு பெரிய ஆறு குறுக்கிட்டது. வழக்கமாக அதில் அதிக நீர் இருக்காது. ஆகவே இடுப்பு வரையுள்ள நீரில் நடந்து கடந்து விடலாம். ஆனால், அவர்கள் துரதிர்ஷ்டம் அது காட்டாறு. ஆகையால் அன்று திடீர் வெள்ளம் கரை புரண்டு ஓடியது. ஆற்றைக் கடக்க உள்ள பாலமோ, ஐம்பது மைல்களுக்கு அப்பால் இருந்தது. அங்கு போய்ச் சேர இரவாகி விடும். அவர்களுக்கு நீந்தவும் தெரியாது. அந்த வெள்ளத்தில் நீந்தத் தெரிந்தவர்களும் திக்குமுக்காடிப் போவார்கள். தவித்தார்கள் சங்கீதக்காரர்கள்.

திடீரென்று அவர்கள் பார்வையில் ஒரு படகு தென்பட்டது. அதன் அருகே இரு சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். உடனே ஓடினார்கள். பையன்களிடம் தங்களை அக்கரையில் கொண்டு சேர்த்தால் கை நிறையக் காசு தருவதாகக் கூறினார்கள்.

''காசு தறீங்க சரிதான். ஆனா இந்தப் படகைப் பார்த்தீங்களா? இது ரொம்ப சின்னது. இதில் இரண்டு சிறுவர் அல்லது ஒரு பெரியவர்தான் போகமுடியும். உங்களில் ஒருவர் படகில் மறுகரைக்குப்போனால் — படகைத் திரும்ப யார் இங்கு கொண்டு வருவது? உங்களோடு எங்களில் ஒருவர் வரமுடியாது'', ''படகு கனம் தாங்காது''— என்றான் சிறுவர்களில் ஒருவன். இசைக்கலைஞர்கள் இடிந்து போனார்கள்.

சட்டென்று ஒரு பையனுக்கு ஒரு யோசனை தோன்றியது. ஒரு மணியில் மூன்று பாட்டுக்காரர்களும் படகின் மூலம் அக்கரை போய்ச் சேர்ந்தார்கள். எப்படி?




சிறுவர், சிறுமியரே! மேலே உள்ள கோலத்தில் நான்கு விதமான குறியீடுகள் உள்ளன. ஒவ்வொன்றிலும் இரண்டு இரண்டு உள்ளன. ஒத்த குறியீடுகள் இடையே பின் வரும் நிபந்தனைகளுடன் பாதை ஏற்படுத்த வேண்டும்.

i) கோலத்தில் உள்ள கோடுகள், வட்டங்கள் வழியாகவே பாதை இருக்க வேண்டும்.

ii) ஒரு வட்டத்துக்குள் இருபாதைகள் நுழையக்கூடாது.

iii) ஓர் இனக்குறியீட்டுக்கான பாதையை மற்றைய தோர் இனக் குறியீட்டுக்கான பாதை வெட்டவோ, குறுக்கிடவோ கூடாது. உங்களால் இயலுமா பாருங்கள்!

(விடை XI ஆம் பக்கத்தில்)





சிறுவர், சிறுமியரே!... இது ஒரு வார்த்தை விளையாட்டு. மேலே உள்ள வட்டத்தில் ஒன்பது எழுத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த ஒன்பது எழுத்துக்களையும் நீங்கள் முன்னும் பின்னுமாக எப்படிவேண்டுமானாலும் எத்தனை தடவை வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.


இதன் மூலம் உங்களுக்கு நிறையத் தமிழ் வார்த்தைகள் கிடைக்கும். குறைந்தது இருபத்தைந்து வார்த்தைகளாவது உங்களால் உருவாக்க முடியுமா என்று பாருங்கள்.

# முயன்று பாருங்கள்!

1) கீழேயுள்ள பாதையில் A யிலிருந்து B க்குச் செல்ல வேண்டும். ஆனால் ஒரு நிபந்தனை இங்குள்ள எல்லா வீதிகள் வழியேயும் நீங்கள் சென்றிருக்க வேண்டும். அதுவும் ஒரு வீதி வழியே ஒரு முறைதான்; நடந்த வழியில் மறுபடி திரும்ப நடக்கக் கூடாது. எங்கே நடந்து காட்டுங்கள்.




2)



இந்தப் படத்தில் உள்ள கோலவடிவத்தை நான்கு துண்டுகளாக்கி, அத்துண்டுகளை இணைத்தால் ஒரு சதுரம் உருவாகும். எங்கே உங்களால் முடியுமா பாருங்கள்!

(விடை XI ஆம் பக்கத்தில்)

# பேராசைக்கார நரி

ஒரு காட்டில் வேடன் ஒருவன் அம்பு எய்து மானைக் கொன்றான். மான் கீழே விழுந்தது.

அந்நேரத்தில் பெரிய முள்ளம் பன்றி ஒன்று ஓடி வருவதை அந்த வேடன் கண்டான். அதையும் கொல்ல எண்ணி அதன் மீதும் அம்பு எய்தான்.

அம்பு தைத்த முள்ளம் பன்றி அந்தக் கடும் வலியுடன் வேடன் மீது வேகமாய் பாய்ந்து தனது முட்களால் தாக்கியது. வேடன் கீழே விழுந்து இறந்தான்.

அம்பு பட்ட வேதனையுடன் காட்டில் இப்படியும் அப்படியும் புரண்டு முள்ளம் பன்றியும் இறந்தது. அப்படி முள்ளம்பன்றி புரண்டபோது அதன் உடலுக்கு அடியில் சிக்கி பாம்பு ஒன்று மாண்டது.

சிறிது நேரம் ஆயிற்று. அவ்வழியாக ஒரு நரி ஓடி வந்தது. நான்கு இறந்த உடல்களைப் பார்த்ததும் அதற்கு சந்தோஷத்தில் தலைகால் புரியவில்லை. குதித்து ஆடத் துவங்கியது. அடடா! எவ்வளவு சுவையான விருந்து. இனிமேல் பல மாதங்கள் வரை பசியும் பட்டினியும் இல்லை

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சினிமா

## தரையில் கால் பாவாத அந்தரத்தில்.....!

சினிமாவைக் கனவுத் தொழிற்சாலை என்பார்கள். அந்தவர்ணிப்போடு நடப்பு தமிழ்ச் சினிமாவைப் பார்க்கும்போது, அது நம்பமுடியாத அதீத கற்பனைகளின் கலவையே எனக் குறிப்பிடலாம். யதார்த்த வாழ்க்கை துன்பமும் துயரமுமாய்ப் பல்வேறு பிரச்சினைகளின்



வலைப்பின்னலாகக் கழிந்து கொண்டிருக்கிறது. சாமானிய மனிதன் தனது புறவாழ்வில் சதா அல்லாடுகிறான். வாழ்க்கை சொல்ல முடியாதவாறு தலை புரண்டும் நிலை குலைந்தும் நடமிடுகிறது. வாழ்க்கையின் சுழிப்பில் சிக்கி, அடிபட்டு மிதிபட்டு மனிதப் புழுக்கள் போராடுகின்றன. தோல்வி காண்பவன் மறைந்தழிந்து போகிறான். மற்றவனோ சதா போராடிப் போராடியே காலங்கழிக்கிறான். வெற்றி பெற்ற மனிதனென்று எவனுமேயில்லை. ஓர் இலக்கின் உச்ச நிறைவான வெற்றியும் நிரந்தரமற்ற ஒரு மாயையே. பிரச்சினைகள் சதா ஒவ்வொரு வடிவத்தில் தோன்றிக் கொண்டிருக்க, அவற்றை எதிர்கொள்வதாகவே மனிதவாழ்வு இருக்கிறது.

ஆனால் நடப்பு தமிழ்ச் சினிமாவோ யதார்த்தத்திலிருந்து பல அடி உயரத்தில் அந்தரத்தில் நின்றவாறு வாழ்க்கையைத் தரிசிக்கின்றது. போலியான, கற்பனையான வாழ்வியல் முறைமையை வெளிப்படுத்தியும், ரசிகர்களை மயங்க நிலையில் வைத்து, அவர்களது சுய தேடலுக்கான சந்தர்ப்பத்தை நிராகரித்து விட்டு, தவறானதும் யதார்த்தத்துக்குப் பொருந்தாததுமான கற்பனையான முடிவுகளை முன்வைத்தும் இன்றைய தமிழ்ச்சினிமா கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கிறது.



இன்றைய தமிழ்ச்சினிமாவின் கதைகளை எடுத்து நோக்கினால் சாராம்சத்தில் அவற்றை நான்காகப் பிரித்துக் கூறி விட முடியும்.

★ முதலாளி — தொழிலாளி சம்பந்தமானது

நீண்டகாலமாகவே சமூகத்தில் இருந்து வருகின்ற இந்த வர்க்கப் பிரச்சினையை தமிழ் சினிமா இலகுவாகவே சுவீகரித்து விட்டது. முதலாளியைக் கொடுமைக்காரனாகக் காட்டும் படங்களே அதிகம். அதை எதிர்த்து வெற்றி பெறுவதாகக் காட்டுவதே அதிக படங்களின் தொனிப்பொருள். முதலாளிக்கு எதிராகத் தொழிலாளர் கிளர்ந்தெழுவர். அதற்குக் கதாநாயகன் தலைமை தாங்குவான். முதலாளியின் மகளுக்குக் கதாநாயகனுடன் காதல் வரும். பலத்த போராட்டத்தின் பின்னர் இருவரும் ஒன்று சேர்வர். தொழிலாளி முதலாளியானதும் தொழிலாளர் மகிழ்வர். இவ்வாறான பல படங்கள் வெளிவந்துள்ளனவெனினும், சரத்குமார் நடித்த 'கூலி' இதற்கு அண்மைய நல்ல உதாரணமாகும். ஆனால் இவ்வாறான படங்கள் வர்க்கப் பிரச்சனையின் அடிப்படைகளையோ, அதற்கான தீர்வுகளையோ முன்வைக்கத் தவறுவது மட்டுமன்றி, தவறான — போலியான — தீர்வினை முன்வைத்து மாயக் குழப்பத்தில் ரசிகர்களை ஆழ்த்தி விடுகின்றன.

வேறுசில படங்கள் பரோபகார சிந்தனையுடைய நல்ல முதலாளியைச் சித்திரித்துக் காட்டுவனவாக உள்ளன.



ஆனால்அவரது சிந்தைக்குமாறாக அவரதுஉறவினர்கள் அல்லது இன்னொரு முதலாளி சதி செய்வதாகவும், இறுதியில் கதாநாயகனின் உதவியுடன் அடிதடி சண்டை மூலம் அச்சதி முறியடிக்கப்படுவதாகவும் இப்படங்கள் அமையும். அண்மையில் வெளிவந்த 'சூரிய வம்சம்' முதலான படங்கள் இவ்வாறானவையே.

★ காதல் சம்பந்தமானது

காதலின் ஜீவனேந்தியே பிரபஞ்சம்உயிர்த்திருக்கிறது. அதன் உன்னதமான பெறுமானம் சினிமாவில் மெருகேறி, ஜீவனுடன் மிளிர்ந்துள்ளதெனின் அது பொய்யல்ல. காதலைத் தமிழ்ச் சினிமாமிக லாவகமாகக் கையாண்டு, ஓரளவு வெற்றியும் பெற்றிருக்கிறதுதான். ஆனால், காதலைக் கடைச்சரக்காக்கி, மாயாவிநோதம் பண்ணும் படங்களுக்கு தமிழில் பஞ்சமில்லை. நாகேஸ்வரராவ் — பானுமதி காலத்திலிருந்து எம். ஜி. ஆர் — சிவாஜி — கமல் — ரஜனி காலங்கடந்து இன்று வரை தமிழ்ச்சினிமாகாதலை உருப்படியில்லாமல் அரைத்துச் சிந்தி விட்டிருக்கிறது எனக் கூறின், அது மிகையல்ல. ஒரு பெண்ணை ஓர் ஆணோ காதலிக்க அல்லது ஓர் ஆணை ஒரு பெண்ணோ காதலிக்க அந்நபர் வேறொருவரைக் காதலிப்பது என்கிற முக்கோணக்காதல் கதைகளும், இருவரின் காதல் வாழ்வுக்குச் சவாலான கதைகளும் கொண்ட படங்கள் அதிகம்.

ஒருவரின் காதலுக்கு உதவ இன்னொருவர் செல்கிறார். அவர் ஆடிப்பாடிக் காதலியை மயக்குகிறார். கடை



சியில் உதவப் போனவரும், முதலாமவரின் காதலியும் ஒன்று சேர, அதற்கு முதலாமவர் உதவுவது என்ற ரீதியில் பொன்விழா ஆண்டு கண்ட ஏ. வி. எம். நிறுவனம் வெளியிட்ட **'மின்சாரக் கனவு'** படம் அமைகிறது. இப்படம் மூன்று விருதுகளை இசை, நடன அமைப்பு, பாடல் என்பவற்றுக்காகப் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனால், என்வரையில் இது ஐம்பதாண்டு அனுபவத்தில் விளைந்த குப்பை என்றுதான் சொல்ல வேண்டும்.



இன்னொரு அண்மைய படம் **'லவ்டுடே'**. அவன் அவளைக் கலைத்துக் கலைத்து விரும்புகிறான். அவளோ விலகி விலகி மறுக்கிறாள். இறுதியில் அவன் அலுத்துப் போகும் போது அவள் விரும்புகிறாள். அவனோ வேதாந்தம் பேசி நிராகரிக்கிறான். இந்தப்படம் எதை முன்வைக்க எண்ணுகிறது? இப்படத்தின் சமூகப் பயன் என்ன? ஆனால், இந்தியாவில் இந்தப் படம் 'சக்கைப் போடு' போட்டு ஓடியிருக்குமென்பது திண்ணம். டைரக்டர்களான எஸ். ஏ. சந்திரசேகரர்–ஷோபா ஆகியோரின் மகனான விஜய் இந்தப் படத்தின் கதாநாயகன். இவ்வாறு அவர் பல படங்களிலும் வந்துள்ளார். விஜயிடம் இயல்பான நடிப்புக் கிடையாது. ஆனால் எப்படியோ 'இளைய தளபதி'யாகப் பவனி வர முடிகிறது.



யாழ்ப்பாணத்து மாணவர்களில் பலரும் — குறிப்பாக மாணவிகள்— விஜயின் படங்களை விரும்புவதை பல இடங்களிலும் அவதானிக்க முடிந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. அண்மைய படங்களான **'பூவே உனக்காக'**, **'சூர்யவம்சம்'**, **'ஒன்ஸ்மோர்'**, **'இந்தியன்'** என எந்தப் படத்திலும் காதல் நுழையாது இருக்கும் படங்களென்று இல்லை.

★ குடும்ப உறவு சம்பந்தமானது

மனிதவாழ்வு அன்புறவுகளின் சாரத்திலேயே நிலைத்திருக்கிறது. உறவின் பரிபூரணம் மேன்மையானது; வாழ்வுக்கு அர்த்தத்தைக் கொடுப்பது. அந்த வகையில் உறவுகளும், உறவுப் பிரச்சினைகளும் முக்கியத்துவம் மிக்கனவாக உள்ளன. தமிழ்ச்சினிமா அதற்குள்ளும் ஊடுபோய்ச் சிலவற்றை அள்ளி வந்திருக்கிறது. கணவன் — மனைவி உறவுப் பிரச்சினை, தாய் — தந்தை — பிள்ளை பாசப் பிரச்சினை, அண்ணன் — தங்கை அன்பு, கடமைக்கும், உறவுக்குமிடையிலான போராட்டம் எனக் குடும்ப உறவுகளை மையப்படுத்திய படங்களுக்கும் தமிழ்ச்சினிமாவில் குறைவில்லை. சிவாஜிகணேசன் நடித்து வெளியான **'பாசமலர்'** போன்ற தன்மையில் இன்றுவரை வெளிவந்த படங்களை ஒரு நீளமான பட்டியலிடலாம். இன்று, ரி. ராஜேந்தர் தனது படமொன்றிற்கு **'தாய் தங்கை பாசம்'** எனத் தலைப்பிடுமளவிற்கு இது மலிந்துள்ளது.

★ அடிதடி, வீரம்தீர சம்பந்தமானது

ஒருவனை வீரனாகக் காட்டுகின்ற படங்களுக்கு அண்மைய படங்களிலிருந்து ஆயிரம் உதாரணம் சொல்லலாம். ரஜனிகாந்தின் பெரும்பாலான படங்கள் இந்த வகையினதே. இன்று சத்யராஜ், விஜயகாந்த், சரத்குமார், அர்ஜுன், விஜய், கார்த்திக், பிரபு என ஒரு அடிதடிப் பட்டாளமே திரையுலகில் நடமாடுகின்றது. பெண்களுள் விஜயசாந்தியும் இவ்வாறான சண்டைக்காரியே. ரீ. ராஜேந்தர் தன்னுடைய படங்களில் அடிதடியைப் பிரயோகித்தே முன்னேறியுள்ளார்.

எனவே, நடப்பு தமிழ்ச் சினிமா இந்த நான்கு வகைத் தன்மைகளையும் கொண்ட ஒரு கலவையாகவே காணப்படுகிறது. நகைச்சுவையும் அதில் ஓர் அம்சமாகக் கலந்துள்ளது.


இவைதவிர, வித்தியாசமான படங்களும் அண்மையில் வராமலில்லை. சுஹாசினி மணிரத்னத்தின் இயக்கத்தில் வெளியான முதல் படமான **'இந்திரா'**, கமல்ஹாசனின் சில படங்கள்—குறிப்பாக மணிரத்னம் இயக்கிய **'நாயகன்'**, பின்னர் வந்த **'குணா'**, **'இந்தியன்'**, **'குருதிப்புனல்'**, **'தேவர் மகன்'**, **'நம்மவர்'**, **'மகாநதி'** போன்றன. நாசரின் இயக்கத்தில் வெளிவந்த **'அவதாரம்'**, **'தேவதை'**, மற்றும் பாலுமகேந்திரா, பாலச்சந்தர், மணிரத்னம், பாரதிராஜா படங்களிலெல்லாம் வித்தியாசமான — புதுமையான—தன்மைகளை இனங்காணமுடியும். ஆனால் அந்த வித்தியாசங்கள் அல்லது முன்னேற்றங்கள் கூட, தமிழ்ச் சினிமாவின் ஆரோக்கியமான பக்கங்களெனக் கொள்ளமுடியாதவையாகும்.

கிராமத்து உயிர்ப்பைக் காட்டும் படங்கள்,ஒரு கிளையாக இன்று படர்ந்து வருவதைக் காணலாம். பாரதிராஜாவின் படங்கள் கிராமப் பகைப்புலனைக் கொண்டமைந்தவையே. ஆனால் அவர் கிராமத்தின் சரியான

- இயல்வாணன் -

முகத்தை வெளிப்படுத்தத் தவறி விடுகிறார். அதுமட்டுமன்றி கிராமத்தையே ஒப்பனைப்படுத்திக் காட்டி விடுகிறார். அண்மையில் அவர் இயக்கிய **'கருத்தம்மா'** என்ற படம் தமிழகத்தில் பின்தங்கிய கரிசல் காட்டுப் பிரதேசத்தை மையமாகக் கொண்ட படமாகும். நாட்டுப்புற இசையைத் தனது முதல்படமான **'அன்னக்கிளி'**யிலேயே இளையராஜா கையாண்டு வெற்றி பெற்றார்அதைத்தொடர்ந்து இன்று பல்கலைக்கழகப் பேராசிரியர்களான டாக்டர். விஜயலக்சுமி —, நவநீதகிருஷ்ணன் தம்பதிகள் நாட்டுப்புற இசை, கூத்து என்பவற்றை உள்ளடக்கிய **'நாட்டுப்புறப் பாட்டு'** என்ற படத்தை வெளியிட்டனர். அதற்கிருந்த வரவேற்புக் காரணமாக, நாட்டுப்புற நாயகன்' 'எட்டுப்பட் டிராசா' என்று கிராமியப் படங்கள் சில வெளியாகியுள்ளன.

தமிழ்ச் சினிமாவைப் பொறுத்தவரை ஒளிப்பதிவில், இசையில், படத்தொகுப்பில், கலையில் எல்லாம் முன்னேற்றங்களும் புதுமைகளும் ஏற்பட்டுள்ளதைக் மறுக்க இயலாது. பாலுமகேந்திரா, ஸ்ரீராம், கே.வி.



ஆனந்த், அசோக்குமார முதலியோர் அண்மைக்காலத்தில் ஒளிப்பதிவில் அதிக கவனத்திற்குரியவர்கள். பாலுமகேந்திரா இந்திய சினிமாவிலும், அதற்குஅப்பால் உலகளவிலும் ஒளிப்பதிவு தொடர்பாக அறியப்பட்டவர்.(அவர் இலங்கையின் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவரென்பது குறிப்பிடத்தக்கது).

இளையராஜாவும், ஏ.ஆர். ரஹ்மானும் அண்மைய தமிழ்ச் சினிமா இசையில் கூடுதல் பங்களிப்பை வழங்கியுள்ளனர். புதிது புதிதான நுணுக்கமான இசை வடிவங்களை இவர்கள் கையாண்டுள்ளனர். என்றாலும் மேற்கத்தைய பாணிப் பிரதிசெய்தலையும் இவர்கள் மேற்கொண்டுள்ளமை, பலவீனமான செயலே. ரஹ்மானின் இசையில் அற்புதமான பாடல்கள் பல அண்மையில் வெளிவந்துள்ளன. **'இந்திரா'** படத்தில் 'நிலாக் காய்கிறது நேரந் தேய்கிறது யாரும் ரசிக்கவில்லையே' என்ற பாடல் எளிமையான இசையில் வந்த லாவகமான வெளிப்பாடாகும். அதுபோல, படத்தொகுப்பிலும் (Editing) பல்வேறுபட்ட முன்னேற்றங்களைக் காணலாம். பீ. லெனின், வி. ரி. விஜயன் ஆகியோரின் பங்களிப்பு இதில் அதிகம்.

இவற்றில் ஓரளவு முன்னேற்றங்கள் அவதானிக்கப் பட்டுள்ள போதும் ஒட்டு



மொத்த தமிழ்ச்சினிமாவை எடுத்து நோக்கும் போது, அதற்கு எத்தகைய நோக்கம் இருக்கிறது? அது யாருக்கு எதைச் சொல்ல முற்படுகிறது? சொல்லும் சேதி காத்திரமானதா? மக்கள் மனதில் உண்மையான உணர்வை இவை தோற்ற வைக்கின்றனவா? — என்பது போன்ற அடிப்படையான வினாக்கள் எழுகின்றன.

இங்கே நமது மரபோடு தமிழ்ச்சினிமாவைப் பொருத்திப் பார்ப்பது உகந்ததாயிருக்கும். தமிழ்ச்சினிமா என்பது இந்தியப் பிராமணியச் சிந்தனைப் போக்கை உடையது. தமிழகத்திலுஞ்சரி, இங்கும் சரி, வாழும் ரசிகர்களும் பெரும்பாலும் இந்துமதச் சாரங்களில் தம்மை நிலைநிறுத்திக் கொண்டவர்களாகவே உள்ளனர். வேறு மதத்தவர்களாயினும் அவர்களுங்கூட இந்தச் சாரங்களில்

(IX ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# துணை

மழை கொட்டிக்கொண்டிருந்தது

நீண்டநாள் தாகத்தைத் தணித்துக் கொள்ளுமாப் போலப் பூமியும் விடாமல் உறுஞ்சிக் கொண்டுதானிருந்தது. முற்றத்து மண்ணிலே மழைத்துளிகள் வரைகின்ற கோலத்தை வேடிக்கை பார்த்தபடிஅமர்ந்திருந்தேன்

குமிழிகள் உருவாவதும் உடைவதும்...

மனித வாழ்க்கையும் இப்படித்தானே! வாழ்விலே நிறைந்த சந்தோஷம் இருந்தாலும் ஆத்மதிருப்தி ஏற்படாது. இடையிடையே துன்பத்தின் சாயலும் தென்படவேண்டும்.

அப்போதுதான் இன்பம் என்பது உயர்வானதாக, அதிகப் பெறுமதியுடையதாக இருக்கும்.

இன்று ஞாயிற்றுக்கிழமை. எனக்கு ஓய்வு நாள். பிள்ளைகள் இருவரும் ரியூசனுக்குப்போய்விட்டார்கள்.

மழை பெய்வதனால் பரிபூரணமான ஓய்வினை இன்றுதான் அனுபவிக்க முடியும்.

கால்களை நன்றாக நீட்டிச் சாய்ந்து கொண்டேன்.

''தம்பி! தேத்தண்ணியைக் குடி''

நிமிர்ந்து பார்த்தேன்.

அக்கா கையிலே தேநீர்க் கோப்பையுடன் நின்றாள்.

எனது கண்களைச் சந்தித்ததும் அவளது முகத்திலே புன்முறுவல் நெளிந்தது.

...''என்னடா கடும் யோசினை?...''

...''ஒன்றுமில்லை யக்கா. சும்மா மழையைப் பார்த்துக் கொண்டிருக்கிறன்...'' என்றவாறு தேநீரை வாங்கினேன்.

அக்கா என்னைவிட ஐந்து வயதுமூத்தவள். நல்லகறுப்பு. ஆனாலும் அவள் அணிந்துள்ள மூக்குமின்னியும் சிரிக்கும்போது பளீரிடும் பல்வரிசையும் அவளுக்குப் பேரழகைத் தரும்.

மிகுந்த அமைதியானவள். மனதிலுள்ள துயரங்களை இலேசில் வெளிப்படுத்தத் தெரியாதவள். அவள் அழுவதை நான் ஒருநாளும் கண்டதில்லை. எனது மனைவியும் அலுவலகம் போய்விடுவாள். பிள்ளைகளும் பாடசாலைக்குச் சென்றுவிடுவார்கள். அப்போது அக்கா வீட்டிலே தனியத்தான் இருப்பாள். ஒருவேளை, தனிமைதான் அவளது துன்பங்களை வெளிப்படுத்தச் சரியான நேரமாயிருக்குமோ?

இருக்கலாம்...

இருபது வருடங்களுக்கு முன் அத்தான் கைவிட்டுப் போனபின் எனது ஆதரவிலேதான் வாழ்கிறாள். திருமணம் முடித்துச் சரியாக ஐந்தாவது நாள் அத்தான் நுணாவிலுக்குப் புறப்பட்டவர்தான். பிறகு ஐயா தேடிச் சென்றபோது அவர் கூறிய காரணம் ஏற்கத்தக்கதாக இல்லை.

...''அக்கா சரியான சண்டைக்காரியாம். அவளுடன் வாழ்க்கை நடாத்துவதிலும் பார்க்கப் பேயுடன் வாழலாமாம்...''

சிலர் திருமணப் பொன் விழாக் கண்டும் கூட இன்னும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாத இந்தக்காலத்தில் ஐந்து நாள்களில் மனைவியைப் புரிந்து கொண்ட 'விண்ணன்' எனது அத்தானாகத்தானிருக்கும்.

ஐயா ரோசக்காரன்.

வீண் சர்ச்சைகளுக்கு இடங் கொடுக்காமல் திரும்பி வந்து விட்டார்.

அத்தானும் இன்றுவரை மணவிலக்குப் பெற்றுக் கொள்ளவுமில்லை. எதற்காக அக்காவை நிராகரித்திருப்பார்?

இன்றுவரை என்னால் விடைகாணமுடியாத கேள்வி அது.

தேநீரைக் குடித்துக் கொண்டே அக்காவைப் பார்த்தேன். மேசையில் வைத்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள்.

எழுதி முடித்ததும் என்னை நோக்கித் திரும்பினாள்.

...''தம்பி. தூள் திரிக்க வேணும். உவள் கீதா நாலு கட்டுக் கொப்பி கேட்டவள். நீயும் தலைமயிர் வெட்ட வேணும் எண்டு சொன்னாய். கெதியிலை இந்தச் சாமான்களை வாங்கித்தந்து போட்டுப் போய் வெட்டு.''

இந்த வீட்டிலே நிர்வாகம் பெரும்பாலும் அக்காவின் கையிலேதான் இருக்கும். பையை எடுத்துக்கொண்டு புறப்பட்டேன்.

''அக்கா செல்லப்பொடி வந்தாநிக்கச் சொல்லுங்கோ. தேங்காய் புடுங்க வேணும். மழைகாலத்திலை ஆக்களைப் பிடிக்கேலாது.'' என்றவாறு சைக்கிளை எடுத்தேன்.

மழை இலேசாகத் தூறியது. குடையை மடித்துப் பையினுள்ளே வைத்துக் கொண்டு சைக்கிளை உழக்கத்தொடங்கினேன்.

கடைகள் பூட்டப்பட்டிருந்தன.

என்போன்ற அரச ஊழியர்கள் ஞாயிற்றுக்கிழமையிலேதான் பொருள்கள் வாங்குவார்கள். அவ்வேளைகளிலே கடைகள் பூட்டப்படுவது எனக்கு எரிச்சலை ஊட்டும்.

வல்லிபுரம் கடை இன்று திறந்திருக்கும் என நினைத்துக் கொண்டு அந்தப் பக்கம் சைக்கிளைத் திருப்பினேன்.

வல்லிபுரம் கடையில் எல்லாப் பொருள்களும் இருந்தாலும் அறாவிலையாக இருக்கும். நிறைகளில்வெட்டுவதில் அவருக்கு நிகரில்லை. தராசிலுள்ள காட்டி வேறு விற்பனைப் பொருள்களால் மறைக்கப்பட்டிருக்கும். பதினைந்து நாளாக நாறிய பாணைக்கூட யாரையாவது ஏமாற்றி விற்றுவிடுவார்.

கலியாணம் செய்யாத தனிநபர். அறுபது அறுபத்தைந்து வயதிருக்கும். யானைக்குட்டி மாதிரி இருப்பார். சின்னம்மா வீட்டுக் கசிப்பிலே வளர்ந்த தேகம். எனினும் அளவு கணக்கில்லாமல் சாப்பிடுவதால் உயிரைத் தக்கவைத்துக் கொண்டிருப்பவர்.

யாருக்காக இவ்வளவு காசையும் சேர்க்கிறாரோ?

கடைவாசலை அண்மித்தேன். வழக்கம் போல, வாடிக்கையாளர் எவருமில்லாமல் வெறுமையாக இருந்தது.

வல்லிபுரத்தார் வாய் நிறைய வெற்றிலையைப் போட்டுக் குதப்பிக் கொண்டிருந்தார். என்னைக்கண்டதும் வரவேற்றார்.

''எட நாதன்! வாடாப்பா வா. நீ என்னைக் கவனிக்கிறதுமில்லை.'' அவரது குரலிலே ஆதங்கம் தெரிந்தது.

''ஏனண்ணை?''

''மற்றக் கடைகள் பூட்டியிருந்தா மட்டும் இஞ்சை வருவாய். சரி... அதுகிடக்கட்டும். இப்ப என்னசாமான் வேணும் சொல்லு. இஞ்சை பார். எத்தினை ஸ்பெசல் அயிட்டம் எல்லாம் எடுத்துப் போட்டிருக்கிறன். கப்பலாலை லொறிநேர இஞ்சை வந்திட்டுத்தான் ரவுணுக்கே போறது.''

வல்லிபுரத்தாரின்வார்த்தைகளில் வியாபாரத் தந்திரம் தெரிந்தது

''எனக்கு இப்ப ரெண்டு கிலோ செத்தல், ரெண்டு கிலோ மல்லி வேணும். நல்ல சிவப்புச்செத்தல் இருக்கோ?'

''பின்னை இல்லாமல்...? இஞ்சை பார்...''

உடுவில்
## அரவிந்தன்

அவர் காட்டியது சிவப்புச் செத்தல் தான். எனினும், நிறுப்பது கலப்புச் செத்தல் என்பது எனக்குத் தெரியும். என்றாலும் அவசரத் தேவைக்கு வேறு என்ன செய்வது?

வேண்டிய பொருள்களை வாங்கிக் கொண்டேன். மிகுதிக்காசைத் தரும்போது இலேசாகச் சிரித்தார்.

''பின்னைச் சொல்லன் நாதன்.''

''என்னத்தையண்ணை?'' புரியாமல் வினவினேன்.

''உன்ரை கொக்காவும் பாவம். கலியாணம் கட்டி ஆறாவது நாளே அவன் ராஸ்கல் விட்டிட்டு ஓடிட்டான். இவ்வளவு காலமும் நீ அவளுக்கு ஆரையாவது பார்த்துச் செய்துவைக்கவும் யோசிக்கேல்லை...'' அவசரமாக இடைமறித்தேன்.

''அண்ணை உதென்ன கதை கதைக்கிறீங்கள்? நான் எத்தினை தரம் கேட்டுப் பாத்திட்டன். அக்காவுக்குத் தான் விருப்பமில்லை...''

''சனம் என்ன கதைக்குது தெரியுமே? நீ தான் குழப்பிக் கொண்டு நிக்கிறாயாம். உன்ரை வீட்டு அலுவலைப் பாக்க வேலைக்காறி மாதிரி வைச்சிருக்கிறாயாம். அது

(Xஆம் பக்கம் பார்க்க)

**சஞ்சீவி சிறுகதைகள்**

# "உ" காட்

மழை விடாமல் பெய்து கொண்டிருந்தது. நேரம் காலை ஏழு முப்பது மணியைத் தாண்டி விட்டதால் —என் மன ஓட்டமும் அதிகரித்தது. 'ஒவ்வீஸுக்குப் போக நேரம் பிந்தப் போகுது' என்ற அச்ச உணர்வு மேலும் வாட்டியது எனக்கு.

''என்னப்பா என்ன செய்யிறது. மழையும் விடாது போலக் கிடக்கு. அலுவலகத்துக்கு என்னண்டு போகப் போறியள்'' மனைவி கமலா கேட்டாள்.

''குடை இருந்தாலும் பிடிச்சுக் கொண்டு போகலாம். குடையும் இல்லை. நேரமும் போகுது' என்றேன் நான்.

பாவம் என் மனைவி கமலா என்னைக் கலியாணம் கட்டின காலம் தொட்டு வறுமையிலேயே வாழவேண்டிய நிலை அவளுக்கு. நானும் தான் என்ன செய்ய முடியும்? மாதம் மூவாயிரத்து ஐந்நூறு சம்பளம். அதனால கடன். நலன் புரிச் சங்கக் காசு, 'ரீக் காசு' போக மீதியாக என் கையில் கிடைப்பது இரண்டாயிரத்து முந்நூறு ரூபாய் தான். இதை வைச்சுத்தான் மாதம் முப்பது நாளும் சமாளிக்க வேணும். பிள்ளைகளின் படிப்பு, ரியூசன் காசு, மீன், பால், கடைக்காசு என்று மாதம் தோறும் நீளும் கடன் பட்டியல் வேறு.

இந்த நிலை எனக்கு மட்டுமில்லை. என்னைப் போல அரசாங்க உத்தியோககாறர் ஆயிரம் ஆயிரம் பேரின் கதியும் இப்படித்தான் இருப்பதை அறிய என் மனம் சற்று ஆறுதல் அடையும்.

மழை சற்றும் குறைவதாகத் தெரியவில்லை. புதிதாகப் போட்ட கொட்டிலில் இருந்து மழைத் துளிகள் உள்ளே எட்டிப் பார்த்தன.

கடந்த ஆறு ஆண்டுகளுக்கு 'முன்னர் அகதியாக ஓடியபோது அழகுடன் காட்சி தந்த கல்வீடு. இப்போது தரைமட்டமாய் கிடக்கின்றது. புல்டோசரின் அகோரப் பசிக்கு என் வீடு மட்டுமல்ல பலரின் வீடுகளுக்கும் இதே கதிதான்.

ஆறாண்டு இடைவெளியின் பின்னர் இப்போதுதான் சொந்த இடம் திரும்பி வந்திருக்கின்றோம். இதை எண்ணும்போது மனம் ஆறுதலடையும். அகதியாக ஓடித்திருந்து இரவல் வீடுகளில் இருந்து பட்ட கஷ்டங்களை விட குடிசை என்றாலும் சொந்த இடத்திலை இருக்கும் சந்தோசம் எனக்கு.

உடைஞ்ச வீட்டை மீண்டும் கட்டி எழுப்ப முடியுமா? - எண்ணிப் பார்க்கவே மனம் வேதனைப்பட்டது. ஒரு குடை வாங்கக் காசில்லை. வீடு கட்ட அஞ்சாறு லட்சம் வேணும். அரசாங்கம் ஏதும் நட்டஈடு தருகுதோ என்று என் மனம் அடிக்கடி அங்கலாய்க்கும்.

பக்கத்து வீட்டுப் பூமணி அக்கா வீட்டில் இரவலாய் வேண்டிய குடையின் உதவியால் அலுவலகம் போய்ச் சேர்ந்தேன் நான்.

அலுவலக வேலை முடிந்து வீடு நோக்கி வந்து கொண்டிருந்தேன்.

என்னைப் போல அகதியாக ஓடி மீண்டும் மீளக் குடியமர்ந்தவர்கள் பலர் மண்வெட்டியும், தென்னங் கன்றுகளும் கொண்டு போய்க் கொண்டிருந்தனர்.

''என்ன பூமணி அக்கா எங்கை உதெல்லாம் குடுக்கினம்''

என்றேன் ஆவலாய்.

''எங்கடை விதானைதான் குடுக்கிறார்...''

பூமணி அக்கா பதில் கூறினாள்.

கிராம சேவையாளரின் அலுவலகத்தை நோக்கி சைக்கிளை திருப்பினேன் நான்.

நிறைய சனக்கூட்டம். கொடுக்கும் பொருள்களை வாங்குவதிலே பலரும் குறியாக இருந்தனர். கடைக்காற முதலாளி பொன்னுத்துரை உட்பட எங்கடை ஊரிலை உள்ள பல வசதியானவர்களெல்லாம்மண்வெட்டி வாங்க அங்கே நின்றனர்.

எங்கடை சனம் என்ன குடுத்தாலும்விடாது என்று என் உள்மனம் சொல்லிக் கொண்டது.!

''என்ன சிவம் அண்ணை இந்தப் பக்கம்...'' என்றான் தபாற்கந்தோரிலை வேலை செய்யும் குமார்.

''மண்வெட்டி குடுக்கினம் அதுதான் வந்தனான்'' — என்றேன்.

குமார் சிரித்தான்.

''அண்ணை உத்தியோகம் பாக்கிறவைக்கு இல்லையாம்... வாங்கேர போவம்...'' என்றான் அவன்.

குமாருடன் கதைத்தவாறு வீடு வந்து சேர்ந்தேன்.

இஞ்சாருங்கோமண்வெட்டி குடுக்கினம். எங்களுக்கு 'உ' காட் அதுவும் இல்லையாம்...'' என்றாள் மனைவி.

''ஓமப்பா நானும் போட்டுத்தாள் வாறன்...' எங்களைவிட நல்ல வசதியான சனங்களெல்லாம் வாங்கிக் கொண்டு போகுதுகள்...'' என்றேன் நான்.

''ஒரு சேதமும் இல்லாதவையளுக்கு குடுக்கினம். எங்களுக்கு இவ்வளவு இழப்புகள் இருந்தும்...''

மேலே கூற முடியாமல் மனைவி விக்கித்து நின்றாள்.

''...கவலைப்படாதை கமலா. படைச்சவன் படி அளப்பான் தானே...''

அவளை ஆறுதல் படுத்தினேன் நான்.

வாரம் ஒன்று கழிந்தது. மீண்டும் விதானையார் வீடு சனக்கூட்டத்தினால் நிரம்பிக் காணப்பட்டது.

'...பத்திரத்தில் கமம் என்று பதிஞ்சவையிலை அஞ்சஞ்சு பேராகச் சேர்த்து புதிய நீரிறைக்கும் மிசினும், பைப்புகளும் கொடுக்கினமாம். அதுதான் சனங்கள் நிக்குது...''

மனவேதனையில் ஒருவர் கூறிக்கொண்டு போனார்.

மிசின் வாங்கிச் செல்வோரில் கூடுதலானவர்கள் வசதியானவர்களாகவே காணப்பட்டனர்.

சேதம்...இழப்பு, எண்டு பாக்காமல் ''கமம்'' என்ற ஒரே நோக்கத்துக்காக வழங்கப்படுவதை பார்க்க உள்ளம் வேதனைப்பட்டது.

பக்கத்து வீட்டு பூமணி அக்காவுக்கு இருந்த மூன்று பிள்ளைகளும் வெளிநாட்டிலை. வீட்டுத் தோட்டம் கூட இல்லை. கமம் எண்டு பதிஞ்சதிலை அவைக்கும் மிசின் கொடுக்கப்பட்டிருந்ததை அறிந்து என்மனம் எரிமலையானது.

''ஏன் இந்த அநியாயம்— ஆரோ வெளிநாட்டுக்காறர் குடுக்கிறதை இல்லாத ஏழையளுக்கும் குடுக்கலாம் தானே...''

மனைவி கமலா திட்டித் தீர்த்தாள்.

''மிசினும் 'உ' காட் காறருக்கு இல்லையாம்... கமம் செய்யிறவைக்கு மட்டும்தான் குடுக்கினமாம்''

''...'உ' காட் எண்டால் உடைஞ்ச வீட்டுக்கும் ஒண்டும் தரமாட்டினமே...''

மனைவி கேட்டாள்.

''உடைஞ்ச வீட்டுக்கு எப்படியும் நட்டஈடு தரத்தானே வேணும்.''

என் பேச்சைக் கேட்ட மனைவி என்ன நினைத்தாளோ தெரியாது. அமைதியானாள்.

அளவெட்டி
## - ப. உதயகுமார் -

அத்திபாரமே தெரியாமல் இடிச்சுத் தள்ளப்பட்ட வீட்டைப் பார்க்க மனம் கொந்தளித்தது எனக்கு. இழப்பு ஈடுசெய்ய முடியாத இழப்பு என்னுடையது. இழப்பே என்ன என்று தெரியாத பலரும் நிவாரணமாக மண்வெட்டி, மிசின், பைப்பு, தென்னங்கன்று என்றெல்லாம் வாங்கி... வசதியின் மேல் வசதியாக வாழுகின்றனர்.

உடைஞ்ச வீடுகளுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கான பத்திரம் வழங்கப்பட்டது. எனது வீட்டின் இழப்பை

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அழகு எதுு?

| | | | |
|---|---|---|---|
| அழிவினைத் | தேடிடும் | மறிவிய | லுலகினில் |
| அழகினைத் | தேடியான் | லலைகிறே | னுலைகிறேன் |
| பகலினில் | பனிவிழு | மழகினைப் | பருகினேன் |
| பாயினில் | கிடப்பவன் | திட்டினான்; | கொட்டினான். |
| | | | |
| மலரினில் | மல்லிகை | மகிமையை | போற்றினேன் |
| மாமியின் | மகளவள் | அல்லியை | ஏற்றுவாள் |
| சிறகிலே | அழகென்ன! | சிந்தனை | அழகென்ன! |
| குறளிலே | அழகென்பர் | குணமது | பெரிதென்பர் |
| | | | |
| பூ | சுமக்கும் | பூ | அவளே |
| பூவையரில் | அழகு | என்றால்; | வாய்திறந்து |
| அவனுக் | கவள்தான் | அழகு | என்று |
| அகன்று | சென்றான் | அருமை | நண்பன் |
| | | | |
| கூழ் | குடிக்கும் | கூலி | யாளை |
| குத்தலாய் | பார்த்திருந்தேன்; | நாருசிக்க | உண்கின்றான் |
| நல்ல | பசிபோலும்! | ''நல்லுலகில் | அழகுபற்றி'' |
| நான் | முடிக்கும் | முன் | னவனே |
| | | | |
| அகலவாய் | விரித்து | அற்புதமாய்க் | கண்சரித்து |
| ஆறாத | கூழே | அழ | கென்றான் |
| அடிவிழுந்த | பாம்பானேன்; | ஆய்ந்த | அரைநொடியில் |
| அமைதி | தருவதுவே | அழகென் | றுணர்ந்தேன் |
| | | | |
| அள | வெடுத்த | இடுப்ப | ழகும் |
| ஆய்ந்த | நல் | தமி | ழழகும் |
| அரை | வயிற்றுக் | கஞ்சிக் | கழகாமோ? |
| ஆக்கமுறு | அமைதியதே | அழிவிடத்தில் | அழகாதோ? |

— நிஷா

# தொக்கி நின்று தூக்கியோர்!

(மக்கள் இடம்பெயர்வைப் பயன்படுத்தி சொத்துக்களைச் சூறையாடிய நம் கூட்டத்தைக் கவிகொண்டு சாடுகின்றார் இக்கவிஞர்.)

குப்பி விளக்கொளியில்
செப்பமாய்க் கோலியதோர்
தொப்பியிது முன்வைத்தேன்
தோதென்றால் சூடிடுவீர்.

ஆண்டிரண்டு முன்னேயோர் ஐப்பசி எல்லையில்
மூண்ட ''ரிவிரச'' முற்றியதால்—பாண்டவர்போல்
கூண்டொடு மக்கள் குடிபெயர, ஈண்டிங்கு
ஆண்டதோர் குண்டர் குழு.

கோரக் குழுவிது கொற்றவன் பார்த்திருக்க
சோரம்பல செய்து சொகுசேறி—ஊரவரின்
வேரறுத்த காண்டமிது; வேள்விபல செய்தாலும்
சேர வருமோ செழிப்பு.

திக்கெட்டும் மக்கள் சிதறிப் பயந்தோட
கொக்குநிகர் கூட்டமிது தக்கபடி—தொக்கிநின்று
அக்கமும் பக்கமும் ஆராய்ந்து தேக்கியதோர்
வைக்காத வங்கிக் கணக்கு.

காற்றுள்ள போதிங்கு தூற்றிய கூட்டமிதை
நேற்றின்று நாளைவரை; சற்றேநில்!—சாற்றப்புகின்
கூற்றுவன் வந்தாலும் கோள மழிந்தாலும்
சோறெஞ்சிக் கெஞ்சுமெனச் சொல்.

கோடரி கொண்டிதைக் கொத்தித் திறதம்பி
சீட்னவன் சொன்னதோர் செட்டியின்—மாடியிது
பாருங்கோ பாருங்கோ பற்பல சொகுசிங்கே
வாருவீர் நல்லதோர் வாய்ப்பு.

தங்க நகைமுதல் வெள்ளிக் கலசமொடு
தொங்கு முறியையு மொட்டறுத்த—இங்கரர்
தங்கு தடையின்றித் தாலி யறுப்பரெனச்
சங்கேத மின்றிநீ சாடு.

பாரடா பாரிங்கே பச்சைநெல் மூடைகளை
நேராக நம்மில்லஞ் சேர்த்திடுவீர்—காரமுண்டோ?
பக்கத்துக் கட்டிடமோர் பல்சரக்கு மாளிகையாம்
பக்குவமாய்ப் பார்த்துவா பாலு.

ஆனை படுக்கலாம் அந்தப் பெரிசடா!
சோனகன் சொன்னவிலை போனதடா—பானையோ?
தாச்சியடா தாச்சி; கடலைவறு தாச்சியடா
போச்சுதாட தம்பியென் மூச்சு.

வள்ளிக் கிழங்கென்ன வாட்டிய கோழியுடன்
துள்ளிவரும் மாட்டின் தொடையென்ன—கள்ளுமுண்டே!
அள்ளுவீர்; உள்குவீர்; ஆடுவீர்; பாடுவீர்
தெள்ளுதமி ழீழமெனத் துள்ளு.

பலசோலி சொல்லிப் பரந்து பறந்து
பலகாலி வீடுகளைப் பார்த்து—பலகோலி
பல்பொரு ளங்காடி பார்வைக்கு வைத்துள்ளார்
இல்லற நாயகன் ஈண்டு.

ஓராறு மாதங்கள் சோரம் பலசெய்த
கோர நிருதர் குழுவிது—பாரிலொரு
போக்கிட மின்றிப் பொசுங்கி நசுங்குவர்
நாக்கு நரம்பு மவிந்து.

சந்துபொந் தெல்லாமோர் சல்லடை போட்டின்று
சிந்தை மலராச் சிரிப்பொன்றைச்—சிந்துமிவர்
பந்தியிற் குந்தப் பயந்து பரந்தாமன்
நந்தனை வேண்டிடுவார் நொந்து!

— அங்குசன்

# பிரிவு ஏனோ?

வானம் ஒன்று பூமி ஒன்று
வண்ணமதி ஒன்று
கானம் ஒன்று காதினிலே
கலந்ததுவே இன்று
சாதி ஒன்று, மதம் ஒன்று
சாற்றுதலே நன்று
பிறப்பிலும் மனிதர் ஒன்று
பிறந்தபின் இறப்பும் ஒன்று
நிறத்தில் குருதியும் ஒன்று
நீ அதை உணர்வாய் என்று
இயற்கையது ஒற்றுமையை
எமக் கூட்டும் வேளை
செயற்கை என நீ பிரிவு செய்து
தாழ்வு, உயர்வு என பெயர் இட்டு
சமூகத்தை சீர் கெடுக்கலாமோ?

அ. அனந்தன்.

# புத்தாண்டே வகை சொல்!

தொண்ணூற்றெட்டாய் உருமாறி
மண்ணில் உலாவப் போகிறவளே,
எந்தையரைப் பறி கொடுத்த,
ஏக்கங்களோடு வந்தனங்கள்,
சொல்லியே நிற்கிறோம்.
உன் வழி மீதில்,
விழி பதித்து நிற்குமெங்களுக்கு
வகையென்ன சொல்லப் போகிறாய்?
உள்ளங்களின் சுமைகளைக்
குறைத்திடுவாயா?
ஊரெங்குமே வளங்களைச்
சொரிந்திடுவாயா?
உன் தோழமை வேண்டியே
தொழுது நிற்கிறோம்.
இவ் வேழைகளை ஏற்றமுற
நீ வைத்திட வேண்டும்.

— மீசாலையூர் கமலா.—

# காலத்தில் கைகொடுக்க...

தலைகுனிந்தால் — அது
மிளகாய் அரைக்கும் களம்;
தலை நிமிர்ந்தால்,
தன்னடக்கமில்லாத் தடிப்பயல்பட்டம்;
சற்றுக் குனிந்தால்—முதுகு
சவாரி விடும் தளம்;
என்னசெய்வாய்?

கை பிசைந்தாய்; அவர்கள் கையோங்கியது.
கண்ணீர் சிந்தினாய்; அவர்கள்
கண் சிமிட்டிக்கேலி செய்தனர்.
எங்கு செல்கிறாய்?

ஓகோ!
சந்நிதியின் முன்னிலையில்
சாட்டாங்கம் செய்யவா?
அடபாவி! அங்கே பார்!
அவர்கள் உன்னை முந்தி
சன்னதம் ஆடி, தலையாரக் கும்பிட்டு,
''சம்திங் விடயம் சந்திக்கு வராமல்
சங்கரா ரட்சிப்பாயே'' என்று
சாட்டாங்கம் செய்வதை,
உனக்கு வழி?
''ஏழை அழுத கண்ணீர் கூரியவாள் ஒக்கும்''
என்றா
இன்றும் எண்ணுகிறாய்?
இது,
''எக்ஸ் பயறிடேற்'' போன எப்போதோ
சொன்ன மொழி.
இப்போ இதற்குச் சத்தில்லை.
எப்போதும் கை கொடுக்க,
''கொடுவாளினை எடடா, மிகக்
கொடியோர் செயல் அறவே!''

—புத்தூர் வே. இளையகுட்டி

# ஆருடனே சொல்லியழ...

என்ரையிவர் குடிகாரர்
ஏனின்னும் திருந்தவில்லை?
சீர் திருத்த வாதிகளே!
சிந்தித்துப் பாருங்களேன்
போர் நிறுத்த வேளையிலுமிவர்
போர் நிறுத்த வில்லையின்னும்
ஆருடனே சொல்லியழ இவர்
ஆய்க்கினையைச் சொல்லியழ...?
மார்பிலே உதைகின்றார்
மண்டையை உடைக்கின்றார்
சட்டிபானை உடைகிறதே — ஐயோ!
சல்லி முட்டி உடைகிறதே
கட்டிக் கொண்ட கணவனது
கைவரிசை தெரிகிறதே.
தட்டி வேலி எரிகிறதே
தலைவனது செய்கையினால்
எட்டியெட்டி சனம்பார்த்து
ஏளனம் செய்கிறதே!
என்ரையிவர் குடி காரர்.
ஏனின்னும் திருந்த வில்லை?

— [illegible] —

# பெற்ற மனம் பித்தா

''வசந்தத்தை விற்போம்'' வருகவென்றீர்; வந்து
அசந்தெழும்பு முன்னே அதிர்ந்து—பசங்களினைத்
தேடவைத்தீர்; நாங்கள் தெருத்தெருவாய் உண்ணாமல்
வாடவைத்தீர்; கேட்டோம் வரம்.

காசைத் தொலைப்பதுபோல் கண்முன்னே எங்களது
பாசமலர் தம்மைப் பறிகொடுத்து—பேசாமல்
பார்த்துழன்றோம். ஏதும் பலனில்லை; இன்றழுதோம்
''காட்டுங்கள்'' என்று கசிந்து.

ஏறாப் படிகளில்லை; போடா மகஜரில்லை;
கேளாத சாத்திரங்கள் ஏதுமில்லை—ஆனாலும்
சும்மா மழுப்புகின்ற சொற்சிலம்பம் காட்டிடுதல்
அம்மா உமக்கா அழகு?

ஆண்டொன்று தாண்டிற்று! அங்கொன்றும் இங்கொன்
நீண்டு அலைந்ததன்றி நீதியில்லை—''ஆண்டவரே''
எங்கெங்கள் குஞ்சு? ஏன் மௌனம்? சொல்லாட்டி
எங்களுக்கேன் வாழ்க்கை? இங்கு!

—அருண

# மெய்யறிவு வேண்டி...

மேகம் அடைவைத்து விட்டமுட்டை யாய்நிலவு
ஆடா திருக்க அதைருசிக்கும்—பாம்புகளாய்
நீளமுகில் வந்து நிதமுண்ணும். நாள்சிலது
வீழ; முட்டை அற்றிருளும் விண்.

குஞ்சு பொரித்தால் குலந்தழைக்கும் என்றவிண்ணோ
அஞ்சா தடைவைக்கும் மீண்டுமீன்று—கொஞ்சம்நில்
மேகம் பெரிதா? விழுங்கும்பாம் பேபெரிதா?
ஆர் பெரிது 'இங்கு' அறி?

சாவின் முதுகில் சவாரிசெய்யும் பாப்புனையும்
பாவலனாய் மாற்று படைத்தருகா—வாழ்விலேதும்
'பற்று' வேண்டேன்; ஆனால் 'தமிழ்ப்பற்றை' வேண்டுகி
இப்பிறப்பை வென்று எழ!

—தேரடிச் சித்

# மௌன இராகங்கள

ஆடி வரும் தென்றல் தாளம் இசைக்கையில்
ஆசை நெஞ்சம் உன்னைத் தேடிப்பறக்குது
கோல மிடும் வண்ண எண்ணக் குமிழிகள்
கோதையின் நெஞ்சினில் சித்திரம் தீட்டுது.

வாசமிகு ரோஜா வாவென் றழைக்கையில்
நேசமிகு முகம் நெஞ்சை இழுக்குது
தூயவெண் முல்லையின் சொக்கும் சிரிப்பினில்
நேயமிகு நகை நெஞ்சில் இனிக்குது.

ஓடும் அருவியின் பாடும் இசையினில்
கூடும் குரலிசை நெஞ்சை நிறைக்குது.
பேசும் முழுநிலா வானில் உதிக்கையில்
தேடும் மனதினில் ஏக்கம் பிறக்குது.

மின்னும் உடுக்களின் வெட்டும் ஒளியினில்
பின்னும் குறும்புகள் பெண்ணை மயக்குது
எண்ண அலைகளின் சுற்றுச் சுழிப்பினில்
வண்ணக் கனவுகள் வாரி இறைக்குது.

—கௌரி கணேச

# பாட்டுக் கொலைஞர்

''ஏஆர் ரகுமானே! இன்றை (ய) இசைப்புயலே!
கூயென்று கத்தல்; குரைப்பெல்லாம்; — வாயாலே
பாட்டென்று சொல்லப் பயப்படா துன்துணிவைக்
கேட்டுக் கிளர்ந்துரைத்தேன் கேள்!

மெட்டைக் கடன்வாங்கி மேற்கு அயல் நாடுகளின்
சட்டைகளை இங்கே சரிசெய்து — குட்டு
புலப்படா வண்ணமே புல்லாங் குழலும்
கலந்திங்கே குத்துகிறாய் காது!

சுயம்நீ உணராய்; அயலான் சுவைத்த இசையமுதை
சுயம்வரத்தில் வென்றோ கொணர்ந்தாய்?—வயல்வெ
ஏற்றம் இறைக்கும் இசைக்கும் இசைதல்தாம்
நேற்றுவரை எங்கள் நெறி!

உன்னைத் தொடர்ந்து ஒருகூட்டம் எம்தமிழை
கொன்று புதைக்கக் கொடிகட்டி — நின்றாலும்
நாதப் பிரமத்தை நாய்க்குரைப்பு வீழ்த்தாது
ஆதிக் கலைக்கே தழிவு?

கிடாரத் தட்டலுக்கும் கிற்றார்க் கிலுக்கலுக்கும்
விடாமல் தமிழ்க்கற்பை விற்றுவிற்று — அடாடா!
பாட்டென்று சொல்லும் பதர்களினை எம்மிறையே
கூட்டோடு சேர்த்துக் கொளுத்து!

— செல்வப்பா

கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹொங்கொங்கில் கோழிக் காய்ச்சல்!

## இதுவரை மூவர் மரணம்

கோழிகள் மூலம் பரவுவதாக நம்பப்படும் ஒருவித வைரஸ் நோயினால் ஹொங்கொங்கில் மூன்றாவது நபரும் மரணமடைந்துள்ளார். மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த 13 வயதுச் சிறுமி ஒருத்தியே உயிரிழந்தவர் ஆவார்.

இந்தப் புதிய வைரஸ் தொற்றுநோய் குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவிததுள்ள போதிலும் ஹொங் கொங்கில் தங்கியுள்ள உலக சுகாதார நிறுவனத்தின் ''இன்புளூவென்ஸா எதிர்ப்பு நடவடிக்கைக் குழு'' தீவிர ஆய்வுகளை இது தொடர்பாக மேற்கொண்டு வருகிறது

''எவ் — 5, என் — 1'' என்று பெயரிடப்பட்ட இந்த வைரஸ் கிருமிக்கு எதிரான தடுப்பு ஊசிமருந்து அடுத்த ஆண்டு நடுப்பகுதிக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டு விடும் என்று அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனார்.

உலகில் லட்சக் கணக்கான உயிர்களைப் பலி வாங்கிய 'புளூ' காய்ச்சலுக்கும் இந்த வைரஸ்நோய்க்கும் தொடர்பு உண்டா என்பது குறித்து ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. ★

# பறக்கும் ரயிலின் உலக சாதனை


ஜப்பான் நாட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பறக்கும் ரயில் புதிய உலக சாதனை படைத்திருக்கிறது. மணிக்கு 521 கி. மீ. வேகத்தில் அதாவது மணிக்கு 323 மைல் வேகத்தில் அது பறந்திருக்கிறது.

ரோக்கியோ அருகில், இதற்கென உருவாக்கப்பட்ட தனி இரும்புப் பாதையில் இச் சாதனை நிகழ்ந்தது. ஏற்கனவே ஜப்பானில் 1979 ஆம் ஆண்டு பறக்கவிடப் பட்ட ரயிலின் சாதனையை இது முறியடித்துவிட்டது.

அப்போது மணிக்கு 517 கி. மீ. வேகம்தான் சென்றது. இது மின்காந்த விசை உதவியுடன் செலுத்தப்படும் ரயிலாகும். பாதைக்கு மேல் அந்தரத்தில் பறந்தபடியே ரயில் செல்லும். ''உண்மையான பறக்கும் ரயில்'' இது.

ஆள்களை வைத்து ரயிலை அதிவேகத்தில் ஓட்டுவதில் பிரான்ஸ் சாதனை படைத்திருக்கிறது.

1991 இல் அது மணிக்கு 515.3 கி. மீ. வேகத்தில் ரயிலை ஓட்டியது. மைல் கணக்கில் சொல்வதானால் மணிக்கு 320 கி. மீ.



இப்படி பறக்கும் ரயில் ஓட விசேஷ இரும்புப் பாதையை அமைக்க வேண்டும். அதற்கு நிலங்களைக் கையகப்படுத்தி புதிதாக பாதை அமைக்க வேண்டும்.

காந்தவிசை ரயிலை ஓட்டுவதில் ஜேர்மனியும் ஆர்வம் காட்டி வருகிறது.

ஜப்பானுக்கும் ஜேர்மனிக்கும் இதில் போட்டி என்றும் சொல்லலாம். ★

# விநோத விபத்து

ஆஜென்ரீனாவின் தலைநகர் புவனர்ஸ் அயர்ஸில் அண்மையில் விநோதமான ஒரு விபத்து நடந்தது.

அந்த நகரில் உள்ள ஒரு கட்டடத்தின் 13ஆவது மாடியில் இருந்து நாய் ஒன்று தவறிக் கீழே தெருவில் போய்க் கொண்டிருந்த 75 வயதான வயோதிப மாது மீது வீழ்ந்தது. அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். இதனைக் கண்டதும் அவ்விடத்தில் பெரும் கூட்டம் கூடியது. அச்சமயம் அந்த வீதி வழியாக வந்த பஸ் ஒன்று கூட்டத்தினர் மீது மோதியதில் விபத்தைப் பார்க்க வந்த பெண் ஒருவர் பலியானார். இந்தக் காட்சிகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த மற்றொருவர் மாரடைப்பினால் திடீரென வீழ்ந்து மரணமானார். ★

# வாய்க்குள் வானொலி!

ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த 69 வயதான நபர் ஒருவர் புதிதாகப் பல் கட்டிக் கொண்டார். அதன் பின்னர் அவர் தனது வாயைத் திறந்தாலே போதும்... பாடல்கள் ஒலித்தன. செய்திகள்... விவாதங்கள் என ஹங்கேரி நாட்டின் பிரதான வானொலி நிலையம் ஒலிபரப்பிய அத்தனை நிகழ்ச்சிகளையும் தொடர்ந்து கேட்க முடிந்தது.

அவர் கட்டிக்கொண்ட புதிய பல் 'செற்' செய்த வேலை இது. தன் வாயைத் திறக்கவே அவர் பயப்பட்டார். தனக்குப்பல் கட்டிய டாக்டரிடம் ஓடினார். பின்னர் பரிசோதனை செய்து பார்த்ததில் பல் செற்றில் இருந்த உலோகப் பகுதிகள் வானொலி ஒலிபரப்புகளை ஈர்க்கும் 'ரிசீவராகச்' செயற்பட்டது கண்டறியப்பட்டது. ★

# 66 மொழிகளில் பேசும் ஐ. நா. அதிகாரி

ஐக்கிய நாடுகள் சபையின் மொழி பெயர்ப்புத் துறையில் பணியாற்றும் ஜோர்க் ஸிமித் என்பவர் உலகில் உள்ள 66 மொழிகளை நன்கு அறிந்து மொழி பெயர்க்கும் ஆற்றல் படைத்தவர். பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இவர் இவை தவிர வேறு 30 மொழிகளை சரளமாகப் பேச வல்லவராம் ★

# 7 ஆம் இலக்கம் அதிர்ஷ்டம் இல்லையா?

அமெரிக்காவில் கலிபோர்னியாவில் உள்ள சான்அன்ரனிாய என்னும் இடத்தில் கொள்ளைச் சம்பவம் தொடர்பான வழக்கில் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. கொள்ளையில் சம்பந்தப்பட்ட நபருக்கு நீதிபதி ஏழு ஆண்டுகால சிறைத்தண்டனை வழங்கினார். அதைக் கேட்ட அந்த நபர் நீதிபதியைப் பார்த்து ''ஐயா ஏழு எண் எனக்கு அதிர்ஷ்டமில்லாத எண் என்பதைத் தங்களிடம் மிகவும் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்'' — என்றார்.

அவர் கூறியதை நீதிபதி உடனேயே ஏற்றுக் கொண்டார். பின்னர் அவர் அந்த நபருக்கு அளித்த தண்டனைக் காலத்தை எட்டு ஆண்டுகளாக்கி விட்டார். பாவம் அந்தக் கொள்ளைக்காரனுக்கு ஏழு இலக்கம் நிச்சயமாக அதிர்ஷ்டமில்லாத எண்ணாகிப் போய்விட்டது. ★

# முதல்வர் பட்டேல் மதுவுக்கு முழுக்கு

கர்நாடக மாநில முதல்வர் ஜே. எச். பட்டேல் மதுவுக்கு முழுக்குப்போட்டு விட்டதாக ஒரு தகவல்.

இனியும் மது அருந்தினால் உடல் தாங்காது என்று அவரது மருத்துவர்கள் ஆலோசனை வழங்கியதை அடுத்து நாற்பது வருடகாலப் பழக்கத்தை முதல்வர் கைவிட்டுவிட்டாராம். ★

# பஞ்சாமிர்தம் பலாசுஅமிர்தம்

# மகளிடம் இருந்து பிடலுக்கு அச்சுறுத்தல்

''கியூபாவின் அதிபராக நீடிக்க இனி மேலும் பிடல் காஸ்ட்ரோவுக்கு தகுதி கிடையாது. நாட்டில் ஊழல் பெருகிக் கிடப்பதற்கும், பொருளாதாரத்தில் கியூபா சிதைந்து கிடப்பதற்கும் அவர் தான் முதற்காரணம்'' — என்று குற்றம் சாட்டியுள்ளார் அலினா பெர்னாண்டஸ் என்னும் 42 வயதுப் பெண்மணி.

காஸ்ட்ரோவின் அதிகார பூர்வமற்ற மனைவிக்குப் பிறந்த அவரது மகள் தான் இந்தப் பெண்.

கியூபாவைப் பற்றி பல்வேறு தகவல்களை — இரகசியங்களை — அவர் புத்தகமாக எழுதியுள்ளார். ''MEMORIES OF THE REBEL DAUGHTER OF FIEDAL CASTRO'' என்ற அந்தப் புத்தகம் கியூபாவில் தடை செய்யப்பட்டுள்ளது.

பிடல் காஸ்ட்ரோவைக் குறிவைத்து இதுவரை ஐந்நூறுக்கும் மேற்பட்ட கொலை முயற்சிகள் நடந்துள்ளன. அவற்றில் எல்லாம் அவர் தப்பிப் பிழைத்துள்ளார் என்ற அதிர்ச்சி தரும் தகவலையும் அந்தப் புத்தகத்தில் வெளியிட்டிருக்கிறார் அலினா. ★

# 'இருவர்' படத்துக்கு விருது

யூகோஸ்லாவியாவின் பெல்கிரேட் நகரில் நடந்த திரைப்பட விமர்சகர்கள் பட விழாவில் மணிரத்தினம் இயக்கிய 'இருவர்' திரைப் படம் சிறந்த திரைப்படமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

உலகநாடுகள் முழுவதிலுமிருந்து 60 திரைப்படங்கள் இதில் கலந்து கொண்டன.

இவ்விழாவில் 'இர்மாவெப்' என்ற பிரஞ்சுப்படமும் 'இருவர்' படமும் சிறந்த படமாகத் தெரிவு செய்யப்பட்டன. ★

# விபசாரிகள் நடத்தும் மண்டை ஓட்டு ஊர்வலம்

விபசாரத்தில் ஈடுபட்டு இறந்து போனவர்களின் ஞாபகார்த்தமாக அவர்களது ஆத்மாக்கள் சாந்தியடைய வேண்டி சக தொழிலாளர்கள் கூட்டி ஊர்வலம் நடத்துகின்றனர்.

ஆண்டு தோறும் நவம்பர் மாதங்களில் மெக்ஸிக்கோ நாட்டில் இந்த ஊர்வலம் நடைபெறுகிறது.

இம்முறைபெரும் எண்ணிக்கையான விபசாரிகள் மண்டை ஓட்டு வடிவத்திலான முகமூடிகளை அணிந்து கொண்டு மெக்ஸிக்கோ தெருக்களில் ஊர்வலம்வந்தனர். இறந்துபோன தமது சக தொழிலாளர்கள் புதைக்கப்பட்ட கல்லறைகளுக்குச் சென்று அவர்கள் பிரார்த்தனை செய்தனர். ★

# இமெல்டா மார்க்கோஸின் செருப்புகள் காட்சிக்கு!

மணிலாவில் புதிதாக 'ஷூ மியூசியம்' ஒன்று உருவாக்கப்படுகிறது. அந்தக் காட்சியகத்தில் வைக்கப் படவுள்ள தெரிவுகளில் முக்கியமானவை முன்னாள் ஜனாதிபதி மார்க்கோஸின் மனைவியான இமெல்டா மார்க்கோஸின் ஆயிரத்து 60 சோடி செருப்புகள்.

இமெல்டா மார்க்கோஸின் கணவர் பேர்டினன்ட் மார்க்கோஸ் பிலிப்பீன்ஸ் அதிபராக இருந்தவர். அப்போது கணவனும் மனைவியுமாக பிலிப்பீன்ஸ் நாட்டுச் சொத்துக்களைச் சூறையாடியதாகக் கூறப்படுகின்றது. தனது பாவனைக்கென பல நூறு சோடி செருப்புக்களைச் சேர்த்து வைத்திருக்குமளவுக்கு சொத்து 'பித்து' பிடித்திருந்தவர் இமெல்லா.

1986 இல் நடந்த புரட்சியின் போது உயிர்ப் பாதுகாப்புத் தேடி நாட்டை விட்டு ஓடியபோது அவர் விட்டுச் சென்ற 9 ஆம் நம்பர் ஷூக்கள் அனைத்துமே தற்போது அதற்கென உருவாக்கப்படும் காட்சியகத்தில் வைக்கப்படவிருக்கின்றன. ★

# அழகு இருந்தது அதிர்ஷ்டம் இல்லை

ஜேனிஸ் — சூ — யென்சுன என்பவர் சீன அழகி. மிஸ் ஆசியா போட்டியில் வென்று இருபது லட்சம் டொலர் பரிசு பெற்றார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவரது பட்டமும் போச்சு, பரிசும் போச்சு. காரணம் அவர்திருமணமானவர் என்ற விஷயம் வெளியானதுதான்.

மிஸ் அழகிப்போட்டியில் பங்குபற்றுபவர்கள் திருமணமாகாதவராகவும், குழந்தை பெற்றுக் கொள்ளாதவராகவும் இருக்க வேண்டும் என்பது பொதுவிதி.

ஆனால் இந்த அழகி நான்கு ஆண்டுகளுக்கு முன் திருமணமாகி விவாகரத்துப் பெற்றவர் என்ற தகவல் அம்பலமானது. ★

# அதிக சிலைகள் புத்தருக்குத்தான்

லெனின், மா—ஸே—துங், ஸ்டாலின் போன்றவர்கள், தங்கள் சிலைகளை தாங்களே வைத்துக் கொண்டனர். ரஷ்யாவிலும் மற்ற கம்யூனிஸ்ட் நாடுகளிலும் ஸ்டாலின் தனக்காக 6 ஆயிரம் சிலைகளை வைக்கச் செய்தார். ஆனால், அங்கு கம்யூனிசம் வீழ்ந்த பிறகு அவருடைய சிலைகள் அகற்றப்பட்டுவிட்டன.

தற்போது உலகில் அதிகமான சிலைகள் இருப்பது கௌதம புத்தருக்குத் தான்! ஸ்ரீலங்கா, சிங்கப்பூர், லண்டன் என்று உலகின் பல நாடுகளிலும் புத்தர் சிலை ஏராளமாக காணப்படுகிறது. ★

# அவன் செய்த குற்றம்


ஹிட்லரை வடிகட்டின முட்டாள் என்று பகிரங்கமாகக் கூறியதற்காக ஒரு சிப்பாய் இராணுவ நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டான். அவன் மீது 3 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

ஒன்று— ஜேர்மனின் தனிப்பெரும் தலைவரை அவமதித்தது. இரண்டாவது— எதிர்ப் பிரசாரத்தில் ஈடுபட்டது. மூன்றாவது என்ன தெரியுமா? ஓர் இராணுவ இரகசியத்தை வெளியிட்டது!

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 30



சொற்சிலம்பம் இல. 30
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................................

விலாசம்: ..............................................

..............................................

........ ......... இங்கே வெட்டுக ........................

முடிவு திகதி; 02 — 01 — 1998

**இடமிருந்து வலம்**

1. பகைமை. 4. பஞ்சபண்டவர்களுள் ஒருவன். 6. நடிகர்கள் போடுவது. 7. ஒரு நட்சத்திரம்; பிரபந்தமும் கூட. 8. இராமாயணத்தைத் தமிழில் தந்தவனை இப்படியும் அழைப்பர். 11. உறுதி. 12. முன் அல்ல. 14. நவீன உலகில் முன்னணியில் நிற்கும் பொறி. 15. அர்ச்சனைக்கு உகந்த புல். 18. தேர். 19. குதிரை. 20. உருவ பொம்மை. 21. எழுச்சிக்கு எதிரானது.

**மேலிருந்து கீழ்**

1. புத்திக்கூர்மை. 2. மானம், மரியாதை போல் ஓர் உணர்வு. 3. கணவன் — மனைவி. 4. வீரம் நிறைந்தவன். 5. கால அளவீட்டு அலகு. 7. முகத்திரை; யானைக்கு அணிவிப்பார்கள். 9. முத்தமிழில் ஒன்று. 10. யேசுவைப் பெற்றவள். 12. சடலம். இறுதி இழந்தது. 13. கட்டுப்பாடில்லாதவன். 14. படி. 15. ராணி. 16. தடி. கடைசியில் இல்லை. 17. கீர்த்தி 19. வயிற்றில் உருவாவது.

**சொற்சிலம்பம் 28 — விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. பாசாங்கு. 4. வகு. 6. தாடி 7. சமாளிப்பு. 10. பலன். 11. பகை. 12. கேவலம். 14. பாம் 15. சரிகை 16. நேர் 18. பருவ மழை. 20. காவல். 22. திரு. 23. மல்லி 24. சா 25. விடை.

**மேலிருந்து கீழ்**

1. பாதாதிகேசம். 2. சாடி. 3. குசலம். 4. வளி. 5. குப்பம். 8. மான் 9. புகை. 10. பலகை. 13. வரி. 14. பார்வதி. 16. நேரு. 17. கோழை. 18. பல். 19. மருவி 20. கால். 21. வலி.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:–

★ முதலாம் பரிசு: ஆர். அலோசியஸ்,
111, 'ஏ' வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

★ இரண்டாம் பரிசு: த. ஸ்ரீவாணி,
17/36, பண்டாரக்குளம் மேற்கு ஒழுங்கை,
நல்லூர் வடக்கு.

★ மூன்றாம் பரிசு: சி. அபிராமி,
சோதி பேக்கரி, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

முதற் பரிசு:– ரூபா. 150 00
இரண்டாம் பரிசு:– ரூபா. 100 00
மூன்றாம் பரிசு:– ரூபா. 50 00

★ புதிர்போட்டி இலக்கம். 29 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

# குறள் வெள்ளம்

அறமென்றால் என்னவென்று புரியாது—ஆடவேண்டிய வயது—அனுபவிக்க வேண்டிய பருவம்—அல்லது உழைக்க வேண்டிய வயது—சேமிக்க வேண்டியதேவை— இப்படிப் பல சாட்டுக்கள்.

இன்றைய நகர வாழ்க்கை மனோபாவம்—அடுத்தவன் தவிப்பைஎள்ளளவும் கருத்தில் எடுக்காதசுபாவம்—உதவிட நேரமும் மனமும் இல்லாத நிலைமை—உணர்வுகள் அற்ற இதயம்—அடுத்தவனைப்பற்றியஅலட்சியமான போக்கு.

மனிதம் இப்படி மலர்ந்தால் நாளைய உலகம் எப்படி மாறும்?

இயந்திரமாய் இயங்கும்நகர வாழ்க்கை. சொந்தப் பிள்ளைக்கு கூட சொத்தை எழுத ஏங்கும் மனிதர்கள். கொடுத்த பின்பு பிள்ளை திரும்பிப் பார்ப்பானா என்ற சந்தேகம். இப்படிப்பட்ட மனிதர்களா அடுத்தவனையும் அறத்தையும் நம்பப் போகிறார்சள்?

வயோதிபம் வாட்டும்போது யார் முன் வந்து இவர்களின்—இப்படிப்பட்டவர்களின்—நலன்களை கவனிக்கப்போகிறார்கள்? அன்பும் பாசமும் கொட்டிப் பராமரிக்கப் போகிறார்கள்? இந்த ஏக்கம் இப்போதே இவர்கள் மனதில் எழுந்துவிட்டால் ஞானம் பிறந்துவிடும்.

வாழும் காலத்தில் நீ உதவி விட்டால் பொன்றுங் காலத்தில் துணைக்கு யாரும் கிடைப்பார்கள். நன்றிக்கடன் செலுத்துவார்கள். நீ அன்பு நீரூற்றி உதவி உரமிட்டுச் சமுதாயத்தை அறம்காத்து வளர்த்துவிட்டால் பிற்காலம் பிரகாசமாக இருக்கும்.

சுடலை ஞானம் பிறப்பது போல கடைசிக் காலத்தில்—பேணிப் பொத்தி வைக்க பொருளைக் கொடுத்து—அன்பை விலைக்கு வாங்கிவிடவும் முடியாது;அது அறமும்ஆகாது.

இறப்போ—இயலாமையோ—கஷ்டமோ உனக்கு நாளையே வந்துவிடலாம். எனவே காத்திராதே. பிற்காலம் வரும்போது உதவி செய்து யாரையும் அணைத்துக் கொள்ளலாம்; அப்போது தருமமும் செய்து பாவங்களையும் தொலைக்கலாம் எனக் கனவு காணாதே.

அன்றறிவாம்—அன்று செய்வோம் எனக் கருதாது இன்றே செய். நாளை நீ பொன்றினால் அதுவே துணைக்கு வரும்.

அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க
மற்றது
பொறுங்கால் பொன்றாத் துணை.
— 0036.

(அறன்வலியுறுத்தல்)

— அம்பிகைபாகன் —

# இந்த வார இராசி பலன்

**[27 - 12 - 1997 முதல் 02 - 01 - 1998 வரை]**

| | | | |
|---|---|---|---|
| சனி | | | |
| கே | இராசிச் சக்கரம் | | |
| செ வி வெ | | | ரா |
| சூ* | புத சந் | | |

மாற்றம்:
அனுஷம் விருச்சிக இராசிக்கு மாறும்.

அரசியலில் திசைதிருப்பங்கள் ஏற்படும். உரிமை தேடி வந்தவர்கள் இடையில் ஆசைவார்த்தைகளுக்கு மயங்கா நிலையைக் காட்ட முனைவர். மக்கள் — மாணவர் — தொழிலாளர் எனப் பல ரூபங்களில் நாட்டில் போராட்ட சிந்தனைகள் ஏற்படும். தேர்தல்,சோதனைக் களம் மாதிரியான வடிவம் பெறலாம். மக்கள் தெய்வவழிபாடு செய்வர். இந்தியாவில் தேர்தல் சூடுஅதிகரிக்கும். வடக்கு — தெற்கு திசை மாற்றங்கள் ஏற்படும். தலைவர்கள் தம்மை மாற்றவும் — தலைகளை மாற்றவும் முனைவர். சிலருக்குச் சோதனைகள் வரும்.

கிழக்கு நாடுகளில் இயற்கை, செயற்கை அழிவுகள் ஏற்பட இடம் உண்டு. மேற்கு நாடுகள் ஈரான், ஈராக்மீது வல்லாண்மையைத் திணிக்கும். சமநீதி வழங்குவதாக ஐ. நா. உலகில் நடிக்கும்.

**மேடம்:** நாலுபேர் உங்களைப் புகழ்ந்தால் எல்லாவற்றையும் மறந்து விடுவீர்கள். சக்தி, புத்தி, யுக்தி உடைய நீங்கள் எதற்கும் நாலுதரம் யோசித்துச் செயற்படுங்கள். 6–1–1998ல் கும்பத்திற்கு மாறும் வியாழபகவானால் நன்மைகள் அதிகரிக்கும். காணி பூமி இடமாற்றம், தொழில் நிலையில் மாற்றங்கள் ஏற்படும். ஏழரைச்சனி நடப்பதென்று கலங்கிவிடாதீர்கள். வாழ்வு என்பது [illegible] நல்லது, கெட்டது நடக்கத்தான் செய்யும். ஆனால் உறவினர்களுடன் பொருள் விஷயங்களில், கொடுக்கல் வாங்கல்களில் அவதானமாக நடந்து கொள்ளவும். உள்ளதையும் கொடுத்துவிட்டு உருக்குலைந்த நிலையில் உறவுக்கு ஏந்தும் நிலை வரக்கூடாது அல்லவா? மாற்றங்கள் சகஜமானாலும் நாலுதரம் யோசித்துச் செயற்படுங்கள். கண், வயிறு—குடல் வருத்தங்கள்வரின் தகுந்த வைத்தியங்கள் செய்து கொள்ளுங்கள்.

★ அதிர்ஷ்டநாள்: புதன், வெள்ளி.

**இடபம்:** ஏன் அதிகம் யோசிக்கிறீர்கள்? எல்லாருடைய அலுவல்களையும் உங்கள் தலைமேல் எடுத்து வைத்துக்கொண்டு ஏன்குடும்பத்தில் எதிர்ப்பாலாருடன் கருத்து வேற்றுமைப்படுகின்றீர்கள் தொழில்ஸ்தானத்தில் புதிய அலைவீசும். குடும்பத்தில் பிள்ளைகளுக்காகவோ அல்லது சகோதரங்களுக்காகவோ அதிக செலவுகள், பிரையாசைகள் எடுத்து அவர்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவீர்கள். பொதுவிஷயங்களில் நிதானமாகச் செயற்படுங்கள். புதிய முதலீடு—புதிய மாற்றங்களை சற்று தள்ளிப்போடுங்கள். உடல்களைப்பு, காயங்கள், உஷ்ணபீடைகள், வைத்திய செலவுகள் அதிகரிக்கும். அதற்காக மனக்குழப்பம் அடைய வேண்டாம்.

★அதிர்ஷ்டநாள்:வெள்ளி.

**மிதுனம்:** உங்கள் குடும்பத்தில் எதிர்ப்பாலாருக்கு சோதனைகள் ஏற்படும். தொழில்ஸ்தானத்தில் மனதில் பட்டதைச் சொல்லாமல் இருங்கள். அல்லது தேவையற்ற பிரச்சினைகள் ஏற்பட்டு மனக்கலக்கங்களைக் கொடுக்கும். விஷபீடைகள் கொடுக்கும். உஷ்ண வருத்தங்கள்தரும். பொருள் இழப்பென்றால் அலைச்சல் ஏற்படலாம். சகோதரங்களுக்கு நற்பலன்கள் அதிகரிக்க இடம் உண்டு. தூரதேசச் செய்திகளால் யோசனைகள் ஏற்படலாம். அரச அதிகாரிகளால் தொல்லைகள் ஏற்பட இடம் உண்டு. தேவையற்ற சொற்பிரயோகங்களையும், பொருள் செலவுகளையும், பிரயாணங்களையும் தடை செய்வதற்குரிய வழிவகைகளைச் செய்யவும்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன்.

**கடகம்:** நீங்கள் பல விஷயங்களையும் அறிந்து அனுபவம் பெற்றவராவீர்கள். உங்களிடம் பலரும் ஆலோசனைகளைப் பெறுவார்கள். இரட்டை மனம் படைத்த உங்களிடமிருந்து பிறருக்கு அதிக நன்மைகள் ஏற்படும். ஆனால் உங்களுக்கு உதவ முன்வரமாட்டார்கள். இதனால் மனம் விருப்பு வெறுப்பு அற்ற நிலை ஏற்பட்டு கல்நெஞ்சம் கொண்டு விடுவீர்கள். தொழில் ஸ்தானத்தில் ஏனோதானோ என்ற நிலை. மேலதிகாரிகளின் கண்டிப்புக்கு இடம் உண்டு. எதிர்ப்பாலாருடன் அடிக்கடி வாக்குக் கலகம் ஏற்பட்டு அதிக யோசனைகள் கொடுக்கும். இடமாற்றங்கள் சகஜமாகும். எந்தளவு அனுபவங்கள் உங்களுக்கு இருந்தாலும் பாசமும்,நேசமும் இருப்பதனால் பலர் பாதை மாறி நடந்து பகைமைகளைத் தேடிக்கொள்ள இடமுண்டு. கவனமாக இருக்கவும்.

★ அதிர்ஷ்ட நாள்: வியாழன், வெள்ளி.

**சிங்கம்:** உலகத்தை அடிக்கடி எடைபோட்டபடி இருப்பீர்கள். உங்களை இறைவன் நிறைபோட்டபடி இருப்பான். போலிகள் நிறைந்த உலகில் போராட்டத்தை தினம் தினம் சந்தித்தபடியே இருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் அளவறிந்து செயற்பட்டபடி இருங்கள். கண்டிப்பும், நிர்வாகத்திறனும், இடாம்பீகமற்ற நிலையுமுடைய நீங்கள் இவ்வுலகில்— தனிமனிதர்களாத் தோன்றுவீர்கள். பொருளுக்காக உறவாடும்இவ்வுலகில்—பொருளுக்காக போராடாமல் உங்கள்பாட்டில் கடமையைச் செய்து வரும் இயல்புடைய நீங்கள் கண்டபடி எல்லோருடனும் சேரமாட்டீர்கள். கண், வயிறு, கைகால் தாக்கங்கள் கொடுக்கும். குடும்பத்தில் பொருளொன்று இழக்கும் நிலைஏற்படலாம். கடன்பட்டார் நிலையிலும்—கைலாயத்தில் மலைக்குக் கீழ் இராவணனுக்கு ஏற்

(X ஆம் பக்கம் பார்க்க)

மகாதேவா ஜோதிடம்
நல்லூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நல்லூர் பிரதேச நூலகம்

# இறைவனுக்கு வடிவம் உண்டா? என்ன அது?

மனிதனும் பிற உயிர்களும் தோன்றியது எப்படி? கடவுள் என்பவர் ஒரு படைப்பாளியாக இருந்து இவற்றை உருவாக்கியதாகக் கூறும் பல மதங்கள் உள்ளன. ஆனால் அவையும் கூடப் பூமியைத்தவிர பிற கிரகங்கள், மண்டலங்கள் ஆகியவை உருவானது எப்படி என்று சொல்லுவதில்லை. ஆனால், இந்து மதம் இவை எல்லாவற்றுக்குமே பதில் சொல்லுகிறது.

கடவுள் என்ற மாபெரும் சக்தியிலிருந்துதான் இவை எல்லாமே தோன்றின. எப்படித் தோன்றினவோ, அதே போல இவை எல்லாம் அழியக்கூடியவைதான். அப்படி அழியும்போது இவை யாவுமே, மறுபடியும் அந்த மாபெரும் சக்தியிலேயே போய்க் கலந்துவிடுகின்றன. அதனால் எங்கிருந்து வந்ததோ...எங்கே மறுபடியும் போய்ச் சேருகிறதோ அந்த சக்தியின் பல கோடிக்கணக்கான சிறு வடிவங்களே மனித—தாவர உயிர்கள்!— இப்படி ஒரு கடினமான தத்துவத்தை, மிக எளிய முறையில் சொல்லி இருக்கிறார்கள் நமது முன்னோர்.

பகவத்கீதையில் பகவான் கூறுவதும் இதுவேதான். ''எல்லாம் நானே. எல்லாவற்றையும் தோற்றுவிக்கும் சக்தியாய், எல்லாவற்றிலும் நிறைந்த சக்தியாய், எல்லாமே மீண்டும் திரும்பி வந்து கலந்து ஒடுங்கிவிடும் சக்தியாய், இருப்பவன் நானே!'' என்று கிருஷ்ணர் கூறுகிறார். இது வெறும் விஞ்ஞான தத்துவம் மட்டும் அல்ல: இந்து மதம் கூறும் மெய்ஞ்ஞானமே இதுதான்.

''எவன் பரம்பொருளை எல்லா உயிர்களிடத்திலும் பார்ப்பதாக உணருகிறானோ அவன் பிரம்மஞானத்தை அடைந்தவனாகி விடுகிறான்'' என்கிறது கீதை.

### விஞ்ஞானத் தத்துவம்

ஒரு பெரும் சக்தியிலிருந்தே எல்லாம் தோன்றுகிறது என்பது இன்றைய விஞ்ஞானம் கூறும் தத்துவமும் ஆகும். இந்த பூமியைத் தவிர பல்லாயிரக் கணக்கான கிரகங்கள், வான் மண்டலத்தில் இருக்கின்றன. அவற்றின் அளவும், சக்தியும் பூமியை விட அதிகமானவை. அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதமான தன்மை இருக்கின்றது. இவை எல்லாமே— இந்த பூமி உட்பட—ஒரு மிகப் பெரிய ஜோதிமயமான, திண்மையான கோளத்திலிருந்து வந்தவையே என்ற கருத்து, வான் மண்டல ஆராய்ச்சியாளர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

சுமார் இருநூறு கோடி ஆண்டுகளுக்கு முன்பு நமது பூமியும் சூரியனும் சந்திரனும் போன்ற கிரகங்கள் தோன்றி இருக்கவேண்டும். இவையும் பிற கோளங்களும் ஒரு மாபெரும் கோளத்திலிருந்து, தூள் தூளாக வெடித்துச் சிதறி உருவாகி இருக்கவேண்டும். இவை எல்லாவற்றுக்கும் பொதுவான பண்புகள் பல இருக்கின்றன. அவற்றின் நுட்பமான சக்திகள் பொதுவாக இருக்கின்றன. பூமியிலிருந்து எடுப்பதைப் போலவே அவற்றிலிருந்து பொருளை வெட்டி எடுத்துக்கொண்டு வந்து சோதனை செய்து பார்க்க முடிகிறது. அப்படிப் பார்க்கும்போது, அவை எல்லாவற்றுக்கும் மூலமாக இருப்பது ஒரு பொருளே என்பதும் புரிகிறது.

விஞ்ஞான இயல் கூறும் கண்டுபிடிப்புகளின்படி, எல்லா பொருள்களையும் சில ஆயிரம் பெயர்களில் தனித்தனி வடிவங்களாக அடையாளம் கண்டு கொள்ளலாம். இவை யாவும் தொண்ணூறு அடிப்படை (Elementary) பொருள்களிலிருந்து உருவானவை. இதுதான் விஞ்ஞானத்தின் ஆரம்பநிலை.

இப்போது இந்த எல்லாமே 'புரோடான்', 'நியூட்ரான்' 'எலெக்ட்ரான்' என்ற மூன்று ஆதாரங்களிலிருந்து உருவானவை என்று ஆராய்ச்சி மூலம் உணர்ந்திருக்கிறார்கள். மேலும், இந்த மூன்று ஆதார சக்திகளிடையே அதிகம் வேறுபாடு இல்லை என்பதையும் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆகவே இவை ஒன்றிலிருந்து இன்னொன்றாக மாறமுடியும்: எல்லாமே ஒன்றாகவும் சேர முடியும்.

நடைமுறையில் இதைப் பார்ப்போம். ஒளி, சூடு, எக்ஸ்ரே, ரேடியோ அலைகள், காமா அலைகள் ஆகிய இவை எல்லாம் வெவ்வேறு செயல்களுக்குப் பயன்படுகின்றன. ஆனால் இவை யாவுமே ஒரே சக்தியான மின் - காந்தம் (Electro - Magnetic) என்ற மூலத்தின் வெவ்வேறு உருவங்கள்தாம்.

### சக்தி வடிவங்கள்

சக்தி இப்படி வெவ்வேறு வடிவமாக இருப்பது போல, உலகத்தில் உள்ள வெவ்வேறு பொருள்களும் வடிவங்களில் வித்தியாசமாக இருக்கின்றன. உயிருள்ளவைகளே நகர்ந்து செல்லக் கூடியனவாகவும், ஒரே இடத்தில் நிலையாகவும் இருக்கின்றன. உயிரில்லாத பல பொருள் நகர்ந்தும், ஓடியும், நகராமல் நிலையாகவும் இருக்கின்றன. மனிதன் — மிருகம்—தாவரம் — ஆறு — மலை — இப்படிப் பல வடிவங்களாகவும் இவை இருக்கின்றன. இவை எல்லாவற்றையுமே இறைவனின் உருவங்களாக வைத்து வழிபடுவது இந்துமதம். உயிருள்ளவற்றுக்கும் உயிரில்லாதவற்றுக்கும் அதில் வேறுபாடு இல்லை. ஆறுகளைத் தாயின் உருவமாகவும், மலைகளை ஈசனின் உருவமாகவும் வைத்து அது வழிபடுகிறது.

## விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

### பொருளும் சக்தியும்

இன்றைய விஞ்ஞானிகள் பொருளும் சக்தியும் (Matter and Energy) தனித்தனி அல்ல; இவை இரண்டுமே ஒரு மெய்ப்பொருளின் இரண்டு வடிவங்கள்தாம் என்று கூறுகிறார்கள். இதை நமக்கு அறிமுகப்படுத்திக் கூறியவர் பிரபல விஞ்ஞானி ஐன்ஸ்டீன். உயிரில்லாதவற்றுக்கும் உயிருள்ளவைக்கும் இடையில் பிரிக்க முடியாத எல்லை ஒன்றும் இல்லை என்றும் இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள்; அதாவது, உயிரில்லாத ஜடப் பொருள்களும், உயிருள்ள மனித — மிருக — பறவை இனங்களும் ஒரே மூலத்தின் வெவ்வேறு வடிவங்கள் என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. நமது வழிபாட்டுக்கு உரிய வெவ்வேறு உருவங்கள், சின்னங்கள், பரம் பொருளின் வெவ்வேறு அடையாளங்கள் என்று இதையே நமது தத்துவங்களும் கூறுகின்றன அல்லவா?

### மூலசக்தி எது?

ஒன்றுமில்லாத ஒன்றிலிருந்து இவ்வளவும் வருவது எப்படி என்கிற விந்தையே இன்று விஞ்ஞானம் ஒப்புக் கொள்ளுகிறது. கண்ணுக்குத் தெரியாத மிக நுட்பமான புள்ளியான விந்து, கருவில் தோன்றியதும் பத்து மாதங்களில் பல்லாயிரம் மடங்கு பெருகி, சக்தியும் வடிவமும் பெறுகிறது; பிண்டமாக இருந்த மாமிசத்துக்கு உணர்ச்சிகளும் சக்திகளும் தோன்றி விடுகின்றன. பார்வை, பேச்சு, உணர்வு போன்றவற்றை அடைந்து முழுமையாகி அது மனிதக் குழந்தையாகி விடுகிறது. இதன் அடிப்படையை மருத்துவ விஞ்ஞானம் தொட்டுக் காட்டுகிறது. ஆனால் இதன் மூல சக்தியை— ஆதாரத்தை — அது இன்னும் அடையாளம் காண முடியவில்லை. இந்த மூலசக்தியே கடவுள் என்பது நம்முடைய சித்தாந்தம். அதனால்தான் இவ்வளவு முன்னேற்றம் அடைந்துள்ள மனிதனால் இறந்ததைப் பிழைக்க வைக்க முடியவில்லை; புதிதாக உயிரை உருவாக்கவும் முடியவில்லை.

மனித உடலையே எடுத்துக் கொள்ளுவோம். அது ஒரு பெரிய தொழிற்சாலை. அதில் கோடிக்கணக்கான கலங்கள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் மிக நுட்பமான வேலைகளைச் செய்கின்றன. இவற்றைத் தவிர, அடையாளம் காட்ட முடியாத உணர்ச்சிகள், திறமை, ஞாபக சக்தி, போன்ற பண்புகளும் அந்த உடலில் இருக்கின்றன. இந்த உடலின் வளர்ச்சிக்கு உணவுப் பொருள்கள் மட்டும் பயன்படுவதில்லை. உணர்ச்சியின் மூலமாகவும் அது வளருகிறது. ஒரு காதல் உணர்ச்சி, சாதாரண மனிதனை வீரனாக்கிவிடுகிறது. ஒரு பக்தி உணர்வு, சாமானியனைத்தெய்வீகமாக மாற்றி விடுகிறது.

- லட்சுமி -

இவ்வளவு விதமாகவும் அமைந்துள்ள உடம்பின் இயலில் ஒரு சிறிதளவையே விஞ்ஞானம் இதுவரை உணர்ந்திருக்கிறது. இவை யாவற்றையும் கட்டுப்படுத்தி, ஆட்டுவித்து, இயக்கும் ஒரு சக்தி இவற்றுக்குப் பின்புலமாக இருந்தே ஆகவேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறோம். அந்த சக்தியே நம்மைத் தோற்றுவித்து இயக்கும் பரம்பொருள் என்று நமது உபநிடதங்கள் கூறுகின்றன.

ஒன்றாக இருந்து பலவாகவும் இயங்கும் சக்தியைக் கடவுள் என்று கூறுகிறோம். இப்படிப்பட்ட ஒரு சக்தியின் இன்றைய வடிவமாக நாம் உணர்வது மின்சாரம். மின்சாரம் இயற்கையில் மின்னலாகவும், இடியாகவும், மழையாகவும், பாய்ந்து செல்லும் நீராகவும் அடங்கி இருக்கிறது. இவையெல்லாம் நாம் வழிபடும் இயற்கையின் பிம்பங்களான தேவதைகள்.

இந்த மின்சாரம், கடவுளின் தத்துவமாக இன்றைய விஞ்ஞானத்தின் முன்னேற்றத்தில் நமக்குக் காட்சியளிக்கிறது. நமக்கு சூட்டையும், ஒளியையும், காற்றையும் அது தருகிறது. நம்மை இயக்குவிக்கும் சக்தியாக அது பயன்படுகிறது. நம்முடைய உடம்பிலேயே கோடிக் கணக்கான மின்சக்தி கொண்ட அணுக்கள் இருந்து இயங்குகின்றன. மனித உடலின் நுட்பங்களை உணர்ந்து அறிவதற்கு மின்சாரம் பயன்படுகிறது. இப்படி ஒன்றாக இருந்து பலவாகவும் மாறிப் பலவிதமாகவும் பயன் படுவது மின்சாரம். அது இரும்பு, செம்பு, போன்ற ஜடப்பொருளின் மூலமாகவும் இயங்கும். மனித உயிர்களின் மூலமாகவும் இயங்கும். மனிதனால் செய்ய இயலாத அபார சாதனைகளையும், விண்வெளியில்—ஒளிவடிவமாகவும் (ரேடியோ), ஒளி வடிவமாகவும் (டெலிவிசன்), வான்மண்டலப் பயணமாகவும் (செயற்கைக் கோள்) செய்து காட்டமுடியும். மிகச்சாதாரணத்தில் இருந்து மிக உயர்ந்த துவரை அசைய முடியாததிலிருந்து அசுரவேகம்வரை, கண்ணுக்கு தெரியாமல், அதன் முழு சக்தியையும் நாம் இன்னும் புரிந்துகொள்ள முடியாமல்— நீக்கமறப் பரவி நிற்பது மின் சக்தி.

ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள் — நமது மதம் கூறும் பரம்பொருளின் தத்துவமே இதுதானே?

'By the discovery of electricity, science has undoubtedly opened the window on the mystery of divine' (இந்த மாபெரும் சக்தியான மின்சாரத்தைக் கண்டுபிடித்ததன் மூலம், மனித குலத்துக்குத் தெய்வீக சக்தி என்பது என்ன என்பதைப் புரிந்து கொள்ளும் உணர்வு கிடைத்திருக்கிறது) என்று கூறினார் பிரபல விஞ்ஞானி ஜி. ஆர். ஹரிஸன்.

இயற்கையின் வடிவங்களை தெய்வத்தின் வெவ்வேறு பிம்பங்களாக அன்றே வழிபடக் கற்றுக் கொடுத்தது அல்லவா நமது மதம்? ★

# தமிழ் சினிமா...

(IV ஆம் பக்கத் தொடர்)

விளைந்த மரபுகள், சடங்குகளை ஓரளவு அடியொற்றியவர்களாகவே உள்ளனர். நமது புராணங்களும், இதிகாசங்களும் நம்மிடையே விதைத்திருக்கும் சிந்தனைப் போக்கை அடியொற்றி, அதைக் காலத்துக்கும் சூழலுக்கும் ஏற்றவாறு வடிவமைத்து தகவமைத்துத் தமிழ்ச் சினிமாவும் நடந்து வந்துள்ளது. இதனைத் தமிழ் ரசிகர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். அதனால் தான் இன்று நடிப்பென்பது இல்லாமல் வெற்றுப் பாவனைகளாலும் அடிதடிகளாலும் 'சூப்பர் ஸ்டார்' ஆக வந்துள்ள ரஜனிகாந்த் ஒரு கோடி ஆண்களின் தலைவனாகவும், தமிழக அரசியல் நிர்ணய சக்தியாகவும் மாறி, ஒரு படத்துக்காக 15 கோடி ரூபாவை பெற்றுக் கொள்ளும் நிலை தோன்றியுள்ளது. தமிழ் ரசிகர்கள் அவரை ஆபத்பாந்தவனாகப் போற்றவும் தலைப்படுகிறார்கள்.

எம். ஜி. ஆரிடமிருந்த இந்த மயக்கும் சிம்மாசனம் இப்போது ரஜனிகாந்தின் கைமாறிப் போயிருக்கிறது. இல்லாவிடில், ரசிகர்களின் காதுகளில் ஒரு கொத்துப் பூவை வைக்கும் 'அருணாச்சலம்' என்ற படம் தமிழ்ச் சினிமா ரசிகர்களிடையே அதிக எதிர்பார்ப்பையும் கூடுதல் வசூலையும் பெற்றிருக்க முடியாது.

தமிழ்ச் சினிமாவுக்கூடாக தமிழ்ச் சினிமாவின் தயவுடன் நகரும் தமிழ் நாட்டு அரசியலையும், தமிழக மக்களின் வாழ்வையும் என்னவென்பது? திருச்சியில்நடிகை குஷ்புவுக்கு 'ஸ்ரீகுஷ்பிகாம்பாள் ஆலயம்' என்ற பெயரில் ஒரு ரசிகன் கோயில் கட்டினான். தமிழக முதல்வர் மு. கருணாநிதி சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி அடிக்கடி சினிமாவுள் நுழைந்து, அதனூடாகத் தனது அரசியல் ஆதாயத்தை நிலைநிறுத்துகிறார். எம். ஜி. ஆரின் வாரிசுகள் தர்மே எனக் காட்ட ஒரு புறம் பாக்கியராஜும், மறுபுறம் ராமராஜனும், இன்னொரு கோணத்தில் 'புரட்சித் தமிழன்' என்ற கோதாவில் சத்ய ராஜும், 'புரட்சிக் கலைஞர்' என்ற மகுடத்தில் விஜயகாந்தும் சகலகலா வல்லவனாகத் தன்னை நிலை நிறுத்திக் காட்டும் டி. ராஜேந்தரும் முயல்கின்றனர். அரசியல் நோக்கி அரசியலாக தமிழ்ச் சினிமா பயன்பாடடைகிறது.

கவிஞர் சி. கருணாகரன் கூறியது போல, தமிழ்ச் சினிமா மாய வட்டங்களில் தான் சுழல்கிறது; சாமானிய ரசிகர்களும் அதில் சுழல்கிறார்கள். அதற்குப் புறம்பாக வரும் நல்ல படங்களை அவர்கள் அங்கீகரிப்பதில்லை. பாலுமகேந்திராவின் 'வீடு' போன்ற நல்ல படங்களின் தோல்வி இதைத்தான் அழுத்தி நிற்கிறது. இது ஆரோக்கியமான நிலமையல்ல.

இதைக் களைவது எவ்வாறு?

சாமானிய ரசிகர்களின் ரசிக மனோபாவத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலமே இதனைச் சாத்தியப் படுத்த முடியும். அவ்வாறான சாத்தியப் பாட்டுக்கு பல வழிகளிலும், பெருமளவிலும் நல்ல படங்களை அறிமுகம் செய்து வைக்க வேண்டும். அதுதான் இன்றைய தேவையுங் கூட. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வார இராசி....

(VIII ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட சிறைப்பட்ட நிலை போன்றும் வேதனையும், சோதனையும் வட்டமிட்டபடி இருக்கும். தெய்வவழிபாடு ஒன்றாலேயே மனச்சாந்தி ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன்.

**கன்னி:** இவ்வுலகில் வளைந்து கொடுத்து வாழத் தெரிந்த நீங்கள் கொஞ்சம் கோபிக்காமல் இருக்கப் பார்த்துக்கொள்ளுங்கள். தொழில் ஸ்தானத்திலும், குடியிருக்கும் குவலயத்திலும் அயலில் உள்ளவர்களுடன் அவதானமாக இருங்கள். வேலையற்ற ஒருசிலரின் தேவையற்ற பெட்டிசங்கள், பொறாமையால் பறந்து திரியும். நாவடக்கமும், புன்சிரிப்பும், அமைதியான போக்காலுமே சமாளிக்கலாம். உஷ்ணபீடைகள், வழக்கு வம்புகள், களவு, இனஜன விரோதம், கெட்டவர்களின் கோபப்பார்வை, வீண்பழி கேட்டல், கொடுக்கல்வாங்கல்களில் பிரச்சினைகள் கொடுக்கும். இடைக்கிடை வீட்டில் கலகலப்பிருக்கும். இக்காலம் கிரகமாற்றங்களின் முன் பலன் நிகழ்வுகள் இருப்பதனால் நிதானமாக உங்கள் செயற்பாடுகளில் இருக்கவும். மனக்குழப்பங்கள் சர்வ சாதாரணம். குலதெய்வ வழிபாடு முக்கியமாகும்.

★ அதிர்ஷ்ட நாள்: வெள்ளி.

**துலாம்:** இவ்வுலகில் நாம் நினைப்பதெல்லாம் நடந்து வருகின்றதா? ஏதோ முயற்சி எடுப்போம். வாழும் வரை வாழுவோம். நாலு நல்ல விஷயங்களைச் செய்வோம். நாலு மனுஷரை வாழவைப்போம் எனச் சிந்தியுங்கள். காலபலன் தரும் சக்கர வாழ்வு: எமது காலம் வரும் பொழுது காத்திருந்து செயற்படுவோம் என எண்ணுங்கள். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் ஆதரவும்— நண்பர்களின் உதவிகளும் கிடைக்கும். மறைமுக எதிர்ப்புக்களை உணருவீர்கள். முன்பாக்கிகள் சம்பந்தப்பட்ட ஆலோசனைகளால் சிலருக்கு நன்மைகள் ஏற்படும். குடும்பத்தினரின் செலவுகள் அதிகரித்தாலும் கொண்டாட்டங்களும், மனத்திருப்தியும் ஏற்படும். இடமாற்றங்கள் சர்வசாதாரணம். பொருள்களிலும், வாகனங்களிலும் அவதானமாக இருக்கவும்.

★ அதிர்ஷ்ட நாள்: வெள்ளி.

**விருச்சிகம்:** விகடப் பேச்சும், இரட்டைக் கருத்தும் சிலருக்கு வேதனையைக் கொடுக்கும். சிலரைச்சிந்திக்க வைக்கும். தொழில் ஸ்தானத்தில் மாற்றங்கள் கொடுககலாம். திடீர் நண்பர்களால் வேதனைகள் காட்டுகின்றன. வீடு மனை, வாகனம், எதிர்ப்பாலாரின் பேச்சுக்கள் என்பனவற்றால் உங்கள் செயற்பாடுகளில் எதிர்பாராத மாற்றங்கள் கொடுக்கும். சிலருக்கு புதிய தொழில் அல்லது வருமானங்களால் நன்மைகள் ஏற்படும். மறைமுக எதிரிகள் உங்களைக் கண்டு ஓடி ஒழிப்பார்கள். புத்திரால் அல்லது சகோதரங்களால் பொருள் செலவுகள் அதிகரிக்கும். சிலருக்கு இடமாற்றங்களால் நன்மைகள் அதிகரிக்கும். தெய்வ வழிபட்டாலும் நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, புதன்.

**தனுசு:** நீங்கள் இக்காலத்தில் கொஞ்சம் நிதானமாகச் செயற்படல் வேண்டும். உங்களின் வளவழுத்த பேச்சுங்களால் விபரீதங்கள் ஏற்படலாம். பக்கத்தில் பகையாளிகள் சூழ்ந்திருக்கையில் நாலு தரம் யோசித்து நடவுங்கள். தொழில் ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டியான சம்பவங்கள் நடக்கும். நாம் நினைப்பதெல்லாம் நடந்துவிடுமா? புதிய இடங்கள், புதிய தொழில் நன்மை தரும். கால்உளைவு, உஷ்ண, சளி பீடைகளால் வருந்த வேண்டி வரலாம். இடைக்கிடை அலைச்சல்கள் கொடுக்கும். மனப்பயம், மறைமுகப் புகைச்சல்கள் அடிக்கடி ஏற்படாமல் இருக்காது. ஏதோ சமாளித்துக் கொள்ளுங்கள். நண்பர்கள் பெரியவர்களால் நன்மைகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்டநாள்: ஞாயிறு, வியாழன்.

**மகரம்:** எதை எடுத்தாலும் அதிகபிரயாசை மட்டும்தான். ஒரு செயற்படாத் தன்மை ஏற்பட்டபடி இருக்கும். நீங்கள் உழைப்பாளிகள்தான். ஆனால் மற்றவர்களைப் புகழ்பாடமாட்டீர்களே. அதனால் பல சந்தர்ப்பங்களை இழந்துவிடுவீர்கள். ஆனால் உங்களிடம் உதவி பெற்றவர்கள் உங்களிலும் உயர்ந்து செல்லும் பொழுது மனம் புழுங்காமல் இருக்கமாட்டீர்கள். என்னசெய்வது? விதித்த விதிப்படிதானே நடக்கும். எதிர்ப்பாலாரின் ஆதரவால் ஆறுதல் அடைவீர்கள். தொழில் ஸ்தானத்தில் நஷ்டமும் கஷ்டஅலைச்சலும் கொடுக்கும். இனஜனங்கள் குறை சொல்லுவார்கள். ஒருவாறு கதைத்துப் பேசிச் சமாளித்துக் கொள்ளுங்கள். வயிறு, நெஞ்சு, கைகால் உளைவு, நோக்கள் கொடுக்கும். சளியால், உஷ்ணபீடைகளால் வருந்துவீர்கள். வைத்தியம் செய்யவும்.

★ அதிரிஷ்டநாள்: ஞாயிறு.

**கும்பம்:** நீங்கள் காலநேரமறிந்து செயற்படவேண்டும். பிரயாணங்களை இவ்வாரம் கட்டாயம் தவிர்த்துக் கொள்ளவும். அரசியலில், பொதுக்காரியங்களில் ஈடுபடுபவர்கள் இயலுமான அளவு தவிர்த்துக் கொள்ளவும். அல்லது இழப்புக்கள் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் கவனமாக நடந்து கொள்ளுங்கள். உங்களைச் சுற்றி இருப்பவர்களில் ஒரு சிலரால் காட்டிக் கொடுக்கப்படுவீர்கள். உங்களை எல்லோரும் மதிக்க வேண்டும் என அடிக்கடி நினைப்பீர்கள். மக்களின் ஆதரவும், அன்பும் உங்களுக்கு இருக்கும். நீங்களும் நியாயப்படி நடந்து கொள்ளுவீர்கள். ஆயினும் காலசக்கர கிரக ஓட்டத்தின் மாற்றங்களால் சில தாக்கங்கள் ஏற்படும். 6-1-1998 இல் வியாழ மாற்றம் உதயத்தில் வருவதனால் முன்னரிலும் நன்மைகளைத் தந்தாலும் மனத்திருப்தி இராது. சளி, சலம், தலை சம்பந்தமான இடங்களில் நோ ஏறபடலாம். வைத்தியம் செய்யவும்.

★ அதிர்ஷ்ட நாள்: வியாழன்.

**மீனம்:** நீங்கள் கால ஓட்ட சக்கரத்தின் கதாநாயகர். 6-1-1998 இல் வியாழமாற்றம். உதயத்தில் சனிபகவானின் ஆதிக்கம். ஏழரைச் சனியாகப் பலன் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். கலகம் பிறந்து நியாயம் பிறக்கும், பலன்கள் உண்டு. தொழில் ஸ்தானத்தில் லீவுகள் எடுக்காமல், மற்றவர்களுடன் அன்பாக இருங்கள். எதிர்ப்பாலாரின் ஆலோசனைப்படி நடவுங்கள். அல்லது அவமானங்கள் ஏற்படலாம். வாழ்க்கை என்பது இன்பம், துன்பம், அழுகை, சிரிப்பு எல்லாம் கலந்ததுதானே? வாய்வு, விஷபீடை, உஷ்ண வியாதிகள், விறைப்பு, சளி என்பன கொடுக்கும். வைத்தியம் செய்யவும். எதிர்நீச்சலடித்து வெற்றிவாகை சூட்டுவீர்கள். எதற்கும் தைரியத்துடன் எதிர்த்துப்போராடுங்கள். உங்களுக்கு மனம் அறியாதவர்களுடனும், புதிய நண்பர்களுடனும் அவதானமாக இருங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, வியாழன்.

# துணை....

(V ஆம் பக்கத் தொடர்ச்சி)

மட்டுமில்லை...''

நான் திகைத்துப்போய் எதுவும் பேசாதிருந்தேன்.

...''வீடு வளவு அக்காவுக்குப் பிறகு உனக்குச் சேருமெண்டு...''

''அண்ணை! என்ன சொல்லிறீங்கள்? நான்...''

எனக்கு எல்லாம் வெறுத்துவிட்டது. நான் கனவிலும் நினைக்காதவற்றை ஊரார் பேசுகிறார்கள் என்னும் போது...

''சே! இந்த ஊர்வாயை மூட முடியாது' என எண்ணிக்கொண்டேன்.

வல்லிபுரத்தார் ஆறுதல் கூறுவது போலப் பேசினார்.

''நாதன் நீ ஒண்டுக்கும் யோசியாதை. என்னைப்பார் அறுபத்தஞ்சு வயதிலையும் கம்பு மாதிரி இருக்கிறன். உன்ரை கொக்காவுக்கும் கனக்க வயது இல்லை. ஒரு அம்பது தானே. அவள் டிவோஸ் எடுத்துக் கொண்டு வரட்டும். நான் கட்டிறன். என்னை மாதிரி ஒரு நல்ல மாப்பிள்ளை அவளுக்குக் கிடைக்காது...''

''எளிய ராஸ்கல்! இதுக்குத்தான் இவ்வளவு கதை போட்டனீரோ? ஊரெல்லாம் மேஞ்சு கொண்டு... உமக்கு இப்ப சாகிற வயதிலை துணை தேவைப்படுகுதோ? உமக்கு அக்காவைத் தாறநேரம் கிணத்துக்க பிடிச்சுத் தள்ளலாம்...''

மனதினுள்ளே திட்டினேன்.

வதந்திகளின் பிறப்பிடம் வல்லிபுரத்தாராக இருக்கும்போது எப்படி என்னால் வெளிப்படையாகத் திட்ட முடியும்? பிறகு மனிசன் எக்கச்சக்கமாகக் கதையைக் கிளப்பிவிடும். இவரிடம் 'நைசாகத்' தான் பேச வேண்டும் என எண்ணிக் கொண்டேன்.

''அண்ணை! நீங்கள்சொல்லிறதும் சரிதான். எண்டாலும் அக்காவை ஒரு சொல்லுக் கேக்க வேணும். அவவின்ர விருப்பத்தோட தான் எதுவும் செய்யலாம்...''

வல்லிபுரத்தாரின் வாயெல்லாம் பல்லாகியது.

''ஆ பேந்தென்ன?இந்தா! கொக்காவுக்குக் கொண்டு போய்க் குடு...'' என்றவாறு இனிப்புப் போத்தலைத் திறந்து ஒருபிடி அள்ளி நீட்டினார்.

இனிப்பைத் தந்து அக்காவை வளைக்கும் எண்ணமோ? சின்னப்பிள்ளை என நினைத்து விட்டார் போலும். அவசரமாக மறுத்தேன்.

''...வேண்டாமண்ணை பிறகு பாப்பம்......''

விடைபெற்றுக் கொண்டு சைக்கிளில் ஏறினேன்.

எனது உழக்கலில் என் கோபம் வெளிப்படையாகத் தெரிந்தது. ஒருவாறு வீட்டிற்கு வந்து சேர்ந்தேன்.

வாசலில் மோட்டார் சைக்கின் ஒன்று நிற்பது தெரிந்தது. யாராயிருக்கும் என எண்ணமிட்டவாறே வீட்டினுள் நுழைந்தேன்.

''வாரும் நாதன்!'' அமர்ந்திருந்தவர் வரவேற்றார்.

இவர்...?

யாரென்று நினைவுக்குக் கொண்டுவர முயன்று தோற்றேன்.

...''என்ன மறந்து போனீரோ...''

வந்தவர் முகத்திலே சிரிப்பிருந்தது. என் தலையை தடவிக் கொண்டேன்.

...''அவரின்ர மச்சானடா தம்பி...'' அக்கா பதிலளித்தாள்.

'அவரின்ர' என்று சொல்லும் போதும் அக்காவின் குரலிலிருந்த பரவசம் என்னை நிமிரவைத்தது.

''ஓ...! சிவபாதம்! நான் மறந்துதான் போனேன் அது [illegible] நீர் இங்கதான் [illegible] பாணம் வந்த இடத்திலை...''

''இங்கதான் வாறன். ஒரு முக்கியமான அலுவல் கதைக்க வேணும்...'' என்றவாறு சிவபாதம் அக்காவைத் திரும்பிப் பார்த்தார்.

''நீங்கள் கதையுங்கோ வாறன்''

அக்கா உள்ளே போய்விட்டாள்.

''...சரி சொல்லும் என்ன பிரச்சினை?'' எனது குரலில் ஆவல் தொனித்தது.

...''என்னெண்டு தொடக்கிறதெண்டு தெரியேல்லை நாதன். நீர் என்னைப் பிழையா நினைக்கக்கூடாது. நான் இடையிலை இருக்கிற ஆள். என்னோடை சண்டை பிடிக்கக்கூடாது...'' என்று சிவபாதம் இழுத்தார்.

''இதென்ன கூத்து? மனிசன் நல்லாப்பீடிகை போடுது ஒரு வேளை... அத்தான் 'டிவோஸ்' எடுக்கிற அலுவலா அனுப்பி இருப்பாரோ?...'' சிந்தனை வசப்பட்டவாறே, ''விஷயத்தைச் சொல்லுமன் பாப்பம்'' என்றேன்.

...''ஒண்டுமில்லை... உவர் அத்தான் என்னை அனுப்பினவர். பழசை எல்லாம் மறக்கட்டாம். செய்த பிழைக்கு மன்னிப்புக் கேக்கிறாராம். அக்காவை வந்து தன்னோடை வாழட்டாம்...''

சட்டென்று என் உள்ளம் குளிர்ந்து போவதை உணர்ந்தேன்.

வல்லிபுரத்தாரிடம் கதைத்துவிட்டு எரிச்சலுடன் வந்த எனக்கு இந்த வார்த்தைகள் அமுதம் போல இருந்தன. கடைசிக்காலத்திலாவது அக்கா சந்தோஷமாக வாழப்போகிறாள் என்ற பூரிப்பு எனக்கிருந்தாலும், அத்தான் வந்து அழைக்காதது பெரிய குறையாகப்பட்டது. ஒருவேளை முகத்தில் விழிக்க வெட்கப்பட்டிருக்கலாம்.

''சிவபாதம் உண்மையாகவே சொல்லிறீர்? எனக்கு என்ன சொல்லிறதெண்டு தெரியேல்லை. அத்தான் ஏன் வரேல்லை?''

''அவர் என்னெண்டு வருவார்? பாரிசவாதம் வந்து வலது கைகால் இழுத்துப் போட்டுது. ஆள் படுத்த படுக்கைதான்''

என் தலையில் இடி இறங்குவது போல உணர்ந்தேன்.

''எளிய மனிசன்! இவ்வளவு காலமும் ஏன் நாயே எண்டு கூடக் கேக்காதவருக்கு இப்ப கழுவித்துடைக்க மட்டும் அக்கா தேவைப்படுகுதாக்கும். இப்பமட்டும் அக்கா சண்டைக்காறி இல்லையாமோ? போய்ச் சொல்லும் சிவபாதம். அக்கா வரமட்டா. அவ கடைசிவரை என்னோடை தான் இருப்பா எண்டு.''

கோபத்திலே துள்ளிக்குதித்தேன். கதவினூடு என் மனைவி கூட எட்டிப்பார்த்தாள். எனது வார்த்தைகளிலிருந்த நியாயத்துக்குக் கட்டுப்பட்டுச் சிவபாதம் அமைதியாக இருந்தார்.

அக்கா சரேலென வெளிப்பட்டாள்.

''தம்பி! கொஞ்சம் பொறு நான்... அவரோட போய் இருக்கிறதா முடிவு செய்திட்டன்...''

''அக்கா...!'' திகைத்துப் போனேன்.

அக்கா கண்களிலே துளிர்த்த கண்ணீரைத் துடைத்து விட்டுக் கொண்டாள்.

''இப்பிடி எல்லாம் கதைக்கிறன் எண்டு உனக்குக் கோபமாயிருக்கும். இவ்வளவு காலமும் என்னை ஆதரிச்சாய் அதுக்கு நான் என்ன செய்தாலும் ஈடாகாது. இந்த சந்தோஷமான குடும்பத்திலையிருந்து பிரிஞ்சு போறது எனக்குக் கவலைதான். எண்டாலும்... அவர் இப்பிடிக் கைகால் வழங்காமல் கிடக்கேக்க என்னாலை போகாமல் இருக்கேலாதடா...'' கேவினாள் அக்கா.

ஐந்து நாள் வாழ்க்கை அத்தானின் மேல் இவ்வளவு பிடிப்பைக் கொண்டு வருமா? பிரமிப்புடன் அக்காவையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

''...கலியாணத்தின்ர முக்கிய நோக்கம் சந்ததியைப் பெருக்குகிறது மட்டுமில்லை. இப்பிடி வயதான காலத்திலை... நோய்வாய்ப்பட்ட நேரத்திலை ஒருத்தருக்கு ஒருத்தர் அனுசரணையா இருக்கிறதுதான். அது அவருக்கு இப்பதான் விளங்கியிருக்கு. தயவு செய்து என்னைத் தடுக்காதை. நான்... நான்..'' மேற்கொண்டு எதுவும் பேச இயலாதவளாய் முகத்தைப் பொத்திக் கொண்டு உள்ளே ஓடினாள் அக்கா.

வரவேற்பறையிலே கனத்த மௌனம் நிலவியது.

உள்ளே அக்கா அழுவது கேட்டது. ஒருநாளும் அழாதவள் இன்று எதற்காக அழுகிறாள்?

இழந்து விட்ட சந்தோஷங்களை நினைத்து அழுகிறாளோ?

அவள் போக விரும்பும் போது நான் தடையாக இருக்கக் கூடாது.

பாவம் அக்கா!

இனியாவது வாழட்டும்.

(யாவும் கற்பனை)

# பேராசைக்...

(III ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூத்தாடியது.

பிறகு சுற்றிச் சுற்றி வந்தது. எதை முதலில் தின்பது என்று புரியவில்லை. இறந்து கிடந்த மனிதனின் பக்கத்தில் நாண் பூட்டிய வில் இருந்தது.

''இதென்ன?'' என்று சொல்லியபடி வில்லின் நாணை தன்னுடைய காலால் தேய்த்தது. நாணிலிருந்து இனிமையான ஓசை 'டண், டண்' என்று எழுந்தது.

''ஆகா! எவ்வளவு இனிமையான ஓசையைச் செய்கிறது. இவ்வளவு இனிமையான குரலை உடைய இதை உண்டால், அது நாக்கிற்கு எவ்வளவு ருசியாக இருக்கும்?'' என்று நரி யோசித்தது.

உடனே அதைத் தின்ன வேண்டும் என்ற ஆசை நரியின் உள்ளத்தில் தோன்றியது. நாக்கில் நீர் சுரந்தது.

நாணைக் காலால்பற்றி எடுத்தது. அப்படியும் இப்படியும் திருப்பிப் பார்த்தது. கைகளால் சுண்டி விட்டதும் மறுபடி இனிமையான ஓசை எழுந்தது.

உடனே நாணை வாயால் கௌவியது. வேகமாகக் கடித்து இழுத்தது. அம்பு பூட்டியிருந்த அந்தவில்லை இழுத்தது. அம்பு'விர்' ரென்று குள்ள நரியின் வாய்க்குள் சென்று தைத்தது. குள்ள நரி அந்த இடத்திலேயே விழுந்து உயிரை விட்டது.

இறந்து கிடந்த உடல்களைப் பார்த்து, எல்லாவற்றையும் தானே உண்ண வேண்டும் என்று எண்ணியது. பலகாலம் உண்டு மகிழ வேண்டும் என்று விரும்பியது.

ஆனால் நடந்தது என்ன? விரும்பியதை உண்ணாமல் அதற்கும் மேலே பேராசைப்பட்டு வேறொன்றை உண்டு, தன் உயிரையும் விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# தாத்தாவும் பேரனும் வீக்கமும்

தாத்தா முற்றத்தில் கதிரையில் உட்கார்ந்திருந்திருந்தார். தாத்தாவின் மெல்லிய தேகத்துக்கு பொருத்தமில்லாமல் கால்கள் இரண்டும் ஊதிப்பருத்திருந்தன. தூரத்தில் பையன்களின் ஆரவாரச் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன. பேரன் ஓடி வந்தான். வீட்டுக்குள் நுழைந்து சாக்குப்பையொன்றை எடுத்துக் கொண்டு வெளியில் ஓடினான்.

''டேய் என்னடா அது?''

''தேன்கூடு மாமரத்திலை. தேனெடுக்கப்போறம்.''

''டேய் டேய்'' என்றார் தாத்தா. அவன் நிற்கவில்லை. ஓடி மறைந்து விட்டான். சிறிது நேரம் பையன்களின் கூச்சல்கள் கேட்டுக் கொண்டிருந்தன.

சிறிது நேரம் கழித்து பேரனைச் சில பையன்கள் பிடித்து அழைத்து வந்தார்கள். அவன் 'ஐயோ அம்மா' என்று புலம்பிக் கொண்டிருந்தான்.

இரவு நிலாவில் தாத்தாவும், பேரனும் அமர்ந்தார்கள். தாத்தாவுக்கு கால் வீங்கியிருந்தது. பேரனுக்கு கை வீங்கியிருந்தது. அது வலித்தது.

இது இரு தலைமுறைகளின் வீக்கம். இருக்கட்டும். அடி, காயம், 'பூச்சி பொட்டுக்கடி' போன்றவற்றுக்கு உடல் ஏன் பெருத்து வீங்குகிறது?

எங்கள் உடலில் இரத்தக் குழாய்கள் இலை நரம்புகள் போல உடலெங்கும் கிளைவிட்டு பரந்திருக்கின்றன. இதயத்தின் வேலை — இவற்றுள் இரத்தத்தைச் சுற்றியோடச் செய்வது. இதயத்துக்கு குருதியை கொண்டு வருபவை நாளங்கள், (இவைதான் கை மேற்பரப்புகளில் வளைந்து நெளிந்து காணப்படுபவை.)

இதயத்திலிருந்து இரத்தத்தை கொண்டு செல்பவை நாடிகள், இந்த நாடிகள் தும்பாக்கப்பட்ட பன்னையோலை போல பிரிந்து மயிர்த்துளையளவு குழாய்களை ஆக்க.... அவை ஒன்று சேர்ந்து நாளத்தை உருவாக்க... வந்த இரத்தம் நாளத்தினூடாக இதயத்தை அடைய...... இதயம் சுருங்கி நாடியூடாக உந்தித்தள்ள...

இப்படி சுற்றி சுற்றி இரத்த மோடுவதால் அதைச் 'சுற்றோட்டம்' என்கிறோம்.

இழையங்கள், கலங்களைச் சூழ பாய் பொருளிருக்கிறது. அங்கும் ஒரு சுற்றோட்டம் நிகழுகிறது. அது ஒரு சின்ன வட்டம். இரத்த மயிர்த்துளைப் பின்னல்களில் நாடிப் பக்கமாக திரவம் வெளியேறிக் கலங்களை நனைத்து நாளப்பகுதியால் மீண்டும் குழாய்க்குள் சேருகிறது.

இப்படி வெளியேற்றப்படுகின்ற திரவம் அதிகளவாக இழையங்களில் தேங்கினால் அது வீக்கம் எனப்படுகிறது.

வவுனியாவில் சிலகாலத்துக்கு முன்பு மக்கள் தேங்கி நெருக்கடி ஏற்பட்டது நினைவிருக்கலாம். வன்னியின் ஏனைய பிரதேசங்களில் இருந்து வவுனியாவுக்கு மக்கள் திரண்டு வந்தார்கள். சிலர் யாழ்ப்பாணத்துக்கு கப்பலேறினார்கள். சிலர் கொழும்புக்கு ரயி

## வைத்திய சஞ்சீவி

லேறினர். கப்பல் பயணம் தடையுற்றதோ, கொழும்பு பயணம்தடையானதோ, கப்பல் கொள்ளாத அளவு சனம் வந்து சேர்ந்ததோ வவுனியாவில் சன வீக்கம்.

இப்படித்தான் நாடிப்பக்கத்தால் அதிகளவு திரவம் வெளியேறினால், நாளப்பக்கம் உள்ளே செல்வது தடையுற்றால்—வீக்கம் ஏற்படுகின்றது. திரவங்களைஅகற்றுவதற்கு இன்னுமொரு குழாய்—நிணநீர் குழாய்—இருக்கிறது. அது அடைபட்டாலும் திரவம்தேங்க அந்தப் பகுதி வீங்குகிறது.

பேரனில் வந்த வீக்கம் வலியோடு இருந்தது. அடி, உதை, வதை, கிருமித் தொற்றுகளில் முதலில் இழையங்கள் சேதமுறுகின்றன.

உடல் ஒரு சிறந்த நிர்வாக பாதுகாப்பு அமைப்பு.

ஒரு நகரத்தில் பெரிய குண்டு வெடிப்பு, அழிவுகள் ஏற்பட்டால் உஷார்படுத்தப்பட்ட படையினர்கள், நிவாரணப் பணியாளர் தீயணைப்புப் படையினர் எனப் பெருங்கூட்டமே அவ்விடத்துக்கு வந்து சேரும்; மருத்துவ உதவிகள் மேலதிக குண்டு செயலிழப்புகள், சுற்றிவளைப்புத் தேடுதல் என்பன இடம் பெறும். பின்னர் அழிவுகள் அகற்றப்பட்டு, மீள நிர்மாணிக்கப்பட்டு, சிலகாலத்தில் எல்லாம் சீராகும்.

இதுதான் உடலிலும் ஒரு காயம் அடி, உதை, போன்ற ஊறுகள் ஏற்படும்போது நிகழுகிறது. அந்த இடத்துக்கு இரத்தம் கூடுதலாக செல்லுகிறது. இரத்தக் குழாயிலுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் — வெண்குழியங்கள் —மற்றும் கரைந்த நிலையிலுள்ள கட்டுமானப் பொருள்கள், புரதங்கள், இரசாயன ஆயுதங்கள், பிற பொருளெதிரிகள் போன்றவை இரத்தக் குழாயிலிருந்து காய இடத்துக்குள் குழாய்ச் சுவரூடாக வெளியேறுகின்றன.

நிலத்தைப் போலவா உடல்? இல்லையே. அங்கு நீர்தான் ஊடகம். திரவம் வெளியேற வீங்குகிறது; நச்சுப்பதார்த்தங்களால் வலிக்கிறது. கட்டுமானப் பணிகள் நடக்கின்றன; இழையங்கள் புதுப்பிக்கப்படுகின்றன; சேதமுற்ற இழையங்கள் புல்டோசர் போன்ற தின் குழயங்களால் விழுங்கி அகற்றப்படுகின்றன. இறுதியில் வீக்கம் வற்ற உடல் பழைய நிலையை அடைகிறது. இது பேரனில் நிகழ்ந்தது.

தாத்தாவின் வீக்கம் வலியற்றது. வீங்கியுள்ள இடங்களில் விரல்களை ஊன்றி அழுத்தினால் அவர் அலறமாட்டார். அந்த இடத்தில் குழி விழும்.

இரத்தத்தை உந்தித் தள்ளி சுற்றியோடச் செய்கின்ற இதயத்தின் திறன் குறைகிறபோது நாளங்களில் இரத்தம் தேங்கும். நாளப்பகுதியில் பாய்பொருள் புகுவது தடையுறும்; திரவம் தேங்கும்.

இரத்தத்தில் சிலபுரதங்கள் இருக்கின்றன. அவைதான் பாய்பொருளை இழுத்து குழாய்களில் வைத்திருப்பவை. அவற்றுக்கு இரத்தத்தில் பஞ்சம் ஏற்படுகின்றபோது திரவம் குழாயிலிருந்து கூடுதலாக வெளியேறி இழையங்களில் தேங்கும்.

## நோயற்ற வாழ்வு - 9

புரதங்களை உற்பத்தி செய்து இரத்தத்தில் விடுவது ஈரல். ஈரல் வியாதிகளினால் உற்பத்தி தடையுற வீக்கம் ஏற்படும். சில சிறுநீரக வியாதிகளில் இரத்தப் புரதம் சிறுநீருடன் கூடுதலாக வெளியேறும். அந்தச் சிறுநீரை சூடாக்கினால் அவிந்த முட்டை வெள்ளைக்கரு போல பதார்த்தம் அடியில் படியும்.

இதைத் தவிர கள்தோன்றி பியர் தோன்றாக் காலத்து மூத்த குடிகாரர்களில்—உணவை மறந்து குடிப்பவர்களில்—புரதச்சத்து குறைவடைய வீக்கம் வருவதுண்டு. குழந்தைகளிலும் புரதச்சத்துக் குறைவுபாட்டால் உடல் வீங்குவதுண்டு. கர்ப்பிணிகளில் நாளங்களை வயிற்றிலுள்ள சிசு அழுத்துவதால் இரத்தம் கால்களில் தேங்கி வீங்கும்.

இப்படியான வீக்கங்கள் காலில்தான் அதிகம் வெளிக்காட்டப்படும்—நீர் பள்ளத்தை நோக்கி ஓடுவது போல்.

நின்றால் கால் வீக்கம். படுத்தால் குறையும். ஆனால் நாரிப்பகுதி வீங்கும். முகம் அதைக்கும்.

உள்ளே உள்ள உடல் உறுப்புக்களும் வீங்குவதுண்டு.

அ. கிருஷ்ணேந்திரன்
(யாழ். மருத்துவப் பீடம்)

அதை கண்டுபிடிக்கவே வைத்தியர் வயிற்றை அழுத்தி அழுத்திச் சோதிப்பார். ஈரல், மண்ணீரல் சாதாரணமாக வீங்குவதுண்டு. (மலேரியா ஒரு காரணம்)

ஆண்களின் விதை வீக்கம் உடனடியான சிகிச்சை தேவைப்படுகின்ற ஒன்று. அலட்சியம் கூடாது.

அதைத்தவிர கழுத்துங் கழலைகள், கட்டிகள், குடலிறக்கங்களையும் சிலர் வீக்கம் என்று சொல்வதுண்டு!

பேரனின் வீக்கத்துக்கும், வலிக்கும் காரணம் தேனீ என்று நினைக்கிறீர்களா? இல்லை. மட்டத்தேள் சாக்குக்குள் இருந்து தீட்டிவிட்டது. தேன்கூடு தப்பிவிட்டது. அதன் நஞ்சுதான் பேரனின் வலிக்கும், வீக்கத்துக்கும் காரணம்.

தாத்தாவின் கால் வீக்கம் ஏன்? தாத்தாவுக்கு வேறு குணங்குறிகளும் இருக்கின்றன. தாத்தா தமக்கு வயது போய்விட்டது என்கிறார். எண்ணெய் உருவுகிறார். அலட்சியப்படுத்துகிறார். ''காலா! என் 'வீங்கிய' காலருகே வாடா'' என்கிறார். அன்புத் தாத்தாவை வீடவேண்டாம். வைத்திய சாலைக்கு கொண்டு வாருங்கள்! ★

# 'உ' காட்

(V ஆம் பக்கத் தொடர்)

இப் பத்திரம் ஈடு செய்யப் போவதில்லை என்று என் உள்ளம் உணர்ந்த போதிலும் அதனை நிரப்பிக் கொடுத்து விட்டு காத்திருந்தேன்.

மாதம் மூன்று முன்னேறி சென்று விட்டது. இழப்புகளுக்கு ஏற்றவாறு கட்டட பொருள்கள் வழங்கப்படுவதாய் அறிந்து அங்கு சென்றவர்களில் நானும் ஒருவன்.

வீடுகளுக்கு ஏற்பட்ட இழப்புக்களுக்கு — ஏற்றவாறு கூரைச் சீற்றுகள், சீமெந்து என்பனவற்றை கொடுத்துக் கொண்டிருந்தனர் அதிகாரிகள். எனது வீட்டுக்கும் சீற், சீமெந்து கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் நின்ற எனக்கு உடனேயே, பேரதிர்ச்சியான தகவல் என் காதை எட்டியது.

''ஆயிரத்து ஐந்நூறு ரூபாய்க்கு மேற்பட்ட வருமானமுள்ள அரசாங்க உத்தியோகம் பாக்கிறவைக்கு கட்டடப் பொருள்கள் இல்லையாம்....''

எனக்குத்தலையேசுற்றியது

மாதம் லட்சரூபாய் வெளிநாட்டிலை உழைக்கிற குடும்பங்கள், கடைக்கார முதலாளிமார்கள், வட்டிக்குக் கொடுக்கும் வசதியானோர் அனைவரும் கட்டடப் பொருள்களை வாங்கி அவற்றைத் தமது வீடுகளுக்கு ஏற்றிச் செல்வதில் மும்முரமாய் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

வாடியமுகத்துடன் சென்ற என்னைக் கண்டதும் என் மனைவி ''என்னப்பா எங்களுக்கு தரேல்லையே...'' என்று கேட்டாள்.

பதில் கூற என்னால் முடியவில்லை ஊமையானேன்நான்

''என்னப்பா எங்களுக்கு தந்த சீற்று எத்தினை?...'' மகள் கேட்டாள். எட்டு வயது அவளுக்கு! எங்கடை நிலை புரியாத வயது! ''என்னப்பா எத்தினை சீற்று தந்தவை?'' மீண்டும் கேட்டாள்.

''...எங்களுக்குத்தரேல்லை பிள்ளை...'' என்றேன் நான்.

''ஏன் அப்பாதரேல்லை?'' அவள்மீண்டும் கேட்டாள்.

''எங்களுக்கு 'உ' காட் அதுதான்'' என்றேன்.

'உ'காட் எண்டால் என்ன?

''உத்தியோகம் பாக்கிறவைக்கு குடுக்கிற அட்டைதான் 'உ' காட்'' என்றேன் நான்.

......''அப்ப அப்பா ''உ காட்'' இல்லாட்டி சாமான் தந்திருப்பினமே...'' மகள் விடாப் பிடியாக கேட்டாள்.

''உத்தியோகம் புருசலட்ணம்'' என்றேன் நான்.

...''எங்களை மாதிரி ஏழைகள் உத்தியோகத்தின்ரை பெயராலை நசிங்கிப்போறம். அவ்வளவுதான் ...''

மனைவி விறுக்கென்று கூறி விட்டு உள்ளே சென்றாள்.

''லாண்ட்மாஸ்டர்'' வந்து பூமணி அக்காவின் வளவில் சீற்றுகளையும் சீமெந்தையும் பறித்து விட்டுப்போய்க் கொண்டிருந்தது.

கறுத்திருந்த வானம் திடீரென்று மழையைக் கொட்டியது. மழைத்துளிகள் வெள்ளமாக வீட்டின் உள்ளே ஒழுகியது. ஒழுகும் இடங்களை பார்த்து பானை சட்டிகளை வைத்தாள் மனைவி.

மழைத்துளி படாத மூலையில் என் குழந்தைகள் மூவரும் பதுங்கிக்கொண்டதை காண என் இதயமே வெடிக்கும் போலிருந்தது.

பூமணி அக்காவுக்குகொடுக்கப்பட்ட சீற்றுகள் மழையிலே நனைந்து கொண்டிருந்தன — நாளை அது இன்னொருவருக்கு விற்பனையாகப்போவதை உணராமல் அதுவும் மழையில் நனைந்து கொண்டிருந்தது.

உடைஞ்ச வீட்டைப்பார்க்க வயிறுபற்றி எரிந்தது எனக்கு.

நிவாரணப் பொருகள்கள் இன்றுபோகும்; நாளை வரும். ஆனால் என்ரை உத்தியோகம்; மாதம் சாப்பாடு போடுற உத்தியோகம் என்று என் மனம் உத்தியோகத்தை எண்ணிப் பெருமைப்பட்டது. (யாவும் கற்பனை

# விடைகள்

III ஆம் பக்கத்தில் 'சிறுவர் சுடர்' பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:—

## வார்த்தை விளையாட்டு


கதை, கசை, கவி, கடை, கரி, கதம், கபம், தசை, தவி, தடை, தரி, தம், விசை, விடை, விரி, விதம், பசை, பதவி, பகடை, படை, பரி, பரிதவி, பதம், மதம், மகம், மரி, மடை.

## முயன்று பாருங்கள்

1.




2.





## மூளைக்கு வேலை

1.

| | ஏப்.29 | ஏப்.30 | மே.1 | மே.2 | மே.3 |
|---|---|---|---|---|---|
| குழந்தை | பாபு | இட்டு | காஞ்சனா | மாலதி | ராஜா |
| அம்மா | வைதேகி | வசந்தா | பார்வதி | மீனா | அர்ச்சனா |
| அப்பா | சேகர் | கோபு | ரகு | பாலு | கணபதி |

2. முதலில் இரு சிறுவர்களும் அக்கரைக்குப் போனார்கள். ஒருவன் அங்கு இறங்கிக் கொள்ள மற்றவன் இக்கரைக்கு வந்தான். தொடர்ந்து இசைக் கலைஞர்களில் ஒருவர் அக்கரை சென்றார். அவர் அங்கு இறங்கியதும் அங்கு நின்ற சிறுவன் படகை அவரிடம் பெற்றுக் கொண்டு இக்கரைக்கு வந்து சேர்ந்தான். மீண்டும் சிறுவர்கள் இருவரும் அக்கரை சென்றனர். ஒருவன் அக்கரையில் இறங்க மற்றவன் இக்கரைக்கு மீண்டான். தொடர்ந்து இரண்டாவது இசைக் கலைஞர் அக்கரை சென்றார். இப்படியே மூன்றாவது இசைக் கலைஞரையும் சிறுவர்கள் பாதுகாப்பாக அக்கரை சேர்த்து இசை நிகழ்ச்சிக்கு அனுப்பி வைத்தனர்.

3.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டணி அமைக்காமல் எந்த ஒரு கட்சியும் இந்தியாவில் ஆட்சியை பிடிக்க முடியாத நிலை

## பாரதீய ஜனதா-அ. தி. மு. க. கூட்டு தமிழக அரசியலில் திடீர் திருப்பம்

1998 ல்பெப்ரவரி இறுதியில் அல்லது மார்ச் முற்பகுதியில் இந்தியாவில் தேர்தல் நடைபெற இருப்பதால் இந்திய அரசியல் நாளுக்கு நாள் சூடுபிடித்து வருகிறது.

அடுத்த தேர்தலில் எந்த ஒரு கட்சியும் தனித்து அரசாங்கம் அமைக்க முடியாது என்பது பெரும்பாலும் உறுதியாகி விட்டது.

இந்த நிலையில் கூட்டணி அமைப்பதில் பிரதான கட்சிகள் முழு மூச்சாக ஈடுபட்டு வருகின்றன.

### அரசியல் குத்துக்கரணங்களும் திடீர் கூட்டணிகளும்

எப்படியாவது ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்பதே பிரதான கட்சிகளான பாரதீய ஜனதா, காங்கிரஸ் மற்றும் ஐக்கிய முன்னணியின் நோக்கம்.

இதனால் அரசியல் குத்துக்கரணங்களும் எதிர்பாராத கூட்டணிகளும் நாளாந்த நிகழ்வுகளாகி விட்டன.

சமீபத்தில் இடம் பெற்ற அரசியல் நிகழ்வுகள் காங்கிரஸுக்கு சாதகமானதாக இல்லை.

எதிர்வரும் தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

பாரம்பரியத்தை உடைத்து புதிய கூட்டணிகளை உருவாக்கியது மூலம் இந்து தேசியவாதக் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சி காங்கிரஸ் கட்சியை குழப்பத்தில் ஆழ்த்திவிட்டிருக்கிறது.

### தமிழ் நாட்டில் தனித்துவிடப்பட்ட காங்கிரஸ்

தமிழ் நாட்டில் செல்வி ஜெயலலிதா தலைமையிலான அண்ணா தி.மு.க வும் பாரதீய ஜனதாவும் ஏற்படுத்திக் கொண்டுள்ள தேர்தல் கூட்டு, பாரதீய ஜனதா தென்மாநிலங்களில் ஆழமாகக் கால் ஊன்றுவதற்கான அறிகுறியாகக் கருதப்படுகிறது.

கடந்த காலங்களில் காங்கிரஸுடன் கூட்டணி அமைத்துக் கொண்டுவந்த அண்ணா தி.மு.க. இம்முறை காங்கிரஸைக் கைவிட்டது காங்கிரஸுக்கு பெரும் பின்னடைவாகும்.

அதே சமயம் தமிழ் நாட்டில் காங்கிரஸில் பிளவும் ஏற்பட்டுள்ளது.

# உலக உலா

ஏன்.பி.சீலன்

தமிழ் நாட்டில் ஏற்கனவே ஈடாட்டத்தில் இருந்து வரும் காங்கிரஸ் பலவீனமுற்றிருப்பதால் மேலும் பிளவுபட வாய்ப்புகள் இருந்து வருகின்றன.

வாழப்பாடி ராமமூர்த்தி காங்கிரஸில் இருந்து பிரிந்து ''தமிழ்நாடு மக்கள் காங்கிரஸ்'' என்ற பெயரில் புதிய கட்சி அமைத்துள்ளார்.

இத்தகைய அரசியல் மாற்றங்களினால் தமிழ் நாட்டில் காங்கிரஸ் தனித்து விடப்பட்டு விட்டது.

அத்துடன் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான கட்சிகளாகக் கருதப்படும் வை. கோபாலசாமியின் மறுமலர்ச்சி தி.மு.க., டாக்டர் ராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சி ஆகியனவையும் பாரதீய ஜனதா — அ.தி.மு.க. கூட்டணியில் சேர்ந்து கொண்டிருப்பது தி.மு.கவுக்கும் அதன் கூட்டணிக்கட்சிகளுக்கும் சவாலாகவே கருதப்படுகிறது.

புதிதாக கட்சி அமைத்துள்ள வாழப்பாடி ராமமூர்த்தியும் பாரதீய ஜனதா — அ.தி.மு.க. கூட்டணிக்கே ஆதரவு வழங்கி வருகிறார்.

### காங்கிரஸ் தப்புக்கணக்கு

ஜெயின் கமிஷன் அறிக்கையை வைத்து இந்தர் குமார் குஜ்ரால் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசைக்கவிழ்த்த காங்கிரஸுக்கு தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள புதிய தேர்தல்கூட்டு எதிர்பாராத ஒரு நிகழ்வாகும்.

ஜெயின் கமிஷனின் அறிக்கை, சோனியா காந்தியின் பிரசாரம் ஆகியவற்றைப் பயன்படுத்தி தேர்தலில் வெற்றி பெற்று விடலாம் என்று காங்கிரஸ் தப்புக் கணக்குப் போட்டுவிட்டது.

ஏனெனில் காங்கிரஸ் கட்சிக்காரர் நம்புவது போல ராஜீவ்காந்தி அனுதாபஅலை என்று எதுவுமே தற்பொழுது கிடையாது.

1991இல் முதலாம் கட்டத் தேர்தலின் பின்பு ராஜீவ் கொலை செய்யப்பட்டார். ஆனால் அதன் பின்னர் நடைபெற்ற இரண்டாம் கட்டத் தேர்தலில் இந்தியாவின் வடமாநிலங்களில் காங்கிரஸ் காரர்களின் அனுதாப பிரசாரம் பெரியஅளவில் எடு படவில்லை.

அதன் பின்னர் கர்நாடகத்திலும் ஆந்திராவிலும் நடையெற்ற சட்டமன்றத் தேர்தல்களில் காங்கிரஸ் படுதோல்வி அடைந்தது. தென்னகத்தில் ராஜீவ் அனுதாப அலை ஓய்ந்து விட்டது என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது.

ராஜீவ் கொலை செய்யப்பட்ட தமிழ்நாட்டில் 1996 இல் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் — அ. தி. மு. க. கூட்டணி படுதோல்வி அடைந்தது.

1984 ஆம் ஆண்டு இந்திரா காந்தி கொலை செய்யப்பட்ட பின்னர் நடைபெற்ற தேர்தலில் குறைந்த பெரும்பான்மையுடன் காங்கிரஸ் வெற்றி பெற்றது. அப்பொழுது எதிர்க்கட்சிகள் பிளவுபட்டிருந்ததே இதற்குக் காரணம்.

1989 இல் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் தோல்வி அடைந்ததுடன் எதிர்க்கட்சிகளின் செல்வாக்கு மக்கள் மத்தியில் பரவ ஆரம்பித்தது.



ஜெயலலிதா

1991 முதல் 1996 வரை பதவியில் இருந்த நரசிம்மராவ், இந்தியாவின் பொருளாதாரத் துறையில் பல முன்னேற்றகரமான நடவடிக்கைகளை எடுத்தாலும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் காரணமாக 110 வருடங்கள் பழைமைவாய்ந்த காங்கிரஸ் கட்சியின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தி விட்டார்.

### முடிவு எடுக்க முடியாது தடுமாறும் சோனியா

இப்படியான நிலையிலேயே சோனியாகாந்தியை தேர்தலில் நிறுத்த முயற்சிகள் முழுமூச்சாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் தமக்கு மக்கள் மத்தியில் உள்ள ஆதரவை எடைபோடமுடியாது சோனியா தடுமாறுகிறார். காங்கிரஸ் பலவீனமாக இருக்கும்வேளையில் அதன் தலைமைப் பதவியை ஏற்று தேர்தலில் தோல்வி அடைவதன் மூலம் தமது எதிர்காலத்தையும் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தையும் பாழாக்கிக் கொள்ள சோனியா விரும்பவில்லை.

அத்துடன் குஜ்ரால் தலைமையிலான ஐக்கியமுன்னணி அரசை வீழ்த்த வேண்டும் என்பதும் சோனியாவின் நோக்கம் அல்ல. ஜெயின் கமிஷன் அறிக்கையில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளவர்களைத் தண்டிக்க வேண்டும் என்றே சோனியா விரும்பினார்.

ஜெயின் கமிஷன் அறிக்கையை வைத்து அரசியலை குழப்பியடித்தது மூலம் தாம் நேரு குடும்பத்துக்கு விசுவாசமானவர்கள் என்று காட்டிக் கொள்ளவே சீதாராம் கேசரி உட்பட காங்கிரஸ் தலைவர்கள் பலரும் நினைத்தார்கள்.

ஆனால் இந்த அரசியல் நெருக்கடியை குஜ்ரால் கையாண்ட விதம் காங்கிரஸை சிக்கலில் மாட்டி வேண்டாத நேரத்தில் தேர்தல் ஒன்றை திணித்து விட்டது.

தற்போதைய நிலையில் காங்கிரஸ் தலைமைப் பதவியை சோனியா ஏற்றாலும் காங்கிரஸ் வெற்றி பெறும் என்று கூறமுடியாது.

ஏற்கனவே மேற்கு வங்காள காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்ட நெருக்கடியைத் தீர்த்து வைக்கும் முயற்சியில் சோனியா தோல்வி கண்டு விட்டார்.

இதில் தமது செல்வாக்கை பரீட்சித்துப் பார்க்க சோனியா முயன்றிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இதற்கிடையில் —

இதுவரை காலமும் கூட்டணி ஆட்சி முறையைக் கிண்டலடித்து, கேலி செய்து தமது கட்சி ஒன்றினால் மட்டுமே தனித்து நிலையான ஆட்சியைத்தரமுடியும் என்று கூறி வந்த காங்கிரஸ் இப்போது தனது 'தட்டை' மெள்ள மாற்றிக் கொண்டு, கூட்டணி அமைத்து ஆட்சியைப் பிடிக்கும் முயற்சியில் கூட்டணி அமைக்க வாய்ப்பான கட்சிகளைத் தேடி அலைகின்றது.

காங்கிரஸுக்குச் சார்பான கூட்டணியை அமைக்கும் ஏற்பாட்டில் முழு மும்முரமாக இருப்பவர், சர்ச்சைக்குரிய — பீஹார் முன்னாள் முதல்வர் — லாலு பிரசாத் யாதவ் தான்.

அவரது ராஷ்ட்ரீய ஜனதா தளம், கன்ஷிராமின் பகுஜன் சமாஜ் கட்சி, சீதாராம் கேசரி தலைமையிலான காங்கிரஸ் கட்சி, முன்னாள் பிரதமர் சந்திரசேகர் தலைமையிலான சமாஜவாதி ஜனதா ஆகிய கட்சிகள் இப்போது ஓரணியில் சேர்ந்துள்ளன.

கர்நாடகத்தின் முன்னாள் முதல்வர் ராமகிருஷ்ண ஹெக்டேயின் கட்சியும் இந்த அணியில் சேரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது தவிர ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா, முன்னாள் பிரதமர் சரண்சிங்கின் மகனான அஜித்சிங்கின் தலைமையில் உள்ள பாரதீய கிசான் காம்கர் கட்சி, குஜராத்தில் சங்கர்சிங் வகேலா தலைமையிலான ராஷ்ட்ரீய ஜனதா கட்சி ஆகியவையும் இந்தக்கூட்டணியில் சேருகின்றன.

இவ்வாறு பல உதிரிக் கட்சிகளின் தயவில் தேர்தலைச் சந்திக்கவேண்டிய நிலைக்கு காங்கிரஸ் தள்ளப்பட்டிருக்கின்றது.

மறுபுறத்தில் பதின்மூன்று கட்சிக் கூட்டணியான ஐக்கிய முன்னணியும் தனது கூட்டமைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மாநில மட்டங்களில் எடுத்து வருகின்றது.

'பல கட்சி கூட்டணியான ஐக்கிய முன்னணியினாலோ, பல கட்சிகளின் தயவில் தங்கியுள்ள காங்கிரஸினாலோ நிலையான ஆட்சியைத் தர முடியாது. பாரதீய ஜனதாவினால் மட்டுமே அதைத் தரமுடியும்' — என்று கூறிய பாரதீய ஜனதா கூட இன்று கூட்டணி என்ற தண்டவாளத்தில் ஏறி விட்டது. 'திறமையான பிரதமர்; நிலையான ஆட்சி' (Able Prime—Minister; Stable Govern—ment) என்ற அக்கட்சியின் தேர்தல் கோஷம் கூட்டணிக் கட்சிகளைத் தேடிப் பிடிக்கும் அலைச்சலில் அடிபட்டுப் போய் விட்டது.

எது எப்படி யென்றாலும்—

எந்தக் கட்சியும் தனித்து ஆட்சி அமைக்கக் கூடிய பெரும்பான்மையை தேர்தல் முடிவுகள் தராது என்பதும்—

கூட்டணி ஆட்சியைத்தேடி ஓடும் நிலைக்கே இந்தியக் கட்சிகள் தள்ளப்படும் என்பதும்—

இப்போதே ஓரளவுக்கு நிச்சயமாகிவிட்டது என்கின்றனர் பார்வையாளர்கள். எந்தக் கூட்டணி ஆட்சியமைக்கும் என்பதுதான் இப்போதுள்ள பிரச்சினையாகும். ★



---

கிரிமினல்களைத் தேர்தலில் நிறுத்த வேண்டாம் என்று இந்திய ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் கட்சிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தாம் கிரிமினல் குற்றவாளி அல்ல என்று ஒவ்வொரு வேட்பாளரும் பத்திரம் ஒன்றில் கையெழுத்திட்டு தமக்கு சமர்ப்பிக்கவேண்டும் என்று இந்தியாவின் பிரதம தேர்தல் ஆணையாளர் எம். எஸ். கில் அறிவித்துள்ளார்.

1996 ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற தேர்தலில் 13 ஆயிரத்து 952 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இவர்களில் ஆயிரத்து 500 பேர் கொலை, கற்பழிப்பு களவு மற்றும் கடத்தல் குற்றங்களில் குற்றம் சாட்டப்பட்டவர்கள்.

இந்தியாவில் இரண்டு வருடத்துக்குமேல் சிறையில் இருந்தவர்கள் எவரும் தேர்தலில் போட்டியிட முடியாது. ஆனால் தமக்கு வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்து கொண்டுள்ள ஒருவர் சிறையில் இருந்து கொண்டே தேர்தலில் போட்டியிடலாம்.

தற்போது கலைக்கப்பட்டிருக்கும் மக்களவை உறுப்பினர்களில் 40 பேர் களவு, பணம்பறிப்பு, கற்பழிப்பு, கொலைகளுக்காக குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்.

இவர்களில் பிரபல்யமானவர் பூலான் தேவி. 1981 ஆம் ஆண்டு 22 கிராமவாசிகளைக் கொலை செய்ததாக குற்றம்சாட்டப்பட்ட பூலான்தேவி 10 வருட காலம் விசாரணை இன்றி தடுத்துவைக்கப்பட்டு பின்னர் மன்னிப்பு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org